# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 063 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 14, புதன்கிழமை 28.01.2015


### வானிலை

மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள் 2 ஆண்டுகளாக இல்லை

யாழ்.மாவட்டத்தின் பல பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறவில்லை. அதனால் பல அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய அனுமதிகள் தன்னிச்சையாக வழங்கப்படுகின்றன. புதிய அரசால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர் யார் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் கூட்டங்கள் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது. பக்.21

## கோத்தபாயவின் சதி குறித்து விசாரணைகள் ஆரம்பம்!

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறினார். கோத்தபாய இன்னமும் ஆட்சிக் கவிழ்ப்பில் நம்பிக்கை கொண்டுள்ளார். பிரிகேடியர் ஒருவரின் வழிகாட்டலில் 400 இற்கும் அதிகமான ராணுவத்தினருக்கு வடக்கில் உள்ள இராணுவ முகாமில் பயிற்சி வழங்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார். பக்.02

# தனிக்குழு நியமிப்பு

### வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை ஆராய கூட்டமைப்பின் கோரிக்கையை அடுத்து அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜனவரி 28

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தனியான குழு ஒன்றை அரசு அமைக்கவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டம் நடைபெற்றது. அதன்முடிவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையே சந்திப்பொன்று நடந்தது. பக்.25

## ஐ.நாவுடன் கைகோர்த்து விசாரணை நடத்தப்படும்



### வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 28

"ஐ.நா. விசாரணை தலைக்கு மேல் தொங்குவதை இலங்கையின் புதிய அரசு விரும்பவில்லை" – என்று கூறிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதற்காக ஐ.நாவுடன் இணைந்து விசாரணை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

"போரின்போது இடம்பெற்றசம்பவங்கள்தொடர்பான உள்நாட்டு விசாரணைக்கு பக்.25

## முறைக்கும் நாடுகளை அணைப்பதற்கு முயற்சி

### ஐரோப்பாவில் இருந்து அமெரிக்கா செல்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜன. 28

ஜெனிவாத் தொடரில், இலங்கையை எதிர்த்த நாடுகளை சமரசப்படுத்தும் முயற்சியில் புதிய அரசு இறங்கியுள்ளது. அதற்காக தற்போது ஐரோப்பா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் இலங்கைக்கு நெருக்கடி மிகுந்ததாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப் பக்.25



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று சவூதி அரேபியா புறப்பட்டார். அப்போது அவரும் அவரது மனைவியும் இந்திய முறைப்படி கைகூப்பி விடைபெற்றனர். (ற)

## அரசியல் கைதிகளை சந்தித்தார் மாவை

### விவரம் திரட்டும் பணிகள் மும்முரமாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். திரட்டப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே இந்தச் சந்திப்பு பக்.25

## மூடப்பட்டது நொதேர்ன் பவர்

### இராணுவமும் வெளியேற்றம்

கழிவு ஒயில் பிரச்சினையை அடுத்து அதற்குக் காரணமானதெனக் கூறப்படும் நொதேர்ன்பவர்மின்உற்பத்திநிறுவனம் நேற்றுப் பிற்பகல் பொலிஸாரின் அனுசரணையுடன்நீதிமன்றப்பதிவாளரால்சீல் வைத்து மூடப்பட்டது. குறித்த நிறுவனத்தை மூடுமாறு மல்லாகம் நீதிவான் எஸ்.சதீஸ்கரன் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து குறித்த நிறுவனத்துக்குப் பொலிஸாரின் அனுசரணையுடன் சென்றநீதிமன்றப்பதிவாளர்மின்உற்பத்தி நிறுவனத்தை மூடியதோடு அலுவலகத்தில் நின்றிருந்த பணியாளர்கள், அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த ராணுவத்தினர் அனைவரையும் வெளியேற்றிவிட்டு அந்த வளாகத்தின் கேற்றை சீல் வைத்து மூடினார். வழக்கில் மனுதாரர்கள் சார்பில் நேற்றுஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம்,சட்டத்தரணிகளானஜெஜெயரூபன், பா.பார்த்தீபன், கே.சுகாஷ் ஆகியோரும், எதிர்மனுதாரர்களில் நொதேர்ன் பவர் சார்பில் சட்டத்தரணிகளான வசந்த பெர்னான்டோ, திருமதி சிவபாதம் ஆகியோரும் உத்துறு ஜனனி சார்பில் திருமதி தி.கஜப்பிரிஜாவும் முன்னிலையாகியிருந்தனர். (த–4) விரிவு பக்.02

## பஸ் கட்டணம் பெப்ரவரி முதல் குறைகின்றது

கொழும்பு.ஜன.28

பெப்ரவரி மாதம் முதல் தனியார் பஸ் கட்டணங்கள் 8 வீதத்தால் குறைக்கப்படவுள்ளன என்று தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் தனியார் பஸ் சங்கங்களுக்கு இடையே நேற்று கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சு அலுவலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், பஸ் கட்டணங்களை 8 வீதத்தால் குறைப்பதற்கு தனியார் பஸ் சங்கத்தினர் இணங்கினர். ஆயினும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பக்.25

## கள்ள மணல் ஏற்றிய டிராக்டர் மோதிச் சாவு

### வல்லிபுரக் கோயிலுக்கு அருகாமையில் குடும்பஸ்தர் தலை நசிந்து உயிரிழப்பு

வடமராட்சி, ஜன 28

களவாக மணல் ஏற்றி வந்த டிராக்டர் வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்கு அருகாமையில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தனை மோதித் தள்ளியதில் அவர் தலை நசியுண்டு சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் 12 மணியளவில் வல்லிபுர கோயிலுக்கு அருகாமையில் உள்ள முறாவில் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் இடம்பெற்றது.

குறித்தடிராக்டர்குடும்பஸ்தரைமோதித் தள்ளி விட்டு களவாக ஏற்றி வந்த மணலையும் பறித்து விட்டுத் தப்பி சென்று வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் மறைவான ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டபோது பக்.25

## மீண்டும் அத்துமீறல்

இலங்கைக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய ட்ரோலர் படகுகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளது மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். பக்.04



## வடக்கு, கிழக்கு ஆளுநர்கள் நேற்று பதவியேற்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 28

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் நேற்று திட்டமிட்டபடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாகப் பதவியேற்றனர். அவர்கள் உட்பட 6 மாகாண ஆளுநர்கள் நேற்று நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில், வைத்து அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி மைத்திரி பக்.25

செய்திகள்

# சுன்னாகம் மின் நிலையத்தை மூட நேற்று அதிரடி உத்தரவு

## அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று மல்லாகம் நீதிமன்று கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 28

சுன்னாகத்திலுள்ள நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையச் செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதனைவிடத் தண்ணீரில் ஒயில் கலப்பது தொடர்பான பிரச்சினை 2009, 2010 ஆம் ஆண்டுகளிலிருந்து தென்படத் தொடங்கிய போதும் சுற்றாடலையும், மக்களையும் பாதுகாக்கும் கடப்பாடு கொண்ட அரச திணைக்களங்கள் பலவற்றின் அதிகாரிகள் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்காமையானது மிகவும் கவலைக்குரிய விடயம் என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது.

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளை அண்மித்துள்ள கிணற்று நீருடன் கழிவு ஒயில் கலக்கும் விடயத்துக்குக் காரணமானதெனக் குற்றம் சுமத்தப்படும் சுன்னாகம் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தை மூடுமாறு கோரி 11 பேரால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது.

இதன் எதிர் மனுதாரர்களாக நொதேர்ன் பவர் நிறுவனம், இலங்கை மின்சார சபை, உத்துறு ஜனனி நிறுவனம் ஆகியோர் குறிப்பிடப்பட்டனர்.

நீதிவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் இந்த வழக்கின் கட்டளை அறிவிப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்று தனது உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வழக்கின் மனுதாரர்களைப் பொறுத்த வரையில் பொதுத் தொல்லை தொடர்பில் மன்று இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கவேண்டும் என்று கோரியுள்ளனர். எதிர்மனுதாரர்கள் சார்பில் இடைக்காலத் தடைக் கட்டளை தேவையில்லை என்று கோரியுள்ளனர்.

பொதுத் தொல்லையானது எதிர் மனுதாரர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது எந்த மனுதாரர்களின் செயற்பாடு பொதுத் தொல்லைக்கு ஏதுவாக அமைகின்றது? என்பது இரு தரப்பினராலும் வைக்கப்பட்ட சான்றுகள் சமர்ப்பணங்களை அவதானிக்கிறது. மனுதாரர்களைப் பொறுத்த வரை எதிர்மனுதாரர்கள் எரிபொருளினால் இயங்கும் மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்துவதனால் அதிலிருந்து வெளியேறும் கழிவுகள் நிலத்தில் சேர்ந்து நிலத்தடி நீருடன் கலக்கிறதாகவும், அவர்களது செயற்பாடு அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இல்லை எனவும், கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் கழிவு நீர், எண்ணெய்க் கசிவுகள் நிலத்தில் தேங்குவதாகவும் புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தொல்லைகள் தொடர்பான குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளில் பிரிவு 98 இன்படி பொதுத் தொல்லைகள் தொடர்பில் நீதிவான் நீதிமன்றங்களுக்குக் கட்டளை ஆக்குவதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை, பாடசாலைகளின் கிணறுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கம்பனி மிகக் குறைந்த மின்சாரத்தையே வழங்குவதனால் மின் உற்பத்தியை நிறுத்துமாறு மன்று கட்டளையிட்டாலும் யாழ்.மாவட்டத்துக்கான மின் வழங்கலில் பாதிப்பு ஏற்படாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண் வளம், நீர் வளம் பாதிப்பினால் அவற்றை மூலாதாரமாக நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிப்பதோடு கால்நடைகள் இறக்கும் நிலையும் உருவாகும். அத்தகைய தண்ணீரைப் பருகினால் மனித உயிர்களுக்கு குணப்படுத்த முடியாத நோய்கள் உருவாகும்.

இருதரப்பின்வேண்டுகோளுக்கு அமைய சுன்னாகம் மின் உற்பத்திநிலையத்தில்தனித்தனியாக மின் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் கழிவு அகற்றும் செயல்முறை என்பன பார்வையிடப்பட்டன. ஆனால் நொதேர்ன் பவர் இயந்திரங்களுக்கு இடையே எண்ணெய்க் கசிவுகள் காணப்படுவதுடன் அந்த மின் நிலையத்தைச் சுற்றி பல இடங்களில் அவை காணப்படுகின்றன. வாய்க்கால்கள் பல அமைக்கப்பட்டு கழிவு எண்ணெய் நிலத்தில் பரவ விடப்பட்டுள்ளது. எண்ணெய்க் கசிவுகள் காணப்படுகின்றன. அவை சேமிக்கப்படும் தொட்டிகள் பாதுகாப்பற்ற நிலையில் திறந்து காணப்படுகின்றன. கழிவு முகாமைத்துவம் பின்பற்றப்படவில்லை.

ஆவணங்களின்படி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர், நொதேர்ன் பவர் நிறுவனம் 2009, 2010, 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டபோது வெளியேற்றப்பட்ட கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் நிலத்துக்குக் கீழே செலுத்தப்பட்டது. கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதிய கண்காணிப்பில் 75 வீதமான கழிவு ஒயில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன.

ஒயில் கழிவு தேக்கி வைக்கப்பட்டு அந்த இடத்துக்குச் செல்லும் வாய்க்கால்கள் நொதேர்ன் பவரிலிருந்தே வெளிவருகின்றன. அந்த வாய்க்கால்கள் ஏன் அமைக்கப்பட்டன? எண்ணெய்க் கழிவுகள் நிலத்துக்கு அனுப்பப்பட்டதையே அவை புலப்படுத்துகின்றன. வாய்க்காலில் எண்ணெய்ப் படிவுகளும் காணப்படுகின்றன. அது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பாதுகாப்பு உரிமத்தில் கூறியவற்றை மீறுகிறது என்று தெரிவித்துள்ளார்.

'தீர்ப்பு ஒன்றில் நீதியரசர் டபிள்யு. எல். றஞ்சித் சில்வா அவர்கள், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒரு சர்வதேசக் கடமை. ஏனெனில் சுற்றுச்சூழல் பாதிப்பு இந்தத் தலைமுறையை மட்டுமல்ல எதிர்காலத் தலைமுறைக்கும் தொடரும். அத்துடன் ஆரோக்கியமான சுற்றுச் சூழல் உரிமையானது பிறக்காத பிள்ளைகளுக்குமான உரிமை. சுற்றுச் சூழல் இடர் பாதிப்பானது அது குறித்து முறையிடும் ஒரு தனிப்பட்ட நபரை மட்டும் பாதிப்பதல்ல. அயலில் வசிப்போரை மட்டுமன்றிக் கடைசியில் முழு உலகத்தையும் பாதிக்கும்.' என்று கூறியதனையும் நீதிவான் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிலத்தடி நீர் மாசுற நொதேர்ன் பவரின் கழிவுகள் முற்று முழுதாகக் காரணம் என்று மன்றினால் கூறமுடியாதிருப்பினும் அதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளதாக முகத்தோற்றமளவிலான சான்றுகள் காட்டப்படுகின்றன. அதனால் அதனைத் தற்காலிகமாக மூட உத்தரவிடுகின்றது.

மாசுபடுதல் தொடர்பில் சுதந்திர ஆணைக்குழுவை அமைத்து அதனூடாக தகுதி வாய்ந்த நிறுவனங்களின் உதவியுடன் விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகளை விரைந்து மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறு வழக்கின் இரு தரப்பினருக்கும் மன்று உத்தரவிடுகிறது. பொதுத் தொல்லையால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உடனடியாகப் பார்வையிட்டு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், ஏற்பட இருக்கும் பாதிப்புக்கள் தொடர்பில் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் பிரதேச செயலர்களுக்கு மன்று கட்டளையிடுகிறது.

பொதுமக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்குமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபைக்கு உத்தரவிடுகிறது. மக்களைப் பாதுகாக்க மருத்துவ, சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்றுநோய் தடுப்புப் பிரிவினருக்கு மன்று கட்டளையிடுகிறது.

சுற்றாடல் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அந்தச் சபைக்கு மன்று பணிக்கிறது என்று நீதிவான் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (த–4)

## வைத்தியசாலை தொண்டருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணிபுரிந்த 127 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அவர்களது சுயவிபரங்கள் உள்ளிட்ட ஆவணங்களைச் சுகாதார அமைச்சிலிருந்து வந்த குழு நேற்றுப் பெற்றுச் சென்றுள்ளதாக வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

இரண்டு பேர் கொண்ட குழு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்து நியமனம் செய்யவேண்டியுள்ளவர்களின் ஆவணங்களை ஒவ்வொருவரிடமும் நேரடியாகப் பெற்றுச் சென்றுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த வருடம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். அதனால் அவர்களில் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் அரசியல் ரீதியாக நியமனம் வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு நியமனம் வழங்கப்படாமல் இருந்து வந்த நிலையில் வறுமை காரணமாக சுமார் 40 சுகாதாரத் தொண்டர்கள் பணியிலிருந்து விலகியிருந்தனர்.

ஏனையவர்கள் ஒன்றுகூடி கொழும்பு சுகாதார அமைச்சுக்கு நேரடியாகச் சென்று நேற்று முன்தினம் கலந்துரையாடியிருந்தனர். அவர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர். (த–4)

## கோத்தாவின் சதி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 28

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால் வடக்கில் குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களைத் தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றது. புலிகள் தாக்குதல் நடத்தியதாக இதனைத் திசை திருப்பி நாட்டில் குழப்ப நிலைமையை ஏற்படுத்தி, அதனூடாக ஆட்சியைக்கைப்பற்ற கோத்தபாய முயற்சி செய்து வருகின்றார். இதற்காக வடக்கில் விசேட பயிற்சி முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

இராணுவத்தின் ஒரு தரப்பைப் பயன்படுத்தி அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய சதித் திட்டம் தீட்டியுள்ளார். இந்தச் சதித் திட்டம் தொடர்பான ஆவணங்கள் தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

கோத்தபாய இன்னமும் ஆட்சிக் கவிழ்ப்பில் நம்பிக்கை கொண்டுள்ளார். பிரிகேடியர் ஒருவரின் வழிகாட்டலில் 400 இற்கும் அதிகமான ராணுவத்தினருக்கு வடக்கில் உள்ள இராணுவம் முகாம் ஒன்றில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

வடக்கில் முகாம்களின் மீது தாக்குதல் நடத்திப் புலிகள் மீண்டும் தலையெடுத்துவிட்டதாகக்குழப்ப நிலை ஒன்றை ஒருவாக்குவதே இவர்களின்நோக்கம். – என்றார் ராஜித. (த–5)

# ஜனரஞ்சகம்

## நான் குடிப்பதில்லை



ஹைதராபாத்தில் உள்ள நட்சத்திர விடுதிக்கு தோழிகளுடன் சென்ற நடிகை அஞ்சலி, அங்கு 'பப்பில்' மது அருந்தி ரகளையில் ஈடுபட்டதாகவும், அவர் மீது மோதிய ஓர் இளைஞனைஅடிக்க முற்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்தச் செய்தி ஆந்திராவில் உள்ளூர் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பானது. தகவல் அறிந்து பொலிஸார் அந்த பப்புக்கு விரைந்து அஞ்சலியை அவர்கள் எச்சரித்தார்களாம்.

'என்னை பற்றி வதந்திகள் பரவி உள்ளன. நான் வெளிநாட்டுக்குச் சென்று திரைப்படங்களில் நடித்து விட்டு இரு தினங்களுக்கு முன்புதான் ஹைதராபாத் திரும்பினேன். இரவு 9 மணிக்கு நண்பர்கள் சிலருடன் விடுதிக்குச் சாப்பிடச் சென்றேன்.

அப்போது சிலர் என்னை சூழ்ந்து கொண்டு ஒளிப்படம் எடுக்க வேண்டும் என்றார்கள். அவர்களிடம் தனிப்பட்ட முறையில் இங்கு வந்து இருக்கிறேன். சினிமா வேலையாக வரவில்லை. எனவே ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று கூறி மறுத்தேன். அத்துடன் ஓர் இளைஞர் போதையில் தொந்தரவு செய்வது போன்றும் நடந்து கொண்டார். அங்கு சலசலப்பு ஏற்பட்டது. இது எப்படியோ அறிந்து கொண்ட பொலிஸாரும் வந்து விட்டனர். அவர்களிடம் நடந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. விடுதி நிர்வாகத்தினர் என்னிடம் வருத்தம் தெரிவித்தனர்' நடந்தது இதுதான் என்கின்றார் அஞ்சலி.

## ரிலாக்ஸ் ப்ளீஸ்



**ஆண்கள் எப்பவுமே கூந்தல் நீளமா இருக்குற பெண்ணைத்தான் தேடுறாங்க...**

**ஆனால் கிடைப்பதென்னவோ வாய் நீளமாக இருக்கும் பெண்தான்...!!!**




## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



ஒரு வயதானவர். சலூனுக்குச் சென்றார். அவர் தலையில் இருந்த 8 முடியையும் பார்த்த சலூன்காரருக்கு கோவம் வந்து விட்டது. 'முடியை எண்ணனுமா? வெட்டனுமா?' என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர், 'எட்டு முடிக்கும் கலர் அடிக்கனும் (டை)' என்றார்.






## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் தாமதப்படும். எந்த ஒரு வேலையையும் அலைந்து செய்து முடிக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த பண தட்டுப்பாடு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு குறையும்.

**மிதுனம்**: குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். அடுத்தவர் செயல்கள் உங்கள் கோபத்தைத் தூண்டுவதாக இருக்கலாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்**: இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். கௌரவம் உயரும். மற்றவர்களிடம் நன்மதிப்பு உண்டாகும். தடைகள் விலகி முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாகப் பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சினை தலை தூக்கும்.

**கன்னி**: உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. அனுபவபூர்வமான அறிவைக் கொண்டு எதையும் சாதிப்பீர்கள். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**துலாம்**: முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். காரிய வெற்றி உண்டாகும். காரியத்தடை தாமதம் நீங்கும். வழக்குவிவகாரங்கள்கட்டுப்பாட்டிற்குள்இருக்கும்.

**விருச்சிகம்**: எதிர்ப்புகள் விலகும். நினைத்த காரியத்தைச் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வீண்கவலை விலகும். அடுத்தவர் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

**தனுசு**: வியாபார போட்டிகள் குறையும். எல்லா துறைகளிலும் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள்.

**மகரம்**: சிலருக்கு புத்திரபாக்கியம் உண்டாகும். கணவன்-மனைவி ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கும்பம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெறுவார்கள்.

**மீனம்**: பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். அடுத்தவர்களின் வேலைக்காக வீணாக அலைய நேரிடும். மனோ தைரியம் அதிகரிக்கும்.

# செய்திகள்

# இந்திய ட்ரோலர்கள் மீண்டும் அத்துமீறல்

## 100 இக்கும் மேற்பட்ட படகுகள் தினமும் படையெடுத்து வருகை



யாழ்ப்பாணம்.ஜன.28

இலங்கைக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய ட்ரோலர் படகுகளின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை இலங்கைக் கடற்படையினர் நிறுத்தியுள்ளதால் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட ட்ரோலர் படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிக்கடல்வளத்தைஅழித்துவருவதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக இந்திய மீனவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஏற்கனவே கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பறி முதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிப்பதற்கும் இலங்கை அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்திய மீனவர்கள் அச்சமின்றி இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

கச்சதீவு வழியாக இலங்கைக் கடற்பரப்பின் எழுவைதீவு, தலைமன்னார், நெடுந்தீவுப் பகுதிக் கடற்பரப்புக்களில் இந்திய ட்ரோலர்கள் தினமும் வந்து போவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாம்பன், இராமேஸ்வரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான ட்ரோலர் படகுகள் கச்சதீவை நோக்கிப் ப்டை எடுக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த வாரம் நூற்றுக்கணக்கான படகுகளில் கச்சதீவுக்கு வந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக மாதகல் கடற்பரப்புக்கு அண்மித்த எழுவைதீவுக் கடற் பரப்பில் நூற்றுக்கணக்கான இந்திய ட்ரோலர் படகுகள் வந்ததை மீனவர்கள் நேரடியாகப் பார்த்துள்ளனர்.

ப1

எனினும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகளைக் கண்டும் காணாமல் விடுமாறு புதிய அரசு உத்தரவு வழங்கியுள்ளது என இலங்கைக் கடற்படையினர் தமக்கு தெரிவித்துள்ளதாக மாதகல் கடற்றொழில் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை இலங்கைக் கடற்படையினர் கண்காணிக்காமல் விட்டுள்ளதால் எழுவைதீவுக் கடற்பரப்புக்கு அண்மித்த பகுதியில் மாதகல் கடற்பரப்பில் இருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் வருகை அதிகரித்துள்ளது.

மாதகலில் இருந்து 160 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடிக்கச் செல்லும் 400 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரோலர் படகுகள் தினமும் வந்து போவதை அவதானித்துள்ளதாகவும், இவற்றின் வருகையால் தமது பகுதி மீனவர்களின் வலைகள், மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடம் கலந்துரையாடுவதற்கு மீனவர் சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இது குறித்து கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ண குலசூரியவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இந்திய மீனவர்களை கைது செய்ய வேண்டாம் என்ற உத்தரவு எதையும் கடற்படையினருக்கு தாம் பிறப்பிக்கவில்லை. தொடர்ந்து கண்காணித்து வருவதாகத் தெரிவித்தார்.(த-14)

# தற்காலிக பதிவாளர்களுக்கு நேற்று நிரந்தர நியமனங்கள்



யாழ்ப்பாணம்.ஜன.28

யாழ்.மாவட்டத்தில் தற்காலிகமாகப் பணியாற்றிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர்கள் 8 பேருக்கு நேற்று நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

கடந்த காலங்களில் யாழ் மாவட்டத்தில் தற்காலிகமாகப் பணியாற்றி வந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களுக்கான நியமனம் யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதற்கு அமையத் தெல்லிப்பழை, நாவற்குழி, சண்டிலிப்பாய், மயிலிட்டி, வரணி, கொக்குவில், கோண்டாவில் மற்றும் மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றுவதற்கெனப் பதிவாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இந்த நியமனக் கடிதங்களை வழங்கினார். இதில் வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் ஆனந்தி மற்றும் மாவட்ட மேலதிகப் பதிவாளர் பிரபாகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-14)

# மகேஸ்வரி நிதியத்தின் மணல் அகழ்வு விடயம் ஜனாதிபதி கவனத்துக்கு

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

வடமராட்சி, ஜன. 28

மகேஸ்வரி நிதியத்தின் மணல் அகழ்வு தொடர்பில் புதிய அரசு கவனமெடுத்து, நடவடிக்கை எடுத்து மணல் அகழ்தல் தடுக்கப்பட்டு அதற்குரிய அதிகாரங்கள் குறித்த பகுதி பிரதேச செயலாளருக்கோ அல்லது அந்த மக்களுக்கோ பயன்படும் வகையில் மாற்றப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கும் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வரத்தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதி அளித்திருக்கிறார்.

பொலிஸாரின் தடையுத்தரவை மீறி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மணல் அகழ்வு நடவடிக்கைக்கு எதிராகப் பொதுமக்கள் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையின் கலந்துகொண்டமை தொடர்பில் உதயனுக்குக் கருத்து கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கரவெட்டியில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டிருந்தபோது எனக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நாகர்கோவிலில் மக்கள் மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதாகவும், ஒரு பொதுமகன் மகேஸ்வரி நிதியத்தினரால் தாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நான் உடனடியாகக் குறித்த இடத்துக்கு விரைந்தபோது பொது மக்கள் பலர் அந்தப் பகுதியில் நின்றனர். அங்கு பொலிஸாரும் நிறுத்தப்பட்டிருந்தனர். அப்போது அங்கு நின்ற பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த நிதியத்துக்கு மணல் அகழ அனுமதி இருப்பதாக அனுமதிப் பத்திரத்தைக் காண்பித்தார். அந்த அனுமதி பத்திரம் முறையாக எடுக்கப்பட்டதா என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்று நான் கூறினேன்.

அவர்களுக்கு மணலைக் கொண்டு செல்வதற்குரிய அனுமதி இல்லை எனத் தெரிய வந்தது. நான் அதனைப் பயன்படுத்திக் குறித்த நடவடிக்கையை தற்காலிகமாக தடுக்கவேண்டும் என அரச அதிபர் உட்பட அதிகாரிகளை கோரினேன். ஏற்கனவே இது தொடர்பில் நீதிமன்ற வழக்கு ஒன்றும் நடந்து வருகிறது.

மணல் அகழ்ந்து அடிக்கப்பட்ட பணத்தை அந்தப் பகுதிப் பிரதேச சபைக்கு வழங்க வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவுமிருக்கிறது. இதே நேரத்தில் தொடர்ந்து மணல் அகழ்வதால் அப்பகுதி மக்கள் கூறுவதைப் போல கடல் நீர் அந்தப் பகுதிக்குள் புகும் அபாயம் இருக்கிறது.

இவர்கள் மண் அகழ்வதால் அப்பகுதி மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படபோவதில்லை. எனவே அந்த மணல் அகழ்வதற்கான அதிகாரத்தை பிரதேச செயலகத்திற்கு வழங்க வேண்டும்.

இதுதொடர்பில் கனியவளப்பணிப்பாளருடன் கதைக்கவுள்ளேன். அவர்கள் வைத்திருக்கும் அனுமதி பத்திரம் முறையாக வழங்கப்பட்டதா என ஆராயவிருக்கிறேன். புதிய அரசின் கவனத்திற்கும் இதனைக் கொண்டு வந்து உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (த-109)

# ஆதன வரி செலுத்துக

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தமது ஆதனவரியை எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாகச் செலுத்தி வரிக்கழிவைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நானாவித அறிவித்தல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு அமைவாக 10 வீத வரிக்கழிவைப் பெறுவதற்கான கால எல்லை, இம்மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# நுணாவில் விபத்தில் இரண்டு பேர் காயம்

தென்மராட்சி,ஜன.28

வீதியில் சென்ற சைக்கிளை வேகமாக வந்த வாகனம் மோதியதில் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு, கை முறிந்த நிலையில் காணப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.



விபத்தில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த பாலசிங்கம் சுரேஸ் (வயது-46), உரும்பிராயைச் சேர்ந்த திலகேஸ்வரன் கஜேந்திரன் (வயது-33)ஆகியோரே காயமடைந்தனர். பின்னர் சுரேஸ் யாழ். போதனா வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லப் பட்டார். (த-9)

# குடிதண்ணீர் வழங்க தாங்கிகள் இல்லை

## கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

கழிவு ஒயிலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு 450 தண்ணீர் தாங்கிகள் தேவையாக உள்ளபோதும், இதுவரை 200 தண்ணீர் தாங்கிகளே வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பிரதேசத்தில் இயங்கிய மின் உற்பத்தி நிறுவனங்களால் வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில் நிலத்தினுள் விடப்பட்டது. இதன் காரணமாக உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கழிவு ஒயில் கலந்த குடிதண்ணீரை எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. இதற்காக இடர்முகாமைத்துவ அமைச்சினால் 170 குடிதண்ணீர் தாங்கிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் தொடர்ச்சியாக பல இடங்களிலும் புதிதாக கழிவு ஒயில் கலப்பு இனங்காணப்பட்டு வருகின்றது. இதுவரை 42 பாடசாலைகள் 2 வைத்திய சாலைகள் என்பன இதனுள் அடங்குகின்றன. இவற்றுக்கு உடனடியாகக் குடிதண்ணீர் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் 450 குடிதண்ணீர் தாங்கிகள் தேவைப்படுவதாகப் பாதிக்கப்பட்ட இரண்டு பிரதேச செயலகத்தாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தொடர்பில் தற்போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. சரியாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் மாத்திரமே குடிதண்ணீர் தாங்கிகள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(த-5)

# கோழி இறைச்சி விற்கும் நிலையங்களின் மீது வரி

வலி.தென்மேற்கு, ஜன. 28

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் வருமானத்தையும் அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு வீடுகளில், கோழிப் பண்ணைகளில் இடம்பெற்று வரும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்கள் மீது வரியை அறவிடுமாறு தெரிவித்துள்ள எதிர்க்கட்சி உறுப்பினர் அன்ரன் ஜோன்சன் மேற்படி வியாபாரிகள் குறைந்த செலவில் கூடுதலான வருமானத்தைப் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.



வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பொதுச் சந்தையிலுள்ள கோழி இறைச்சிக் கடைகள் வருடாவருடம் பல லட்சம் ரூபாவுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் வீடுகளில் இடம்பெறும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்கள் மீது நூற்றுக்கணக்கில் மட்டும் வரி அறவிடப்படுகின்றது. சில நிலையங்கள் மீது வரி அறவிடப்படுவதுமில்லை.

எமது பிரதேசத்தில் உள்ள ஏழு பொதுச் சந்தைகளில் முக்கிய சந்தைகளில் மட்டும் தான் கோழி இறைச்சிக் கடைகள் இயங்கி வருகின்றன. அதே நேரம் எமது பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் வீடுவீடாக போட்டி போட்டியாக கோழி இறைச்சி விற்பனை இடம்பெற்று வருகின்றன.

சந்தைகளில் உள்ள கோழி இறைச்சிக்கடைகள் ஒவ்வொன்றும் வருடா வருடம் பல லட்சம் ரூபாவுக்கு குத்தகைக்கு விடப்படும் அதேநேரம் அங்கு வியாபாரமும் மந்தமாகத்தான் இடம்பெறுகின்றது. குறைந்த வரியுடனும் வரிசெலுத்தாமலும் வீடுகளில் இடம்பெறும் கோழி இறைச்சி நிலையங்களில் நாளாந்தம் பெருந்தொகையான கோழி இறைச்சி விற்பனையாகின்றது. இதனால் லட்சக் கணக்கான ரூபாவை வரியாகச் செலுத்தி சந்தைகளில் வியாபாரம் செய்பவர்கள் வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, சபையின் வருமானத்தைக் கருத்தில் கொண்டு தனியார் கோழிவிற்பனை நிலையங்கள் மீது கூடுதலான வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர் தெரிவித்துள்ளார். (த-115)

# வீமன்கல் பாடசாலை மூடப்படும் அபாயம்

வவுனியா, ஜன. 28

வவுனியா வீமன்கல் அ.த.க பாடசாலையை நடத்துவதில் இடர்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலை நிர்வாகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா வீமன்கல் பாடசாலை கடந்த இரண்டு வருடங்களாக இயங்கி வந்தது. இந்தப் பாடசாலையில் 6 மாணவர்கள் கற்று வந்தனர்.

இந்தப் பாடசாலையில் தொடர்ச்சியாகத் திருட்டுக்கள் இடம்பெற்றதுடன் இனம் தெரியாதோரின் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டன.

இது குறித்துத் தீர்வு காணப் பொலிஸாரைப் அணுகியபோது, பாடசாலை கணினிகள் உட்பட பெறுமதியான பொருள்களை வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு நகர்த்தும்படி பொலிஸார் கூறினர்.

இதனை அடுத்து அங்கு பயின்ற மாணவர்களைப் பெற்றோர் நகர்ப்புறபாடசாலைகளில் இணைக்கவுள்ளதாகக் கூறியுள்ளனர்.

மாணவர்கள் இல்லாத நிலையில் எவ்வாறு பாடசாலையை நடத்துவது என்று பாடசாலை நிர்வாகத்தினர் திண்டாட்டத்தில் உள்ளனர்.

பாடசாலையில் மாணவர்கள் வரவை உறுதிப்படுத்தவும், உரிய வசதிகளை வீமன்கல் பாடசாலைக்கு ஏற்படுத்தவும் நடவடிக்கைஎடுக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# பார்வை தெரியாதவரை தாக்கியோர் பிணையில்

யாழ்ப்பாணம், ஜன. 28

கண் தெரியாத அரச உத்தியோகத்தரை அவரது வீட்டில் வைத்து 3 பேர் அடித்து அட்டகாசம் செய்துள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த 3 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தில் வசிக்கும் கண்தெரியாத பிரதேச செயலகத்தில் பணி புரியும் குறித்த குடும்பத்தினருடன் அந்தக் குழுவினர் தேவையற்றவிதத்தில் முரண்பட்டுள்ளனர்.

அவரது மனைவியும் அரச உத்தியோகத்தர். அவ்வாறிருந்தும் அவரது வீட்டு வாசலில் வைத்துத் தாக்கியதோடு வீட்டுக்குள் சென்றும் தாக்க முற்பட்டுள்ளனர். கொக்குவில் குளக்கரை ஒழுங்கையைச் சேர்ந்தவர்களே அவ்வாறு நடந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அவர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். பொது இடத்தில் நின்று மது அருந்தியுள்ளனர். அத்துமீறி வீடு புகுந்துள்ளனர். கண் தெரியாத அரச உத்தியோகத்தரைத் தாக்கியுள்ளனர். அவருடன் மாத்திரமல்லாது அவரது குடும்பத்தினருடனும் முரண்பட்டுள்ளனர். இதனையடுத்து அந்த 3 பேரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். ஆனால் அந்த 3 பேரும் பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருடனும் சண்டித்தனம் புரிந்துள்ளனர்.

இதனையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். யாழ். நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்கள் தலா 2 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு எதிர்வரும் மார்ச் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த-4)

# நூற்றாண்டு பழைமையான கேணியை புனரமைக்குக

யாழ்ப்பாணம், ஜன. 28

நவாலி கலைளயோடை கண்ணகை அம்மன் ஆலயத்தின் நூற்றாண்டு பழைமைவாய்ந்த கண்ணகை அம்மன் கேணியை மீளப் புனரமைப்புச் செய்து பாதுகாக்க வேண்டும் என கலைளயோடை கண்ணகை அம்மன் ஆலய பரம்பரை அறங்காவலரும், ஆலய பிரதம குருவுமான சிவத்திரு.கந்தையா நாகேந்திரம் கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வரலாற்றுச் சிறப்புமிக்கதும் பல நூற்றாண்டுவரலாற்றைக்கொண்டதுமான நவாலி கலைளயோடை கண்ணகை அம்மன் ஆலயம் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள நூற்றாண்டுபழைமைவாய்ந்தகேணி புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது.

எனவே, இதனை புனரமைக்க அந்தப் பகுதி மக்கள் முன் வர வேண்டும்-என்றார். (த-50)

# கிளிநொச்சி-கொழும்பு ரயிலில் தமிழ்க் கொலை

யாழ்ப்பாணம், ஜன. 28

கிளிநொச்சியில்இருந்துகொழும்புக்கான சேவையில் ஈடுபடும் ரயிலில் பொருத் தப்பட்டுள்ள தமிழ்ப் பெயர்ப் பலகைகள் எழுத்துப் பிழை களுடன் உள்ளமை தொடர்பில் பயணிகள் விசனம் தெரிவித் துள்ளனர்.

ரயிலில் ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்கள், மலசல கூடப்பகுதி, எச்சரிக்கைப் பலகை மற்றும் சேவை விவரம் என்பன மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளபோதும், தமிழ் மொழியிலான வசனங்கள் எழுத்துப் பிழைகளுடன் பொறிக்கப்பட்டுள்ளன.







பாடசாலை மாணவர்கள் அதிகம் ரயில்களை ஆர்வமாகப் பார்வையிட்டு வரும் நிலையில் தமிழ் மொழிப் பெயர்ப்பலகைகள் எழுத்துப் பிழைகளுடன் இருப்பது குறித்து அவர்கள் தமது ஆசிரியர்களிடம் முறையிடுகின்றனர்.

எனவே, இந்த எழுத்துப்பிழைகளை உடன் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-14)

# செய்திகள்

## தென்மராட்சியில் வசதிகளற்ற முன்பள்ளிகளுக்குக் கற்றல் உபகரணங்கள்

### தமது சொந்த நிதியில் வழுங்கினார் சரவணபவன் எம்.பி.









யாழ்ப்பாணம், ஜன.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தமது சொந்த நிதியில் இருந்து முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட, அடிப்படை வசதிகள் குறைந்த முன்பள்ளிகளுக்கு நேரில் சென்று அங்கு நிலவும் குறைகளைக் கேட்டறிந்ததுடன், மாணவர்களுக்கும் முன்பள்ளிகளுக்குமான கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

இதனடிப்படையில் நாவற்குழி சித்திவிநாயகர் பாலர் பாடசாலை, .நுணாவில் அம்பாள் முன்பள்ளி, புத்தூர்ச் சந்தி நளினி முன்பள்ளி, கொடிகாமம் மத்தி முன்பள்ளி, கொடிகாமம் அன்னை திரேசா முன்பள்ளி, கொடிகாமம் ஞான சூரியன் முன்பள்ளி ஆகியவற்றுக்கு கற்றல் உபகரணங்களை அவர் வழங்கினார். (வ)

## காணி வளம் பாதுகாத்தல் அனைவரினதும் பொறுப்பு

### மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் அஸீஸ்

ஏறாவூர், ஜன, 28

காணி வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட முக்கியம் வாய்ந்த வளம். இந்த வளம் சனத்தொகை அதிகரிப்பைப் போலப் பெருக முடியாத வளமாக உள்ளதால் இதனைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்பும் ஆகும் என்று தெரிவித்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் அப்துல் அஸீஸ்.

ஏறாவூர் சமூக அபிவிருத்தி மன்றத்தால் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான 'காணிச் சட்டம்' என்ற தொனிப் பொருளிலான பயிற்சி ஏறாவூர் நகர் பிரதேச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது. நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.ஏ.சி. நஜிமுதீன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

காணி தொர்டர்பில் அதிகமான பிரச்சினைகள் உருவாகக் காரணம் உறுதிப் பதிவு முறையில் உள்ள குறைபாடுகள்தான். காணி விடயத்தில் அதிகமான மோசடிகள் நடைபெறுகின்றன. மோசடியான முறையில் உறுதிகள் எழுதப்பட்டு வருவதும், பிறருடைய காணிக்கு உறுதி முடித்துச் சொந்தமாக்கிக் கொள்ளல் போன்ற சம்பவங்களாலும் அதிகமானவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது.

உறுதி என்பது நொத்தாரிசு ஒருவரால் எழுதப்படும் ஆவணம். அந்த உறுதியில் தபால் முத்திரைகளும் ஒரு காணிப் பதிவு முத்திரையும் இருக்கின்றன. இது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் காணிப் பரிமாற்றம் தொடர்பான ஆவணம் எனலாம். உறுதி மட்டும் சொந்தத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் அல்ல; காணியின் செ்ாந்தத்தை உறுதிப்படுத்துவதற்கு நீண்ட நடைமுறை உள்ளது என்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

அளிப்பு என்பது ஜயபூமி, ரத்ன பூமி, சுவர்ணபூமி எனவும் அழைக்கப்படும். அதன் முன் பக்கத்தில் பெரிய அரச முத்திரை ஒன்று இருக்கும்.

அனுமதிப்பத்திரம்என்பதுபிரதேச செயலாளர் அலுவலகத்தால் வழங்கப்படும் காணி ஆவணமாகும்– என்றார். (வ–10)

## காத்தான்குடியில் சீடோ அமைப்பால் சிரமதானம்



காத்தான்குடி, ஜன, 28

காத்தான்குடி, சீடோ சமூக கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் புதிய காத்தான்குடிப் பகுதியில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. அமைப்பின் தலைவர் ஏ.பீ.எம். ஜெளபர் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிரமதானப் பணியில் அமைப்பின் அங்கத்தவர்கள், பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக இந்தப் பகுதி மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலையில் சீடோ அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட இந்த சிரமதானப் பணி மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் பொது.மக்கள் தெரிவித்தனர். (வ–10)

## வட மாகாண அதிபர் - ஆசிரியர் இடமாற்றம் அடுத்த மாதத்தில்

அச்சுவேலி, ஜன. 28

வடக்கு மாகாண பாடசாலைகளின் அதிபர் – ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றம் பெப்ரவரி மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பாடசாலைகளில் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அதிபர் – ஆசிரியர்கள், வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு பதிலீட்டு அடிப்படையில், இந்த வருடம் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இடமாற்றம் பெறுவதற்கு தகுதியான ஆசிரியர் விவரம் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருப்பதோடு அவர்களுக்கு இடமாற்றத்தில் ஆட்சேபனை இருந்தால் மேன்முறையீடு செய்வதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டு இடமாற்றம் பெறவிரும்புவர்களின் பட்டியல் கல்வி வலயங்கள் மற்றும் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இடமாற்றச் சபைகளில் ஆராயப்பட்டு இறுதிப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உரிய பாடசாலைகளில் தமது பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டம் உட்பட சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள், பதிலீடாக அனுப்பப்படும் ஆசிரியர்கள் உரிய மாவட்டங்களில் பதவியேற்ற பின்னரே வன்னிப் பெரு நிலப்பரப்பில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–11)

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 50 | 80 | 40 | 90 | 60 | 50 |
| கத்தரி | 150 | 160 | 150 | 140 | 100 | 120 | 160 | 100 |
| கரட் | 180 | 200 | 180 | 200 | 140 | 200 | 240 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 30 | 60 | 45 | 30 |
| பயிற்றை | 100 | 160 | 240 | 120 | 120 | 240 | 160 | 130 |
| பாகல் | 200 | 120 | 180 | 150 | 120 | 200 | 240 | 180 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 50 | 80 | 50 | 80 | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 60 | 50 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 100 | 100 | 140 | – | 120 | 60 |
| பூசணி | 80 | 80 | 60 | 70 | 70 | 120 | 80 | 60 |
| தக்காளி | 200 | 200 | 200 | 220 | 200 | 240 | 220 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 120 | 80 | 120 | 80 | 80 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 50 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 50 | 30 | 40 | 20 | 15 |
| மிளகாய் | 400 | 600 | 500 | 400 | 250 | 800 | 600 | 400 |
| புடோல் | 120 | 100 | 100 | 120 | 80 | 140 | 140 | 100 |
| கோவா | 100 | 160 | 100 | 120 | 100 | 160 | 140 | 110 |
| வெண்டி | 180 | 140 | 100 | 140 | 120 | 140 | 120 | 140 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 240 | 160 | 200 | 280 | 150 |
| லீக்ஸ் | 240 | 280 | 240 | 280 | 250 | 400 | 240 | 240 |
| தேங்காய் | 50 | 45 | 60 | 50 | 40 | 50 | 35 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 80 | 60 | 80 | 80 | 50 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 100 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 320 | 300 | 280 | 200 | 280 | 350 | 400 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 140 | 90 | 120 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 05 | 05 | 04 | – | 05 |

## நாளை

**தை-15 வியாழக்கிழமை**
**29.01.2015**

திதி: தசமி பி.இ.01.28 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.03.38 வரை
சுபநேரம்: 08.06-09.36 வரை
இராகுகாலம்:02.06-03.36 வரை

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 700 | 700 | 450 |
| நண்டு | 300 | 400 | 350 | 400 | 300 |
| கணவாய் | 450 | 500 | 500 | 600 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 350 |
| சுறா | 450 | 500 | 450 | 600 | 420 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 350 |
| விளை | 450 | 350 | 450 | 500 | 350 |
| மூரல் | 250 | 350 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 | 250 |
| கிழாக்கன் | 250 | 500 | 400 | – | – |
| ஒரா | 350 | 300 | 300 | – | 250 |
| திரளி | 150 | 200 | 200 | 200 | – |
| நகரை | 150 | 200 | 300 | 300 | 250 |
| ஆடை | 150 | 100 | 100 | 200 | 60 |
| ஒட்டி | 230 | 150 | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | 300 | 130 |
| பாலை | 350 | 200 | 500 | 100 | – |
| வாளை | 150 | 150 | 300 | 500 | 200 |
| கொய் | 100 | 150 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 250 | 100 | 150 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 1 | 2 | | 7 | 6 |
| 7 | 6 | | | | | 1 | | |
| | | | | 7 | 6 | | 9 | 8 |
| 2 | | | 3 | | 4 | | | |
| | | 4 | | 8 | | 2 | | |
| | | | 1 | | 5 | | | 9 |
| 3 | 1 | | 7 | 4 | | 6 | | |
| | | 8 | | | | | 4 | 3 |
| 4 | 7 | | 8 | 5 | 3 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 4 | 2 | 1 | 9 | 5 | 8 |
| 4 | 1 | 5 | 8 | 9 | 3 | 7 | 2 | 6 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 5 | 1 | 3 | 4 |
| 7 | 4 | 9 | 2 | 3 | 8 | 5 | 6 | 1 |
| 1 | 8 | 2 | 5 | 7 | 6 | 4 | 9 | 3 |
| 5 | 3 | 6 | 9 | 1 | 4 | 8 | 7 | 2 |
| 8 | 2 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 3 | 4 | 2 | 6 | 8 | 7 |
| 3 | 6 | 7 | 1 | 8 | 9 | 2 | 4 | 5 |

CM K

# உறவின் வெளிப்பாடு




நட்பு, காதல், மணவாழ்க்கை மூன்றுக்கும் உறவுதான் அடிப்படை. இந்த மூன்றின் இலக்கணங்களும் வேறு வேறு. நட்பு திறந்த அமைப்பு கொண்டது. அதில் விசாலமான இடம் இருக்கிறது. விட்டுக்கொடுத்தலும், வளைந்து கொடுத்தலும் இருக்கின்றன. பரஸ்பரம் மரியாதையும், மதிப்பும் இருக்கின் றன. மற்றவரின் தனித்துவம் அங்கீகரிக்கப்படு கிறது. காதலில் நெருக்கம், ஆழம், வீச்சு எல் லாமே அதிகம். ஆனால் பரஸ்பர மரியாதையும், மதித்தலும் குறைவு. தனித்துவம் குறித்த அங்கீ காரம் மறுக்கப்படுகிறது. சொந்தம் கொண்டாடு தல் அதிகரிக்கிறது. நெருக்கம் அதிகமானால் இவையிரண்டும் ஏன் குறைய வேண்டும்? மண வாழ்க்கையில் நெருக்கம் இன்னும் அதிகரிக் கிறது. தனித்துவத் துக்கு ஏறக்குறைய இடமே இல்லாமல் போகிறது. கணவனும், மனைவியும் ஒருவருக் கொருவர் சொந்தமானவர்களாகி விடுகிறார்கள். விதிகள் பெருமளவுக்கு உறவை ஆள்கின்றன. இது செய்யலாம்; இது செய்யக் கூடாது. அதற்கு அனுமதி உண்டு; இதற்குக் கிடையாது. பயத்தின் அளவும் மாறுபடுகிறது. நட்பில் பயத்தின் பங்கு மிகக் குறைவு. காதலில் அது அதிகரிக்கிறது. மண வாழ்க்கையில் பெரும்பாலும் பயமே உறவின் அடிப்படையாக இருக்கிறது. பயம் இருக்கும் அளவுக்கு உண்மையான நெருக்கம் இல்லாமல் போகிறது. உறவின் வெளியைக் காதல் ஏன் குறுக்க வேண்டும்? மண உறவு ஏன் பயத்தை அதிகரிக்கச் செய்ய வேண் டும்? காதல், மண உறவு இரண்டிலும் வரையறைகள் அதிகம். அத னால் தனித்துவம் வாய்ந்த ஒரு ஆணும் பெண்ணும் காதலன்காதலி, கணவன்–மனைவி என்ற உறவு எல்லைக்குள் மாட்டிக்கொண்டு தனித்துவத்தை இழக்கிறார்கள். இந்த உறவுகள் பற்றிய மறு பரி சீலனை மிகவும் அவசியம். வெளியில் உள்ள எதற்காகவும் நீங்கள் காத்திருக்க வேண்டாம். அவருடைய காதலுக்காக நீங்கள் காத் திருக்க வேண்டியதில்லை. உங்கள் காதலை ஏற்றுக்கொள்ளத் தகுதி யான ஒருவருக்காக நீங்கள் காத்திருக்கலாம். வாழ்க்கையின் இயக் கம் பல தளங்கள் கொண்டது. நாம் மனத்தில் உருவாக்கிக் கொள் ளும் பிம்பங்கள் நம் வாழ்க்கை அனுபவங்களை பெருமளவுக்கு நிர்ணயிக் கின்றன. காதல் என்னும் உணர்வு மிகவும் ஆழமும், சக்தி யும் வாய்ந்தது. அதை அனுபவியுங்கள். காதலரை விடக் காதல் உணர்வு இன்னும் முக்கியமானது. உங்கள் ஆழத்தை நீங்கள் தீண் டக் காதல் உதவ முடியும். உங்கள் உணர்ச்சிகள் மீதும், தன்னுணர் வின் மீதும் மரியாதை வையுங்கள். உங்கள் உறவு ஒரு தனிநபரு டன் இல்லை. முழு வாழ்க்கையுடனானது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இளமைக் காலத்தில் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்

நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமை யாளர்களாக இருக்கிறோம். நல்ல எண் ணங்களின் கருவிகளாகச் செயல்பட்டால் தூய்மை பெறுவோம்.

நாம் இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப் பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நம்மா லேயே உருவாக்கிக் கொள்ள முடியும்.

புது மலர்களே இறைவனின் பாதங்களில் வைப்பதற்கு தகுதி பெற்றவை. அதுபோல வலிமை, வளமை, அறிவுக்கூர்மை கொண்ட இளமைக் காலத்திலேயே இறைவனை அறிய முயலுங்கள். ஆகவே ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும்.

## வீடு வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, மருத்துவபீடத்துக்கு அருகில் 3அறைகள், மாபிள் பதிக்கப்பட்ட ஹோல் வரவேற்பறை, இணைந்த குளியலறை மற்றும் வாகனத் தரிப்பிட வசதி சுற்றுமதில் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(56177) (12.3.7) தொ.பே: 077 922 9486

## வேலை ஆள்கள் தேவை

ஹாட்வெயர் கடைக்கு அனுபவம் உள்ள விற்பனையாளரும், பில் கிளாக்கும் தேவை. மானிப்பாய்க்கு, 2 கிலோ மீற்றர் உட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(56179) (12.3.7) தொ.பே: 077 663 0390






## மணமக்கள் தேவை

1983 கனடா PR உள்ள மணமகனுக்கும், 1981 கனடா PR உள்ள மணமகளுக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மண மக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(56161) (12.3.7) தொ.பே: 011 243 2177/077 988 2786

## விற்பனைக்கு

சுயமுயற்சியாளருக்கான அரைக்கும் இயந்திரம், சிறிய ரக அளக்கும் Disk,கோப்பி அரைத்தல், டீசல் எஞ்சின், மின்சாரம் இல்லா இடத்தில் பாவிக்கக்கூடிய oill Machine (தேங்காய் எண்ணெய்) உற்பத்தி இயந்திரம் என்பன விற்பனைக்குள்ளன.

(56156)(12.3) தொ.பே: 077 667 2713

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

விற்பனைத்துறையில் அனுபவம் உள்ள அல்லது புதிதாக பழக விரும்புபவர்கள் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புகொள்ளவும். கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.


தொ.பே:
(56160) (12.3) 077 386 7696/021 224 0514








## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல் (Consultant orthodontist)

★ முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- ★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- ★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- ★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- ★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- ★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
888, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்றர்
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 864 4781 (தர்ஷினி)

# தொழில்நுட்பம்




## வி.எல்.சி. மீடியா பிளேயரை தரவிறக்கம் செய்ய..!

கணினியில், எம்.பி 4 உட்பட பல பார்மட்களில் உள்ள வீடியோ மற்றும் ஓடியோ பைல்களை இயக்க நாம் அனைவரும் விரும்பிப் பயன்படுத்துவது வி.எல்.சி. பிளேயர் ஆகும். இதனை ஆண்ட்ராய்ட் போனுக்கென வடிவமைத்து, சோதனைப் பதிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளாக, வீடியோ லேன் நிறுவனம் வெளியிட்டு, வாடிக்கையாளர்களும் பயன்படுத்தி வந்தனர்.

இப்போது இந்த புரோகிராம் நிலைப்படுத்தப்பட்டு, அனைவரும் இலவசமாகத் தரவிறக்கம் செய்து பயன்படுத்தும் வகையில் தரப்பட்டுள்ளது. கூகுள் ப்லே ஸ்டோரில் இதனைப் பெறலாம்.

## தேவை

உணவகமொன்றுக்கு றொட்டி, றைஸ், அப்பம் போடக்கூடியவர்களும், சமையல் உதவியாள் களும் தேவை.

(56164)(12.3.7) தொ.பே: 076 655 8373

## விற்பனைக்கு

பாவித்த கணினிகள், போட்டோப் பிரதி இயந்திரம், குளிரூட்டிய (A/C)விரிவுரை மண்டப கதிரைகள், கணினி மேசைகள் விற்பனைக்குள்ளன.

(56183)(12.3.7) தொ.பே: 075 242 1936

## விற்பனைக்கு

அலுவலகத் தளபாடங்கள் மிகச் சிறிதுகாலம் பாவித்தவை. விற்பனைக்குண்டு.

(56169)(12.3.7) தொ.பே: 078 521 3287

## விற்பனைக்கு

ஜமுனாபாரி சணல் கிடாய், மறி ஆடுகள் ஜப்பான் 50 Lancer, 2 sri minor car, துவிச்சக்கர வண்டி Sony TV 29 இஞ்சி

(56184)(12.3.7) தொ.பே: 077 918 1018

## பெண் வேலையாள்கள் தேவை

யாழ்.மாநகரசபைப் பகுதிக்கு உட்பட்ட பகுதியில் வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. கணினித்துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும். தமிழ் தட்டச்சு செய்யக்கூடியவர் கள் விரும்பத்தக்கது.

(56180) (12.3.7) தொ.பே: 077 055 7261

## விற்பனைக்குண்டு

தவில், நாதஸ்வர உதிரிப்பாகங்கள் அனைத்தும் விற்பனைக்கு உள்ளன.

தொ.பே:
077 872 8540/078 610 1513

## [illegible]

யாழ்ப்பாணம் [illegible] கடைகள் வாடகைக்கு[illegible] அறைத் தேவைக்கும் [illegible] (நீளம் 30, அகலம் 14)

தொ.பே:
077 909 6190/021 222 7416






## ஒரே நேரத்தில் அதிக வீடியோக்களை டவுன்லோட் செய்ய

அதிக வீடியோக்களை Youtube தளத்தில் பார்க்கின்றோம். டவுன்லோட் செய்வதற்கு நிறைய மென்பொருள்கள் உள்ளன. ஆனால், அதில் ஒவ்வொரு வீடியோவாகத்தான் டவுன்லோட் செய்ய முடியும்.

ஆனால், இந்த மென்பொருளானது, ஒருமுழு Play List n டவுன்லோட் செய்ய உதவுகிறது. இந்த மென்பொருளை டவுன்லோட் செய்வதற்கு கீழே லிங்க் கொடுக்கப்பட்டுள்ளது.

டவுன்லோடு செய்து கணினியில் நிறுவிக் கொள்ள வேண்டும். தற்போது உங்களுக்கு பிடித்த Playlist _, Address Bar -இல் உள்ள URL d n Copy செய்து, இந்த மென்பொருளில் Paste செய்யவும்.

அதன்பின் Downloa- என்பதை Click செய்து விட்டால் முழுமையாக டவுன்லோட் ஆகும்.

Preset பகுதியின் மூலம் உங்களுக்கு தேவையான Formatd [illegible] [illegible]



## அசத்த போகும் ஸ்மார்ட்போன்கள்..!

ஒரு காலத்தில் மொபைல் போன்கள் பார்க்க செங்கல் போலவும், பயன் படுத்த கனமாகவும் இருந்தது. அதன் பின் பல வித மொபைல்களை கடந்து கற்பனை செய்ய முடியாத அளவு பல வளர்ச்சிகளை மொபைல் போன்கள் கடந்து வந்துவிட்டது.

பலரும் பீச்சர் போன்களில் இருந்து ஸ்மார்ட்போன்களுக்கு படையடுக்கும் நிலையில், 2014 ஆம் ஆண்டு பல புதிய ஸ்மார்ட்போன்களின் வரவு அனைவரையும் கவர்ந்தது.

அந்த வகையில், வரும் ஆண்டில் வெளியாக இருக்கும் டாப் 10 ஸ்மார்ட் போன்களின் பட்டியலில் சாம்சங் கேலக்ஸி எஸ்–6, சாம்சங் கேலக்ஸி நோட் 5 , அப்பிள் ஐபோன் 7 , எஹ்டிசி ஒன் எம்9 , எல்ஜி ஜி4 ,சோனி எக்ஸ் பீரியா இசட்4 ,ஒன்ப்ளஸ் ட, மைக் ரோசாப்ட் லூமியா 1030 ,எஹ்டிசி பட் டர் பிளை 2, சாம்சங் கேலக்ஸி எஃப் ஆகிய போன் கள் இடம்பெற்றுள்ளன.

## அரசாங்க அறிவித்தல் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

# கேள்வி கோரல்

யாழ்.மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தையும் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 28.01.2015 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 10.02.2015 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விவரத்தைக் குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 10.02.2015ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- ❋ காகிதாதிகள், எழுதுபொருள்கள்
- ❋ நுகர்வுப் பொருள்கள்
- ❋ வாகன ரயர்கள்
- ❋ உணவு / சிற்றுண்டி வகைகள்
- ❋ மின் இணைப்புப் பொருள்கள்
- ❋ ஹாட்வெயர் பொருள்கள்
- ❋ குடிதண்ணீர் வகைகள் / பால்மா வகைகள்
- ❋ அலுவலக அடையாள அட்டை செய்தல்


முக்கிய குறிப்பு: பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 3 தினங்களுக்குள் பொருள்களை யாழ்.மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது கூரியர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்றவகையில் தங்களாது விலைகளில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்,**
**யாழ்.மாவட்டம்.**


(F19505) (12.3.7)






நிந்தியா



எஸ். அட்சயா
மானிப்பாய் மகளிர் கல்லூரி

## குத்திக் கிழிக்கும் பறவை

கடலோரப் பகுதியில் வசிக்கும் பறவை சீகல். மீன்கள்தான் இவற்றோட முக்கியச் சாப்பாடு. சில நேரங்களில் 50 அடி நீளம் கொண்ட இராட்சத ரைட் திமிங்கிலங்களைக் கூடச் சாப்பிடத் திட்டம் போடும். திமிங்கிலம் தண்ணீருக்கு மேலே வரும்போது கூர்மையான அலகால் முதுகைக் குத்திக் காயப்படுத்தும். கொழுப்புடன் கூடிய சதைப் பகுதிகளைக் கொத்திக்கொண்டு பறக்க ஆரம்பித்துவிடும்.





## தேடினால் கிடைக்கும்

ஒரு மரங்கொத்திக் குருவி தன் கூரிய அலகால் டொக், டொக் என்று ஒரு மரத்தைக் கொத்திக் கொண்டே அந்த மரத்தின் மேல் தாவித்தாவி ஏறியது. அதைப் பார்த்த ஒரு மனிதன், 'மூடக் குருவியே, எதற்காக மரம் முழுவதும் கொத்துகிறாய்? இது வீண் வேலை அல்லவா?' என்று கேட்டான். 'மனிதனே நான் என் உணவை தேடுகிறேன். தேடினால் தான் எதுவும் கிடைக்கும்' என்றது மரங்கொத்தி. 'மரம் முழுவதும் கொத்துவது மடத்தனம்' என்றான் மனிதன். மரங்கொத்தி சிறிது நேரத்தில் மரத்திலுள்ள ஒரு போஏரயைக்கண்டு அந்த இடத்தினைத் தன் அலகால் குத்திப் பெயர்த்து போரைக்குள் குடியிருந்த புழுக்களைத் தின்றது. அப்போது அது மனிதனைப் பார்த்துக் கூறியது, 'மனிதனே நீயும் தேடு. மரத்திலும், மண்ணிலும், நீரிலும், ஏன் எல்லா இடங்களிலும் உனக்கும் ஏதாவது கிடைக்கும் என்று.

## வாயைப் பிளந்து..

ஆஸ்திரேலியாவில் டானி ப்ராக்மவுத் பறவைகள் உள்ளன. இவை பார்ப்பதற்கு ஆந்தையைப் போலவே இருக்கும். இவற்றின் உடல் மரப்பட்டைகளின் நிறத்தில் இருப்பதால் பொந்து, கிளைகளுக்கு நடுவே போய் உட்கார்ந்துகொள்ளும். சிறிய பறவைகள், எலி, தவளை பக்கத்தில் வரும்போது வாயை மிக அகலமாகத் திறந்து வைத்துக்கொண்டு அசையாமல் இருக்கும். இரை வாய்க்கு வந்த உடன் வாயை வேகமாக மூடிவிடும். வீனஸ் ட்ராப் என்ற தாவரத்தைப் போலவே இதுவும் இரையைப் பிடிக்கிறது.



**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்.**

கட்டடங்கள் திணைக்களம், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்/ முல்லைத்தீவு நிறைவேற்று எந் திரி அலுவலகம்/ ஆகியவற்றின் பாவனைக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல. 40, றக்கா லேன், சுண்டுக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப்பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தைப் பெற்று 2015. 02. 10 ஆம் திகதி மு.ப. 11.00மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி. செ.மோகனதேவன்
தலைவர், பெறுகைக்குழு, கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,
இல. 40, றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:- 021 3202638/ 021 222 8091

**மேற்பார்வையாளர் தேவை - பெண்**

**தப்ரபேன் கடலுணவு நிறுவனத்தின்**
யாழ்ப்பாண கிளைக்கு உடனடியாக மூன்று பெண் மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றனர்.
தகைமை: க.பொ.த. (உ/த) விஞ்ஞானப் பிரிவில் கற்றவர்கள் விரும்பத்தக்கது.
குறிப்பு : தொழிற்சாலை வளாகத்தினுள் 30 -40 பேர் தங்கக் கூடிய பெண்களுக்கான தங்குமிட விடுதி உள்ளது.
(56114) (45.3)
தொடர்பு: 078 646 6890 (10 A.m - 02.00 P.m)
vichchu26@yahoo.com (சுயவிவரங்களை அனுப்ப)

**மாதாந்த கலை நிகழ்ச்சி - 2015**

வட.இலங்கைச் சங்கீத சபை 2015ஆம் ஆண்டு தொடக்கம் இளம் கலைஞர்களை ஊக்கிவிக்கும் நோக்கமாக அவர்களின் ஒத்துழைப்புடன் மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளோம். தைமாத (ஜனவரி) நிகழ்வு 31.01.2015ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வட இலங்கைச் சங்கீத சபை,மருதனார்மடத்திலுள்ள தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெறும். இந்நிகழ்வு ஜெயச்சந்திர வைரமூர்த்தி குடும்பத்தின் அனுசரணையுடன் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்
01. பாட்டு - செல்வி.ஜெயச்சந்திர வைரவமூர்த்தி வைஷ்ணவி (கலாவித்தகர்)
02. பரதம் - இணுவையூர் குமர நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி
03. பாட்டு - தவநாதன் றொபேட் (விரிவுரையாளர், யாழ்.இராமநாதன் நுண்கலைப்பீடம்)

இந்நிகழ்வுக்கு கலைஞர்ப் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்
குறிப்பு: வட.இலங்கைச் சங்கீத சபையினால் கலை வகுப்புக்கள் 03.02.2015 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாள் வகுப்பு ஆரம்பிக்கப்படும். தொடர்ந்து வகுப்புக்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

ஆசிரியர் விவரம்:
01. பாட்டு - பொன்ஸ்ரீ வாமதேவன் (ஓய்வுநிலை இசை ஆசிரியர்)
02. பரதம் - திருமதி துஷ்யந்தி சுருணன் (முதுதத்துவமாணி - பரதநாட்டியம்)

வட.இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடம்

உ
மருதடியான் துணை
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**
ஆவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் – 02.02.2015

**எண்ணெய்க்காப்பு**
31.01.2015 சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் இரவு முழுவதும் 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிவரை.




**மஹாகும்பாபிஷேகம்**
02.02.2015 திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரை உள்ள சுபவேளையில் மருதடியான் கும்பாபிஷேகம்.
என் இனிய அடியவர்களே!

இவ்வண்ணம்
... வித்தக மருதடி விநாயகன்

குறிப்பு: கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் மண்டலாபிஷேகத்துக்கு பதிவு செய்தவர்கள் தங்கள் திகதியினை உறுதிப்படுத்திக்கொள்வதுடன். மேலதிகமான செலவினத்தொகை ரூபா 15000.00 ஆலய தர்மகர்த்தாசபை காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
ஆலயத்தில் இனிவரும் காலங்களில் மஹோற்சவம் 25 நாள்கள் நடைபெறும் என்பதையும் மார்ச் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வருடப்பிறப்பன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.
தொ.பே. 021 225 5136, 077 923 5693
விளம்பர அனுசரணை: றஞ்சிற் < மோட்டோர்ஸ் / றிப்பியறிங் அன்ட் சேவிஸ் சென்ரர்
ஆலய தர்மகர்த்தா சபை
பஜாஜ் முகவர் - மோட்டார் சைக்கிள், ஒட்டோ மற்றும் உதிரிப்பாக விற்பனையாளரும் மற்றும் சேவிஸ் அன்ட் மெக்கானிக் சேவையினரும்
யாழ்வீதி, மானிப்பாய். தொ.பே. 021 225 5228

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 27 . 12 . 1939



மறைவு 30 . 12 . 2014

## அமரர் சபாரத்தினம் திருச்சிற்றம்பலம்

கடந்த 30.12.2014 சிவபதம் அடைந்த எமது குடும்ப குலவிளக்கு காலஞ்சென்ற சபாரத்தினம் திருச்சிற்றம்பலம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (29.01.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் சித்தன்கேணி இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சித்தன்கேணி, யாழ்ப்பாணம்

தொ.பே. 077 408 3467, 077 775 0308

குடும்பத்தினர்.

(56195)(45.7.3)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## தவராசா டினோஷின்

பிறப்பு 19.10.1995

இறப்பு 28.01.2013

கனவுகள் பல சுமந்து
சாதனைகள் படைத்திடும் வேளைதனில்
மின்னாமல் இடி விழுந்ததுவோ?
கண்ணிமைக்கும் நேரத்தில் விண்ணுற்றாய்
உனக்காய் கண்ணீர்ப்பூக்கள் சிந்திக்
கவலையோடு உருகுகின்றோம்.
என்றென்றும் உன் நினைவை ஏற்றிவைப்போம்.

புதுக்குளம்,
கோவிற்குளம், மன்னார்.

குடும்பத்தினர்.

# செய்திகள்

# 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## முத்து துரைராஜா



தோற்றம் 14.01.1931

மறைவு 18.01.2005

திதி: 28.01.2015

ஆண்டுகள் பத்து பறந்தோடின
ஐம்பெரும் செல்வங்களைப் பெற்றெடுத்து
பாசமாய் பணிவுகள் சொல்லி வளர்த்து
துணைகளைத் தேடி இல்லற வாழ்க்கையில்
எமை இணையவைத்து.....
அம்மா அருகிருக்க அன்பு மகள்
அமுதாவின் மடியில் மரணபயம் சற்றேனும்
இன்றி உயிர் நீத்த கொடுப்பனவு யாருக்குண்டு
பிள்ளைகளை செல்லப்பெயர் சொல்லி அழைக்கும் அழகு
புன்னகை ததும்பும் உங்கள் அமைதியான சுபாவம்
எங்கள் கண்களில் நிழலாடுகின்றன.

என்றும் உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

உங்கள் அன்பு
மனைவி - துரையம்மா,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(56178)(45.6.3)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## கந்தையா கதிரவேற்பிள்ளை

தோற்றம் 13.06.1930

மறைவு 29.12.2014

கடந்த 29.12.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா கதிரவேற்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.01.2015) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
72/27, பனிக்கர் வீதி,
திருநெல்வேலி.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(56171)(45.3)

### பராமரிப்பின்றிய முதியவர் கைதடி இல்லத்தில் சேர்ப்பு

பரந்தன் பிரதேசத்தில் எவரது துணையோ பராமரிப்போ இன்றிய நிலையில்வாழ்ந்து வந்தமுதியவர் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.

பிரதேச செயலர், சமூக சேவையாளர்கள் மற்றும் கிராமசேவையாளர் ஆகியோரின் பரிந்துரையுடன் குறித்த முதியவரை தாம் இல்லத்தில் சேர்த்துக் கொண்டதாக இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

கனகசபை நவரெத்தினம் (வயது-74) என்ற முதியவரே எவரது துணையும் இன்றி கவனிப்பாரற்ற நிலையில் வாழ்ந்து வந்துள்ளார்.

வயது முதிர்ந்த நிலையில் இந்த முதியவர் பல்வேறு பரந்தன் பிரதான வீதியோரங்களில் சுண்டல் வியாபாரத்தில் ஈடுபட்டும் வந்திருந்தார்.

தற்போது இவர் இயலாமை காரணத்தினால் அரச முதியோர் இல்லத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

(வ-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## திருமதி றஞ்சிதமலர் தியாகராஜா



அன்னைமடியில்
23.07.1953

ஆண்டவன்அடியில்
29.12.2014

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.01.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி அளித்தவர்களுக்கும், போசனமளித்து உதவி செய்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# எனது அம்மா திருடி இல்லை

## சேறுபூச வேண்டாம் எனச் சீறுகிறார் நாமல்

கொழும்பு, ஜன. 28

எனது தாயார் எந்தத் தங்கத்தையும் களவெடுக்கவில்லை. அவர் ஊழல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை. அவர் மீது சேறுபூச முற்படவேண்டாம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மகனும், அம்பாந்தோட்டை நடாளுமன்ற உறுப்பினருமான நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசுக்குச் சொந்தமான 100 கிலோ தங்கத்தை, முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ விற்பனை செய்ய முயன்றார். இவ்வாறு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர் காணலிலேயே, நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், என்னுடைய குடும்பத்தில் நானும் எனது தந்தையுமே அரசியல் செய்தோம். எனது இளைய சகோதரர்கள் இருவரும் அரசியலில் ஈடுபடவில்லை. அரசியல் ரீதியில் ஏதாவது பழி வாங்கல்களை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்காக என்னையும் என் தந்தையையும் பயன்படுத்தவும். பழிவாங்கல் விவகாரங்களில் குடும்ப உறுப்பினர்களை இழுக்கவேண்டாம். எனக்குத் தெரிந்த வகையில் என்னுடைய தாய், தங்கத்தைக் களவெடுக்கவோ அல்லது ஊழல் மோசடிகளில் ஈடுபடவோ இல்லை. இந்த தங்க விவகாரம் தொடர்பில் உண்மை வெளிவரும் என்று நான் எதிர்பார்க்கின்றேன் – என்றார். (த–5)

# சுன்னாகம் சங்கத்தின் வழக்கு மேல்நீதிமன்றினால் தள்ளுபடி

## இரு தரப்பினரும் இணங்கிப் போவதற்கு சம்மதம் தெரிவித்ததை அடுத்து

யாழ்ப்பாணம், ஜன 28

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை தொடர்பில் யாழ்.மேல் நீதிமன்றில் 2010 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை விண்ணப்ப வழக்கு இரு தரப்பினரும் இணங்கியதனால் அது வாபஸ் பெறப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையைக் கலைப்பதாக கூட்டுறவு உதவி ஆணையாளர் அறிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு உத்தரவிட கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அதிகாரமில்லை எனத் தெரிவித்து அந்த முடிவுக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையைச் சேர்ந்த தலைவர் சி.குமாரவேல் மற்றும் சு.செல்லப்பா, ககதாகா ஆகியோர் யாழ்.மேல்நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்திருந்தனர். எதிராளிகளாகக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஜே.எஸ். அருள்ராஜ் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றினால் உயர் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அதனைப் பரிசீலித்த உயர் நீதிமன்று அது தொடர்பில் தனது முடிவை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் மனுதாரர்கள் மற்றும் எதிர் மனுதாரர்கள் ஆகியோரை வடமாகாண அவைத் தலைவர் சந்தித்துப் பேசியிருந்தார். அதன் பின்னர் வடமாகாண முதலமைச்சர் சந்தித்துப் பேசியிருந்தார். இதனையடுத்து இரு தரப்பினரும் இணங்கிச் செல்லச் சம்மதம் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து மனுதாரர்கள் தமது வழக்கை திரும்பப் பெறுவதாக நீதிமன்றில் தெரிவித்தனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சுன்னாகம் பொதுச் சந்தைக்குரிய பொதுச் சபை மற்றும் கிளைக்குழுக்களுக்கான தேர்தல்களை நடத்த இணக்கம் ஏற்பட்டதன் பிரகாரம் மனு தாரர்களும் எதிர்மனு தாரர்களும் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

வழக்கில் சம்பந்தப்பட்ட மனு தாரர்களுக்கு முதலாம் இரண்டாம் எதிர்மனு தாரர்கள் மேற்கொண்ட விசாரணை மற்றும் நடவடிக்கைகள் அவ்வாறே கைவிட இணக்கம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மனுதாரர்கள் இந்த வழக்கை திரும்பப் பெறச் செய்த விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டு வழக்கு திரும்பப் பெற அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களின் எழுத்தாணை விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுகிறது என்று யாழ்.மேல் நீதிமன்று வழக்குத் தொடர்பில் கூறியுள்ளது. (த–4)

---

# அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் மெக்கா?

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........
அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana


மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# உலகச் செய்திகள்




இந்தியக் குடியரசு தினவிழாவில் அனைவரையும் கவர்ந்த 1224 கிலோ பூக்களில் உருவான கங்கை நதி தொடர்பான அலங்கார ஊர்தியும் இராணுவ வீரர்களின் சாகசமும். (ஒ–ரி)




## பேஸ்புக், இன்ஸ்ராகிராம் அரை மணி நேரம் முடக்கம்

பிரபல சமூக வலைத்தளங்களான பேஸ்புக் மற்றும்இன்ஸ்ராகிராம் நேற்று அரைமணிநேரமாக உலக அளவில் முடக்கப்பட்டிருந்தன.

"மன்னிக்கவும், எமது சேவையில் சில கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. இயன்றவரையில் மிக விரைவில் நிலைமையை சீர்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம்" என்ற தகவலை பேஸ்புக் வெளியிட்டுள்ளது. இதனையடுத்து, மற்றொரு முக்கிய சமூக வலைத்தளமான டுவிட்டரை நோக்கி இணையப் பாவனையாளர்கள் படையெடுத்தனர். இந்த முடக்கத்துக்கான காரணம் மென்பொருள் கோளாறு எனத் தெரிவிக்கப்பட்டதுடன் அரைமணி நேரத்தின் பின் பேஸ்புக் சேவைகள் வழமைக்குத்திரும்பின. (ஒ–ரி)

## காந்தியைப் பின்பற்றுவதன் மூலம் மக்களுக்குக் கடமை செய்வோம்

### குடியரசுதின விழாவில் பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

டில்லி, ஜன. 28

இந்தியாவின் 66ஆவது குடியரசு தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையின்போது, காந்தியைப் பின்பற்றுவோம்மக்களுக்குக் கடமை செய்வோம் என குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி கேட்டுக்கொண்டார். அவர்தமதுஉரையில் மேலும் தெரிவிக்கையில்; மகாத்மாகாந்தி, தென் ஆபிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய 100 ஆவது ஆண்டை நாம் கொண்டாடி வருகிறோம். அவரிடம் இருந்து பல விடயங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. சுயராஜ்யம்என்ற கொள்கையை முன்னிறுத்தி 1930ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாளை குடியரசு நாளாக காந்தி அனுசரித்தார். அதனை அடைய ஒவ்வொரு ஆண்டும் அதே நாளில் நாம் உறுதிமொழி எடுத்து வருகிறோம். காந்தியின் மறைவுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட எமது நாட்டு அரசியல் சாசனத்தின் முக்கிய கொள்கைகள் நான்



காகும். அவை ஜனநாயகம், நம்பிக்கையான சுதந்திரம், பாலின சமத்துவம், பொருளாதார முன்னேற்றம் என்பனவாகும். 30 ஆண்டுகளுக்குப் பிறகு மத்தியில் தனிப் பெரும்பான்மை கொண்ட ஓர் அரசை மக்கள் தெரிவு செய்துள்ளனர். வாக்காளர்கள் அவர்களது கடமையைச் செய்து முடித்து விட்டனர். எனவே அதனைக் காப்பாற்றுவது அரசு அமைத்துள்ளவர்களின் கடமையாகும் என பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். பெண்களின் பாதுகாப்பு என்ற விடயத்தில், பெண்களுக்கு மரியாதை அளிப்பதுடன், அவர்களுடைய முன்னேற்றத்துக்கு எந்தத் தேசம் முக்கியத்துவம் அளிக்கிறதோ அந்தத் தேசம் மட்டுமே உலக அளவில் சக்திமிக்கதாக வரமுடியும். ஒற்றுமைக்கான சக்தியை வழங்குவது மக்கள் பின்பற்றும் மதமாகும். அதை வன்முறைக்கான ஆயுதமாக மாற்றக் கூடாது. இந்தியப் பாரம்பரியம் நமக்கு கற்பித்தது ஒற்றுமை என்பது பலம், வேறுபாடு என்பது பலவீனம் என்பதாகும்.

சமூகத்தை நல்வழிப்படுத்தவும், சகிப்புத்தன்மையை எதிர்ப்பவர்களை திருத்துவதற்கும் நன்னடத்தைக் கொள்கை தேவைப்படுகிறது. அரசியலில் ஏற்படும் கட்டுப்பாடற்ற போட்டி சமூகத்தின் மகிழ்ச்சியை அழித்து விடுகிறது. வன்முறைப் பேச்சு மக்களின் இதயங்களை காயப் படுத்தி விடுகிறது. இந்தியாவுடைய வளர்ச்சியைத் தடுக்க முடியாது என்ற நிலை வரும் போது நமது நாட்டின் எதிரிகள் சண்டையிடுவதை நிறுத்திக் கொள்வர் என்றும் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## அல்ஜீரியாவில் தீவிரவாதி கைது



சுற்றுலா சென்ற இடத்தில் பிரான்ஸை சேர்ந்த நபரொருவரை பணயக்கைதியாகப்பிடித்து படுகொலை செய்த தீவிரவாதி கைது செய்யப்பட்டுள்ளார்.

அல்ஜீரிய இராணுவம் அல்ஜீரியாவின் எல்லையில் அமைந்துள்ள அவுஜ்டா என்ற பகுதியில் அந்தத் தீவிரவாதியை கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், அந்த நபரிடம் இருந்த பயங்கர வெடிபொருள்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பிரான்ஸைச் சேர்ந்த ஹெர்வ் ஹோர்டெல்என்பவர் அல்ஜீரியாவுக்குக் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் சுற்றுலாவுக்கு சென்றிருந்தார். அதன்போது அல்ஜீரியாவில், அல்குவைதா அமைப்புடன் தொடர்புடைய கலிபா தீவிரவாதிகள் அவரைப் பணயக்கைதியாக பிடித்துச் சென்றுள்ளனர். பின்னர் அவரது தலையைத் துண்டித்து படுகொலை செய்ததோடு, அதனை வீடியோவாக வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர். அந்தச் சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்திய நிலையில், ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குஎதிரானபோர் நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் ஆதரவு தெரிவிப்பதாலேயே அந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக தீவிரவாதிகள் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே தற்போது வடஆபிரிக்க நாடான மொரோக்கோவில் பிரான்ஸ் பணயக்கைதியை கொலை செய்த தீவிரவாதி ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## வெள்ளை மாளிகையில் விழுந்த ஆளில்லா விமானத்தால் பரபரப்பு

வொஷிங்டன், ஜன. 28

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் தெற்கு பகுதியில் உள்ள புல்வெளியில் ஒரு சிறியரக ஆளில்லா விமானம் விழுந்து கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, தனது மனைவி மிச்செல்லுடன் 3 நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ளார். இந்தநிலையில் வொஷிங்டனில்உள்ள வெள்ளை மாளிகையின் தெற்குப் பகுதியில் ஒரு மரத்தின் மீது மோதிய சிறியரக ஆளில்லா விமானமொன்று புல்வெளியில் விழுந்து கிடந்துள்ளது.

2 அடி நீளமும், 2 பவுண்ட் நிறையும் கொண்டிருந்த அந்தச் சிறிய விமானம் அரசு



அதிகாரிகளால் இயக்கப்பட்டிருக்கலாம் எனவும் இரகசியப் பிரிவினரால் அதனை இயக்கியவரை அடையாளம் காண முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானங்கள், ஏவுகணைகள் போன்ற பறக்கும் பொருள்களைக் கண்டறிய வடிவமைக்கப்பட்டுள்ள ரேடாரையும் மீறி குறித்த ஆளில்லா விமானம் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

## பிரபல கேலிச்சித்திரக் கலைஞர் ஆர்.கே.லக்ஷ்மன் காலமானார்

புனே, ஜன. 28

இந்தியாவின் முன்னணி கேலிச்சித்திரக் கலைஞர்களில் ஒருவரான ஆர் கே லக்ஷ்மண் புனே நகரில் காலமானார் சிறுநீரகக் கோளாறு காரணமாக அவர் சில நாள்கள் முன்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது உருவாக்கத்தில் வெளிவந்த 'பொதுஜனம்' என்ற கேலிச்சித்திரம் மிகவும் பிரபலமானது. அத்துடன் நாட்டு நடப்புகளையும், அரசியல்வாதிகளையும் மையப்படுத்தி அந்தப் பாத்திரங்களை வைத்து கேலிச்சித்திரங்களை வரைந்து தமது கருத்துக்களை அவர் வெளிப்படுத்திவந்தார்.



அரசியல்வாதிகளை மென்மையாக நகைச்சுவையுடன் கிண்டல் செய்வது அவரது பாணி என்று கருதப்படுகிறது. லண்டனில் முதல் முறையாக இந்தியாவைச் சேர்ந்த கேலிச்சித்திரக் கலைஞரின் தனியான ஓவியக் கண்காட்சியை நடத்தியவர் என்கின்ற பெருமையும் அவருக்குண்டு. இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விபூஷண உட்பட பல விருதுகளை அவர் பெற்றுள்ளமை போன்றனவும் அவரது சாதனைகளாக குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

28 JAN 2015

# உலகச் செய்திகள்



## பாகிஸ்தானில் குண்டு மழை 35 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜன 28

பாகிஸ்தானின்வடக்கு வஜிரிஸ்தானில் பாகிஸ்தான் இராணுவத்தினர் போர்விமானங்கள்மூலமாக மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் உட்பட 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

வடக்கு வஜிரிஸ்தானில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதலில் இதுவரை 1,200க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## கிளர்ச்சிக் குழுவின் தலைவர் மீது போர்க்குற்ற விசாரணை ஆரம்பம்



உகண்டா நாட்டின் கிளர்ச்சிக்குழுத் தலைவரான டொமினிக் ஓங்வென், முதல் முறையாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

லார்ட்ஸ் ரெஸிஸ்டென்ஸ் இராணுவம்எனப்படும்கிளர்ச்சிப்படையின் மூத்த தளபதியாக இருந்த ஓங்வென் மீது போர்க் குற்றச் சாட்டுகளுக்காக அவர்கைதுசெய்யப்பட்டு அவர் மீதான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்கக் குடியரசிலுள்ள சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்திடம் ஓங்வென் கையளிக்கப்பட்டிருப்பது, எல். ஆர் .ஏயின் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவரும் நடவடிக்கையை மேலும் ஒரு படி முன்நகர்த்தியுள்ளது என அந்த நீதிமன்றத்தின் தலைமைச் சட்ட நடவடிக்கை அதிகாரியானபாத்து பென்சூடா தெரிவித்துள்ளார்.

சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தால் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த எல் ஆர் ஏ தலைவர்கள் ஐந்து பேரில் ஓங்வென்னும் ஒருவராவார் என்றும் ஓங்வென் வடக்கு உகண்டாவில் சிறு பிள்ளையாகப் பாடசாலை சென்றபோது கடத்திச் செல்லப்பட்டு சிறார் போராளியாகப் படையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும் பின்னர் எல் ஆர் ஏ அமைப்பின் முக்கிய தளபதியாக அவர் செயற்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ரி)



## 6 நாள்களில் 8,383 கி.மீ. தூரம் பலூனில் பறக்கும் வீரர்கள்

நியூயோர்க், ஜன.28

பலூனில் 6 நாள்களில் 8,383 கிலோமீற்றர் தூரம் பறந்து சாதனை படைக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில், அமெரிக்க விமானி டிராய் பிரட்லி, ரஷ்யாவைச் சேர்ந்த லியோனிட் துய்கட்டியேவ் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் ஜப்பானில் இருந்து அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் உள்ள தெற்கு ஒரிகன் மாகாணத்தை அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பலூனில் பறந்தபடி பசிபிக் கடல் பகுதியை அவர்கள் கடக்கவுள்ளனர். அவர்களது பயணம் நேற்று முன்தினம் ஆரம்பித்தது. திட்டமிட்டபடி 6 நாள்களில் 8,383 கி.மீற்றர் தூரம் பறந்து இலக்கைச் சென்றடைந்தால் பழைய சாதனையை அவர்கள் முறியடித்து புதிய சாதனை படைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இங்கிலாந்து திருச்சபையின் முதல் பெண் ஆயராக நியமிக்கப்பட்டிருக்கும் லிப்பி லேன் நேற்று ஜார்க் நகரில் உள்ள மின்ஸ்டர் தேவாலயத்தில் , ஸ்டாக்போர்ட் ஆயராகப் பதவியேற்கும் நிகழ்வு.

## கிரீஸில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இடதுசாரிக் கட்சியான சிரிஸா வெற்றி

எதென்ஸ், ஜன. 28

கிரீஸில் நடைபெற்ற பொதுத் தேர்தலில்பொருளாதார சிக்கன நடவடிக்கைகளை எதிர்க்கும் இடதுசாரிக் கட்சியான, சிரிஸா கட்சி வெற்றி பெற்றுள்ளது.

அந்தக் கட்சியின் தலைவர் அலெக்ஸிஸ் சிப்பிராஸ் , தமது கட்சியைப் போன்றே பொருளாதார சிக்கன நடவடிக்கைகளை எதிர்க்கும் மற்றொரு கட்சியான, சுயாதீன கிரேக்கர்கள் என்ற கட்சியுடன் கலந்தாலோசிப்பார் என்றும், கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து விவாதிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதவியிழந்து செல்லும் அரசின் பொருளாதார சிக்கன நடவடிக்கைகள் இத்துடன் முடிவுக்கு வரும் என்று சிப்பிராஸ் தெரிவித்துள்ளார்.

கிரீஸுக்கு கடன் தந்த நாடுகளுடன் பேசி நாட்டின் கடன்களை மீளளிக்க நடைமுறைச் சாத்தியமான ஒப்பந்தத்தை ஏற்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான சிரிஸா கட்சியின் ஆதரவாளர்கள் எதென்ஸ் நகரத் தெருக்களில் கட்சியின் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-ரி)



## இந்த ஆண்டின் உலக அழகியாக கொலம்பியப் பெண்

வொஷிங்டன், ஜன. 28

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் கொலம்பியாவைச் சேர்ந்த 22 வயது பௌலினா வேகா உலக அழகிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அந்தப் போட்டியில் மொத்தம் 80 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியில் கொலம்பியாவைச் சேர்ந்த 22 வயதான பௌலினா வேகா முதலிடம் பெற்று 2015ஆம் ஆண்டின் உலக அழகி பட்டத்தைத் தட்டிச் சென்றுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை அமெரிக்காவின் நியா சான்செஸ் பெற்றதோடு, 3ஆவது இடத்தை உக்ரைனின் அழகியானா ஹர்ஷ்கா பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-ரி)

## ஜேர்மனியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் பெகிடா அமைப்பு

பேர்லின், ஜன. 28

இஸ்லாமிய மயமாக்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக பெகிடா அமைப்பின் ஊர்வலங்கள் ஜேர்மனி நாட்டைக் களங்கப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக ஜேர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ட்ரெஸ்டன் நகரில் சுமார் 17,000 பேர் கலந்துகொண்ட பெகிடாவின் 13 ஆவது ஊர்வலம் ஆரம்பிப்பதற்குச் சற்று முன்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த ஊர்வலங்கள் தேவையானவைதானா அல்லது தேவையற்றவையா என்ற சர்ச்சையைவிட, உலக நாடுகள் ஜேர்மனியை உன்னிப்பாகக் கவனித்து வருவதைப் போராட்டக்காரர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஊர்வலங்களில் கலந்து கொள்பவர்கள் வெளிநாட்டினருக்கு எதிராக இனக்கலவரங்களைத் தூண்டிவிடும்வகையில்கோஷங்களை எழுப்புவதால், அது ஜேர்மனியின் இறையாண்மையைக் களங்கப்படுத்தும் விதத்தில் அமைகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




பெகிடாவின் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு ஜேர்மனி அரசின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது எனத் தெளிவாகவும் உறுதியாகவும் தான் பல முறை அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய அரசின் போக்கும் செயலும் தமிழரின் இறைமையை மிதிக்கவா?

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள், நீடித்து நிலைத்து நிற்கவல்ல நியாயமான அரசியல் தீர்வு ஒன்று தமக்குக் கிடைப்பதற்கு, இந்தியாவையே நம்பி இருக்கின்றனர் -

அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கான தார்மீகக் கடப்பாடும் இந்தியாவுக்கே உண்டு -

வடமாகாணத்தின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மேற்கண்டவாறு அழுத்திக் கூறியுள்ளார்.

இந்தியாவின் குடியரசு நாள் வைபவத்தை ஒட்டி, நேற்று முன்தினம், யாழ்ப்பாண நகரில் இந்தியத் துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் உருவாக்கப்பட்ட வேளையிலேயே, எமது தலைவர்கள், மாகாண சபைக்கென குறித்து ஒதுக்கப் பட்ட அதிகார வரம்பில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி இருந்தனர்.

மொத்தத்தில், பதின்மூன்றாவது திருத்தத்தில் - அதாவது மாகாணசபைச் சட்டத்தில் - கூடப் போதிய அதிகாரங்கள் குறித்தொதுக்கப்பட்டிருக்கவில்லை.

அத்தோடு நிற்காமல், திவிநெகும சட்டம், மற்றும் பல சட்டவிதிகள் ஊடாக மாகாண சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

ஏன், வாய் ஒழுகப் பேசும் இன்றைய புதிய அரசும் பதின்மூன்றாவது திருத்தத்துக்குக் கூடுதலாக, மேலாக மாகாண சபைகளுக்குப் புதிய அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்பது, தெட்டென வெளிப் பட்டுவிட்டது. அதனூடாக -

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட வேண்டும். மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்குவதன் ஊடாக இனப்பிரச் சினை இல்லாது ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் புதிய அரசுக்கும் ஆர்வம் இருப்பதற்கான வெளிச்சமான அறிகுறிகளைக் காண இயலவில்லையே.........!

மொத்தத்தில் - மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்குவதன் ஊடாக, இலங்கை வாழ் தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதனை செயலளவில் நிலைப்படுத்துவதற்கு -

புதிய அரசுக்கும் இதய சுத்தியான விருப்பம் அரும்பவில்லை என்பது கல்மேல் எழுத்துப் போல் தென்படுகிறது.

தமிழ் பேசும் மக்களின் அமோக வாக்குகளால் இப் போதைய - புதிய - அரசு - ஆட்சிபீடம் ஏறியது. அதற்குக் கைமாறாக அவர்களுக்குச் சேரவேண்டிய, உரிய, ஆளும் உரிமைகளை வழங்கும் அரசியல் கடப்பாடு அந்த அரசுக்கு உண்டு. அதனை, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் உள்ள அரசு கவனத்தில் கொள்ளாது என்ற போக்கே மிகப்பெரிய அளவில் எழுந்து நிற்கிறது.

தெற்கில், தெனியாயவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வொன்றில், பங்கு பற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, -

அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லக்கூடாது என்று இந் தியா, தமது அரசிடம் - புதுடில்லிக்கு விஜயம் செய்த அமைச்சர் மங்கள சமரவீரவிடம் - அழுத்திக் கூறியுள்ளதாகத் தெரிவித்திருத்திருக்கிறார்.

மொத்தத்தில், யானை வரும் பின்னே; மணி ஓசை வரும் முன்னே என்றவாறு, அரசமைப்புக் கான பதின்மூன்றாவது திருத்தம், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அன்றி-

தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் கூட்டு இலக்கை அடைவதற்கான சூழ்ச்சியாக அமை யுமோ என்ற அச்சம் எழுகிறது.

புதிய அரசு, அரசமைப்புக்கான பதின்மூன்றா வது திருத்தத்தைப் பேசுபொருளாகக் கொண்டு - காண்பித்துக் கொண்டு - தனக்கு வாய்ப்பான - பெரும்பான்மை இன மக்களின் ஆதரவைத் தொடர்ந்து தக்க வைக்கும் திசையில் நடை போடத் தொடங்கி உள்ளதாகக் கருதுவதிலும் தப்பில்லை.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், புதிய அரசு பதிவியேற்ற ஒரு சில நாள்களில் அவசர அவசரமாக இந்தியா - புதுடில்லி, சென்று பிரதமர் நரேந்திரமோடியை இலங்கைக்கு வருமாறு அழைத்தமை -

இலங்கையின் புதிய ஜனாதிபதி அடுத்த மாதம் புதுடில்லிக்கு விஜயம் செய்வதுமான - அரசியல் பண்டமாற்று நகர்வுகளுக்கு ஆழமான உள்நோக்கங்கள் உண்டு என்ற முடிவுக்கே இட்டுச் செல்கிறது.

சீனாவைத் தள்ளி வைத்து, இந்தியாவுடன் ஒட்டி உறவாடும் நிலையை இறுக்கிக் கொள்வ தற்கு தமிழ் மக்களின் இறைமை மற்றும் அரசியல் உரிமைகளைக் காலால் மிதிக்கும் போக்கே இது.........!

# மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சி

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

பாதுகாப்பு அமைச்சின் அனுசரணை பெற்ற ஒரு முகவர் அமைப்புடன் சர்ச்சைக்குரிய விதத்தில் இணைந்து கொண்டு தனியார் நிறுவனம் ஒன்று செயல்பட்டிருக்கும் விதமானது அரச தரப்பில் பலத்த அதிர்ச்சிகளை தோற்றுவித்திருப்பதுடன் இப்பொழுது பொலிஸ் திணைக்களத்தின் தீவிர புலனாய்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு சந்தேகத்துக்குரிய விடயங்கள் வெளிவந்திருப்பதால் பொலிஸார் இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியிருக்கிறார்கள்.

ரத்னா ஆராக்ஷக லங்கா லிமிட்டெட் (RALL) மற்றும் தனியாருக்குச் சொந்தமான அவான்ட் கார்ட் மெறிரைம் சேர்விசஸ் லிமிட்டெட் (AQMSL) நிறுவனத்துக்கும் இடையிலான இணைப்பு செயற்பாடுகளினால் உருவாகியுள்ள சட்டச் சிக்கல்கள் மிகக் கவனமாகவும் உன்னிப்பாகவும் ஆராயப்பட வேண்டியிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். அதனால் இந்த விடயத்தில் சகல அம்சங்களையும் ஆராய்ந்து அதன் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்காக அரச சட்டத்தரணிகளின் குழுவொன்று உருவாக்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தின் சட்டபூர்வ தன்மையுடன் ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்திடம் இலங்கை அரசானது தனது பொறுப்பிலுள்ள ஆயுதங்களை கைமாறுவதற்கு சட்ட உரிமை இருக்கிறதா என்பதும் இந்த ஆய்வில் இடம்பெறவிருக்கின்றது. அதுவும்கூட அமைச்சரவை உறுப்பினர்களுக்குத் தெரியாமலும், சர்வதேச கேள்வி கோரிக்கை எதுவும் விடுக்காமலும் செய்யப்பட்டிருப்பதாகும்.

> முன்னைய அரசின் முக்கிய திட்டங்கள் மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள அதேநேரம், பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிதக்கும் ஆயுதக் களஞ்சிய விவகாரம் அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரத்ன ஆராக்ஷக லங்கா லிமிட்டெட் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் மூளையில் உருவான குழந்தையாகக் கருதப்படுகின்றது. நிறுவனங்கள் பதிவாளரிடம் இந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பணிப்பாளர் சபையில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸும் ஒருவர். இந்த நிறுவனம் பல அரச நிறுவனங்களுக்கும் அரச ஆதரவு நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வழங்கி வந்துள்ளது.

கலுவெல என்ற இடத்திலுள்ள சிறிலங்கா கடற்படை முகாமில் அவான்ட் கார்ட் மெரிடைம் சேவைகள் நிறுவனம் மூன்று கொள்கலன்களில் ஆயுதங்களையும் தோட்டாக்களையும் நிறைத்து வைத்துள்ளது. காலி ஹெயார் அட்மிரல் டி.ஈ.சி. ஜயக்கொடி, (தென்பகுதி கடல் பிரிவுக்கான கட்டளைத் தளபதி) காலி சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன் கே.டி. ஏ.வீரசிங்கவிடம் கூறுகையில் ஆயுதக் களஞ்சியம் கடற்படைத் தளத்துக்குள் இருந்தாலும் ஆயுதப் படைகளுக்கோ, பொலிஸாருக்கோ அதன்மீது கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. ஆயுதங்களை பரிசோதிக்கவும்கூட அவர்களால் முடியாது. என்ன அங்கு சேகரிக்கப்பட்டிருந்தன என்பதுகூட தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அங்கே ஆயுதங்கள் இருந்தன என்பதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலரின் சார்பில் ஓய்வு பெற்ற ராணுவ மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோவால் கையெழுத்திடப்பட்ட கடிதம் ஒன்று மட்டுமே உள்ளது என்பதாகும்.

பாதுகாப்பு அமைச்சில் அவர் ஒரு தொடர்பு அதிகாரி மட்டுமே, ராணுவத்தினர் தங்கள் வளாகங்களில் தனியார் ஆயுதக்களஞ்சியங்களை நிறுவுவதற்கு கடிதங்கள் விடுக்கும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. அவ்வாறு கட்டளையொன்றை எந்தவிதியின் கீழ் அவர் செய்கிறார் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கவில்லை. இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால், அந்த நிறுவனத்தின் தலைவராகவும் அவரே இருந்துள்ளார். இதேவித நிலைமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திலும் நிகழ்ந்துள்ளது. அங்கேயும் RALL நிறுவனம் சில காலம் ஆயுதக்களஞ்சியம் ஒன்றை வைத்திருந்துள்ளது.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டுத் தலைவர்களும் அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகளும் தமக்கு அருகிலேயே ஆயுதக்கிடங் கொன்று இருந்துள்ளதை அறிந்திருக்கவில்லை. பாப்பரசர் வருகை தந்து சர்வசமய நிகழ்வொன் றில் உரை நிகழ்த்த அங்கு சென்றிருந்தபோதும் அதே நிலைதான் நீடித்திருந்தது.

அங்கு ஆய்வு நடத்தியபோது 152 ஆயுதங்கள் மட்டுமே காணப்பட்டதாகவும் 3322 ஆயுதங்கள் காணாமல் போயிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அங்கு ஆயுதக்கிடங்கொன்றை வைத்திருக்க தனியார் நிறுவனத்துக்கு யார் உத்தரவிட்டது. அதற்கான பணம் ஏதும் அறவிடப்பட்டதா? என்பது குறித்து இப்பொழுது பொலிஸார் புலன்விசாரணைகளை நடத்திவருகிறார்கள். பொலிஸ் திணைக்களத்தினால் இப்போது ஆராயப்பட்டு வரும் முக்கிய அம்சங்களில் பின்வருபவையும் அடங்கும்.

இலங்கை கடற்பகுதியிலிருந்து செங்கடல் வரையில் கடல்பாதுகாப்பு சேவையை வழங்குk RALL - AQMSL நிறுவனத்துக்கு அதிகாரம் வழங்க, எவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது? அரசுக்குச் சொந்தமான ஆயுதங்களை எந்தத் தனியார் நிறுவனம் பாவிப்பதற்கு எந்தச் சட்டத்தின் கீழ் எவரால் அனுமதி வழங்கப்பட்டது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தோற் கடிக்கப்பட்டதன் பின்னர் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையினருக்குரிய ஆயுதங்கள் அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டனவா? அவ்வாறு செய்வதற்கு யார் அதிகாரம் பெற்றிருந்தார்?

இலங்கை அரசுக்குச் சொந்தமான இந்த ஆயுதங்கள் ஒரு நட்பு நாட்டின் படைகள் மீது அல்லது தரப்பின் மீது பாவிக்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? அதற்கு யார் பொறுப்பேற்றிருப்பார்? அதற்காக இழப்பீடு கோரப்பட்டிருந்தால் யார் அதை வழங்கியிருப்பார்?

இந்த நிறுவனங்கள் பெறும் வருமானத்தில் அரசுக்கு பங்கு உண்டா? அதற்கான ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளப்பட்டிருந்ததா? இவையும் இவை போன்ற பல சிக்கலான கேள்விகளுக்கு பொலிஸார் இப்போது விடை காண முயன்று வருகிறார்கள்.

முன்னைய அரசின் முக்கிய திட்டங்கள் மீளாய்வுக்குள்ளாக்கப்பட்டுள்ள அதேநேரம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிதக்கும் ஆயுதக் களஞ்சிய விவகாரம் அரசுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆயுதங்கள் ஜன நாயகத்தைச் சீரழிக்க விரும்பும் சக்திகளிடம் சிக்கியிருந்தால் நிலைமை மிக மோசமாக மாறியிருந்திருக்கும் என்று கருதப்படுகின்றது.

ராஜபக்ஷ அரசைக் கண்டித்தவர்களை அவர்கள் நாட்டின் துரோகிகள் என்று வர்ணித்திருந்தனர். இப்பொழுது மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் மட்டுமன்றி நிலப் பகுதிகளில் ஆயுதக் கிடங்குகளும் தனியார் கைகளுக்கு சிக்கியிருப்பது பேரழிவுக்கான வழித்தடங்களாகக் காணப்படுகின்றன. அதனால் தான் இவைபற்றித் தேசிய ஐக்கிய அரசானது முழு மையாக விசாரணைகளை நடத்தி கண்டுபிடிப்பவைகளை மக்கள் முன்வைக்க வேண்டும். அவைகளை அறியவேண்டியது மக்களுக்குரிய உரிமையாகும்.

# நெருக்கமடைகிறது இந்திய-அமெரிக்க உறவு

தொகுப்பு - சோபனா

இந்தியாவின் குடியரசு தினத்துக்கு ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டைச் சேர்ந்த தலைவர்கள் முக்கிய பிரமுகர்களாக வரவழைக்கப்பட்டு வருகின்றமை ஒரு மரபாகும். இந்த வருடம் இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுக்கு அமெரிக்க ஜனாதிபதி, முதல் தடவையாக சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். ஒபாமாவின் இந்தியாவுக்கான பயணம் இது இரண்டாவது தடவையாகும்.



**ஒபாமாவின் 3 நாள் பயணம்**

குடியரசு தினத்தை முதன்மைப்படுத்தி அமெரிக்கா ஜனாதிபதி 3 நாள் பயணமாக இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டுள்ளார். குடியரசுதினம் முதன்மைப் படுத்தப்பட்டிருந்தாலும் அமெரிக்கா இந்தியாவுக்கிடையிலான அரசியல் விவகாரங்கள் தொடர்பாக ஒபாமா, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் ஆலோசிப்பதற்கான பயணமாகவும் அமைந்துள்ளது. இந்தப் பயணத்தின்போது பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பில் இரு நாடுகளும் முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒபாமாவை வரவேற்றார் மோடி**

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது மனைவி மற்றும் உயர் அதிகாரிகளுடன் டெல்லி பாலம் விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது பிரதமர் நரேந்திர மோடி நேரில் சென்று ஒபாமாவை கட்டித்தழுவி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். வெளிநாட்டுத் தலைவர்கள் இந்தியா வரும்போது, விமான நிலையத்துக்கு பிரதமரோ அல்லது குடியரசுத் தலைவரோ சென்று வரவேற்பது மரபு இல்லை. மத்திய அமைச்சர்கள் தான் வரவேற்பது வழக்கம். இதையொட்டி ஒபாமாவை வரவேற்கும் வரவேற்பு குழு தலைவராக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் திடீரென பிரதமர் நரேந்திர மோடி பாலம் விமான நிலையத்துக்கு வந்தார். ஒபாமாவின் விமானம் தரையிறங்கியதும், விமானத்தின் அருகில் சென்று ஒபாமாவை கட்டித்தழுவி வரவேற்றார். டெல்லி விமான நிலையத்தில் ஒபாமா வந்திறங்கியவுடன், பிரதமர் நரேந்திர மோடி அவரை கட்டித்தழுவி வரவேற்கும் ஒளிப்படம், பிரதமரின் பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்டது. இந்த நிலையில் அடுத்த 2 மணி நேரத்தில், 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் படத்துக்கு 'லைக்' தெரிவித்திருந்தனர். சுமார் 25 ஆயிரம் பேர் கருத்து கூறியிருந்தனர். படத்துக்கு 'லைக்' கொடுத்தவர்களில் ஃபேஸ்புக் நிறுவநரும் அதன் தலைமை செயல் அதிகாரியும் ஒருவர்.

**டுவிற்றரில் விமர்சனம்**

குடியரசு தின விழாவில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பின்போது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சுயிங்கம் மென்று கொண்டிருந்தது சமூக வலைத்தளங்களில் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. இந்திய இராணுவத்தின் பலத்தை பறை சாற்றும் வகையில் டேங்கர்களும், ஹெலிகொப்டர்கள் ஏனைய போர் இயந்திரங்களின் அணிவகுப்பு நடந்தபோது, பிரதமர் நரேந்திர மோடி அருகே அமர்ந்திருந்த ஒபாமா சுயிங்கம் மென்று கொண்டிருந்தார்.

**அணிவகுப்பு மரியாதை**

குடியரசுத் தலைவர் மாளிகை முன்பு, விமானப்படையின் பெண்கள் அணியின் அதிகாரி பூஜா தாக்கூர் தலைமையில் ஒபாமாவுக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதன் மூலம் முப்படை அணிவகுப்பு மரியாதைக்கு தலைமை வகித்த முதல் பெண் அதிகாரி என்ற சிறப்பை பூஜா தாக்கூர் பெற்றுள்ளார். இந்த ஆண்டு குடியரசு தின விழாவின் கருப்பொருளான 'பெண்களின் சக்தி' அமைந்துள்ள நிலையில் அதை வெளிப்படுத்துவதாக இந்நிகழ்ச்சி அமைந்திருந்தது. 'உலகின் மிக சக்திவாய்ந்த மனிதருக்கு மரியாதை அளிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டதன் மூலம் நான் வரலாறு படைத்துள்ளேன் என்பதை நினைத்து மிகுந்த பெருமை அடைவதாக பூஜா தாக்கூர் தெரிவித்துள்ளார்.

**ஹைதராபாத் இல்லத்தில் மதிய விருந்து**

ஒபாமாவுக்கு பிரதமர் மோடி நேற்று ஹைதராபாத் இல்லத்தில் மதிய விருந்து அளித்தார். சைவம் மற்றும் அசைவ உணவுகள் இதில் இடம்பெற்றிருந்தன. ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்கம், கர்நாடகம் எனபல்வேறு மாநிலங்களின் புகழ்பெற்ற உணவு வகைகள் இதில் இருந்தன. இந்த விருந்தில் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். குடியரசுத் தலைவர் மாளிகையில் வழக்கமாக 100 பேருக்கு மேல் விருந்து அளிப்பதில்லை. இந்நிலையில் இங்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய விருந்தாக இது கருதப்படுகிறது.

**ஒபாமா-மோடி சந்திப்பு**

ஒபாமா – பிரதமர் மோடி ஆகியோர் டெல்லியில் சந்தித்தனர்.; இரு நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களும் அடிக்கடி பேசுவதற்கு வசதியாக ஹொட்லைன் இணைப்பு ஏற்படுத்தப் போவதாகவும், இருதரப்பு உறவைவலுப்படுத்துவது தொடர்பாக அடிக்கடி ஆலோசனை கூட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

பத்தாண்டுகளுக்கு முன் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி; ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த அணுசக்தி ஒப்பந்தம் சுமுக முடிவுக்குவந்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி, பராக் ஒபாமாவுக்கும் பிரதமர் மோடிக்கும் இடையே நடைபெற்ற பேச் சில் ஒப்பந்தத்தைச் செயல்படுத்த முடிவானது.

**இந்தியாவுக்கு ஒபாமா உறுதி**


ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க ஆதரவாக இருப்போம், இரு நாடுகளின் வர்த்தகம் பரஸ்பரம் அதிகரிக்க ஏற்பாடு , இந்திய நகரங்களில் காற்றின் தரத்தை மேம்படுத்த அமெரிக்கா உதவி, இராணுவ தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்குவோம், இந்தியாவுடனான உறவை மேலும் அதிகரிப்பது தான் எங்களின் வெளியுறவு கொள்கையாக இருக்கும். என உறுதியளித்துள்ளார் ஒபாமா.

**நிகழ்வுகளில் பங்கேற்றார் ஒபாமா**

மூன்று நாள் பயணமாக கடந்த ஞாயிறன்று இந்தியா வந்த ஒபாமாவுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து ராஜ் கோட்டுக்கு சென்ற அவர் காந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும் ரோஜா மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தினார். பின்னர் தலைவணங்கி, கைகளை கட்டிக் கொண்டு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அந்த வளாகத்தில் அரச மரக்கன்று ஒன்றையும் நட்டார். இதையடுத்து காந்தியின் புகழ்பெற்ற கையால் நெசவு செய்யும் ராட்டையைப் போன்ற சக்கரத்தை காந்தி நினைவக அதிகாரிகள் ஒபாமாவுக்கு வழங்கினர். நினைவகத்தில் உள்ள பார்வையாளர்கள் பதிவேட்டில் குறிப்பு ஒன்றை ஒபாமா எழுதி உள்ளார். அதில், 'டாக்டர் மார்டின் லூதர் கிங் கூறியது இன்று உண்மையாகி விட்டது. மகாத்மா காந்தியின் கொள்கைகள் இந்தியாவில் இன்னமும் உயிரோட்டமுடன் உள்ளது. இந்த உலகின் அரிய பரிசு காந்தி. அமைதி. அன்பு ஆகிய அவரது கொள்கைகளை இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து உயிரோட்டத்துடன் வைத்திருக்க வேண்டும்' என குறிப்பிட்டுள்ளார்.

# கருத்து

## வாசகர் திருமுகம்



### "உதயன்" குழுவினரே வணக்கம்!

எனது முதல்சிறுகதைத்தொகுதியான "முல்லை அரும்புகள்" என்னும் நூலுக்கு வழங்கிய விமர்சனத்தினால் – உற்சாகமடைந்து பல நூல்களையும் படைத்து – வட மாகாண கலாசார சபையினால் "கலைக் குரிசில்" விருது பெற்றுள்ளேன். இதற்கு எனது உளங் கனிந்த நன்றிகள் பல. வார்த் தைகளின் சக்தி எப்படிப்பட்டது என்பதை உதாரணபூர்வமாக அறிந்து கொள்ள முடிந்தது – மந்திர சக்திகளும் பயன் கொடுப்பது இப்படித்தானே?
முப்பது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எம் இனிய உதயனே! என் வாழ்த்துக்கள். வாழி,வாழி! நீ நீடூழி வாழ்க!

*கி.தவபாக்கியம்,*
*உரும்பிராய் தெற்கு.*

### பராமரிக்கப்படாத பி.ஏ.தம்பி வீதி

**யாழ்.**–மாநகரசபைக்குட்பட்ட வண்ணார் பண்ணையில் உள்ள பி.ஏ.தம்பி வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வது சிரமமாக உள்ளது. பல கிடங்குகள், பள்ளங்கள் உள்ளதால் வெள்ள நீர் தேங்கிப் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.
இந்த வீதி பல வருடகாலமாகப் பராமரிக்கப்படாத நிலையில் உள்ளதால் இதனைப் பயன்படுத்துபவர்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
தயவு கூர்ந்து மக்களின் நன்மை கருதி விரைவாக இந்த வீதியை நவீன முறையில் அமைத்து உதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.


*பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா,*
*பிரம்மஸ்ரீ இ.சந்தானகோபால சர்மா*
*மற்றும் குடியிருப்பாளர்கள்.*

### கிடைத்தது மின்சாரம்

மன்னார், யோசப்வாஸ் வீதி 4ஆம் வட்டாரத்து மக்கள் தமக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் இணைப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.
கடந்த பல வருடங்களாக மின்சார இணைப்புக்கு விண்ணப்பித்தும் கிடைக்காத நிலையில் மன்னார் அரச அதிபர் எம்.பி.எஸ் மஹிந்த தேசப்பிரியாவின் தீவிர நடவடிக்கையின் பயனாகக் கடந்த வருடம் 25குடும்பங்களுக்கும், இந்த வருடம் நான்கு குடும்பங்களுக்கும் மின் இணைப்புக் கிடைத்துள்ளது. இது தொடர்பாக மன்னார் அரச அதிபர், திட்டப் பணிப்பாளர் ஸ்ரீ.பாஸ்கரன், வவுனியா வடக்கின் வசந்தம் திட்டப் பணிப்பாளர், மின்சார சபையினர் ஆகியோருக்கு மின்சாரம் கிடைத்தவர்கள் நன்றி கூறுகின்றனர்.
மேலும் ஏனையவர்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுமென எதிர்பார்க்கின்றனர்.

*தொ.கிறிஸ்தியான்,பேசாலை.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# அவமானத்தில் முடிவடையும் குடும்ப ஆட்சி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் அவர் தொடர்பில் வெளிவரும் தகவல்கள் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணுவதாக அமைந்துள்ளன.
அலரி மாளிகை முதல் அம்பாந்தோட்டை வரை அவரும் அவரது குடும்பத்தினரும் தமக்கென சேர்த்து வைத்திருந்த – பதுக்கி வைத்த சொத்துக்களின் பெறுமதியோ பல பில்லியன்களைத் தாண்டிவிட்டது.
அலரி மாளிகையில் அவர் வாழ்ந்த ஆடம்பரமான வாழ்க்கை குறித்த தகவல்கள் தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருக்கும் நிலையில் அவரது குடும்பத்தினர் குறித்த தவல்களுக்கும் பஞ்சமில்லை. அலரி மாளிகையில் பதுக்கி வைத்திருந்த பணத்தையும் நகைகளையும் அவசரமாக வெளியேறியதால் மஹிந்த கைவிட்டு சென்றார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அவற்றின் பெறுமதி பல கோடி. இதனை விட அலரி மாளிகை வளாகத்துக்குள் சொகுசுக் கட்டங்களை அமைத்து மன்னர் போன்று அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை குறித்து தென் பகுதி மக்கள் மத்தியில் இப்போது ஆத்திரமும் அதிருப்தியும் ஏற்பட்டிருப்பது வெளிப்படை.
அவர்கள் தமது சொகுசுப் பயணங்களுக்காக பயன்படுத்தி ஆடம்பரக் கார்களையும் பொலிஸார் அண்மையில் கண்டு பிடித்தனர்.
இவ்வாறு அவர்களின் ஆடம்பர வாழ்க்கை தொடர்பான அதிர்ச்சித் தகவல்களில் அடுத்ததாக இடம்பிடித்துள்ளவர் மஹிந்தவின்துணைவியாரான ஷிரந்தி ராஜபக்ஷ. அரசுக்குச் சொந்தமான 100 கிலோ தங்கத்தை விற்பனை செய்ய முயன்றார் என்று லட்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.
மஹிந்த மட்டுமல்ல அவரது குடும்பத்தினர் அனைவருமே அரச சொத்துக்களை தங்களது ஆடம்பர வாழ்க் கைக்காக துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டு நேற்று பல மட்டங்களிலும் எழுப்பப்பட்டுள்ளன.
"அரசுக்குச் சொந்தமான 100 கிலோ தங்கத்தை ஷிரந்தி விற்பனை செய்ய முற்பட்டார். அதன் பெறுமதி 500 லட்சம் ரூபா . இது தொடர்பில் எனது கணவருக்குத் தகவல் கிடைத்தது. அதனை அவர் விசாரணை செய்தார். அவ்வாறு விசாரணை செய்து கொண்டிருந்தபோது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுர சேனநாயக்கவிடம் இருந்து அழைப்பு வந்தது. குறித்த விசாரணையை உடனடியாக நிறுத்துமாறு அவர் உத்தரவிட்டார். அத்துடன் அந்த விடயம் பொய்யானது என்று ஊடகங்களுக்கு அறிக்கை விடுமாறு எனது கணவருக்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கு அவர் மறுத்து விட்டார். அதனால் அவர் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்." என கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தனவின் மனைவியே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.
மஹிந்த அதிகாரத்தில் இருந்தபோது வாய் திறக்காமல் இருந்த தென்னிலங்கை மக்கள் இப்போது அவர் பதவி இழந்ததையடுத்து மஹிந்த தொடர்பாக கடுமையான விசமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர் .மஹிந்தவின் சட்டவிரோத, ஆடம்பர நடவடிக்கைகள் குறித்து தெற்கு ஊடகங்களும் நாளுக்கு நாள் பல தகவல்களை வெளியிட்டு வருகின்றன.
கடைசிவரை தானே ஜனாதிபதி என்ற இறுமாப்புடன் அலரி மாளிகையில் இருந்த அவர் இறுதியில் அவசர அவசரமாக அங்கிருந்து ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் ஆட்சிக் காலத்தில் தான் செய்த பல அக்கிரமங்களையும், அநீதிகளையும், துஷ்பிரயோகங்களையும் அவரால் மறைக்க முடியாமல் போய் விட்டது.
அதனால் அவரது முழுக் குடும்பமுமே நாட்டைத் திருடியவர்கள் என்று படு கேவலமாக விமர்சிக்கப்படுவதால் பெரும் அவமானத்தையும், கிலேசத்தையும் சந்தித்துள்ளார்கள் மஹிந்த குடும்பத்தினர்.
ஷிரந்தி ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் அவரது மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். "எனது தாயார் எந்தத் தங்கத்தையும் களவெடுக்கவில்லை. ஊழல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை. அவர் மீது சேறுபூச முற்பட வேண்டாம்" என்று பகிரங்கமாகக் கோரியுள்ளார். இவ்வாறு தனது தாயைப் பாதுகாக்க பகிரங்கக் கோரிக்கை விடுக்கும் அளவுக்கு அவர்களது குடும்ப மானம் காற்றில் பறக்கிறது.
அதிகாரம் கையில் இருந்தபோது போட்ட ஆட்டங்கள் எல்லாம் இப்போது அடங்கி ஒடுங்கி வீதியில் கொண்டு வந்து நிறுத்தி உள்ளது இந்தக் குடும்ப ஆட்சியை.

**பத்தி எழுத்து**




## கூட்டெண் பலன்கள் 8-4

சனியுடன் ராகு சேர்ந்த ஆதிக்கப் பலன் இவர்களுக்கு உள்ளது. அளவான உயரம் அமைந்திருக்கும். சனி பலம் மிகுமானால், குட்டையாகவே காணப்படுவர். இரட்டை நாடி சரீரத்துடன் பருமனாக இருப்பர்.

சிறுவயதிலேயே பெரிய மனிதர் போல முதிர்ச்சியுடன் பேசுவார்கள்.நிறையநண்பர்கள்எங்கு போனாலும் அமைவார்கள். இவர்களின் பேச்சு சுவாரசியமாக இருக்கும். பல தகவல்கள் வெளிப்படும். இந்த எண்காரர்களில் படிக்காதவர் கூட நன்குஉறுதிபடத்தமது அனுபவ ஆதாரத்துடன் பேசுவர். மிகச் சிறுவயது முதலே பெற்றோரை, விட்டுத் தனியாகவே பெரும்பாலானோர் வசித்து வருவர். வாழ்க்கையில் திடீர்த் திருப்பங்களும் எதிர்பாராத அதிர்ஷ்டமும் உண்டாகும். சிறுவயதிலேயே குடும்பத்தை விட்டுப் பிரிந்து விடுவார்கள்.

சிலருக்கு இளமையிலேயே பெற்றோர் இறந்து விடுவதும் உண்டு. சுறு சுறுப்பாக வேலை செய்வார்கள். எனவே பிறர் குடும்பத்துடன் இணைந்தும் வாழ்வார்கள். காதல் இடம் பெறும் ஆனால் தோல்வியில் முடியும். சிலரின்படிப்பில்தடையேற்பட அனுபவக் கல்வியே அதிகளவில் பெரும் தொழில் திறமையை உருவாக்கும்.ராகு பலம் அதிகமானால் நன்றாகப் படித்துப் பட்டம் வாங்கி இருப்பர்.அச்சகக்கலைப் படிப்பும், கணினிப் படிப்பும், கணக்கியலும், சட்டம்,மருத்துவம்போன்ற துறையிலும் படிப்பர். ஆசிரியராகவும், பத்திரிகைத் துறையிலும் இருப்பர்.

காய்ச்சல், கண் கோளாறு, நீரிழிவு,மூலம்,வயிற்றுக்கோளாறு போன்ற நோய்கள் தாக்கலாம். பிற்காலத்தில் மறதியும் மனம் ஒருங்கிணைப்பற்ற நிலையும், வாதமும் உண்டாகும்.

## கூட்டெண் பலன்கள் 8-5

இந்தஎண் கொண்டவர்கள் சனியுடன் புதன் சேர்ந்த ஆதிக்கப் பலன் உடையவர். உயரமாக சிவப்பாக அளவான பருமனுடனிருப்பர். வேகமாகச் செயற்படுவர்.எந்தவயதிலும் அழகாக இளமையுடன் சுறுசுறுப்பாக இருப்பர்.

அசைக்க முடியாத மன உறுதியுடன் சற்றுக் கொடூரமான மனமும் இருக்கும். மனம் எப்போதும் ஏதாவது யோசித்தவாறிருக்கும். இவரைப் பெற்றவராலும் நெருங்கிப் பழகுபவராலும்கூடப் புரிந்து கொள்ள முடியாது. காரணம் இவர்கள் மனம்விட்டு எவரிடமும் பேச மாட்டார்கள். சிறுவயதில் சற்று மந்தமாகவே இருப்பர். பிறரைவிடத் திறமைசாலி எனப் பெயர் பெறப் போட்டியிடுவர். மனம் குழம்பும்போது சரியாக வேலை செய்ய மாட்டார்கள். அடிக்கடி குழம்பித் தவிப்பர். அதிக நேரம் தூங்கியே கழிப்பர்.

எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளும் ஆர்வமிருக்கும். ஆனால் மறதி பெரிய இடைஞ்சலாகும். கடவுள் பக்தி, பெரியோரிடம் மரியாதை இருக்கும். பொதுத் தொண்டு செய்து, பிரபலமாக விரும்புவர்.

பெரிய குடும்பத்தில் சகோதர சகோதரிகளுடன் பிறந்திருப்பர். காதல் விவகாரம் சிறு வயதிலேயே இடம் பெறும். இவர்கள் என்ன எப்போது செய்வார் என எவராலும் முன்கூட்டி அறிய முடியாது.

படிப்பதிலும், தொழிலிலும் மனம் மகிழ்ச்சியாக இருக்கும். விஞ்ஞானம், கணினி பொறியியல், மின்சாரம், மொழியியல், பத்திரிகைத் துறைகளில் பட்டம் பெறலாம். மருத்துவராகலாம். பொருளாதாரம் படித்து ஐ.ஏ.எஸ். ஆகலாம். விளையாட்டு வீரர் ஆகலாம். அரசிலோ, தனியார்அலுவலகத்திலோ வேலை பார்த்தாலும் சொந்தத் தொழில் செய்வதையே நாடுவர்.

நரம்புத்தளர்ச்சி, இரத்தக் குறைவு இருக்கும். வாதம் தாக்காமலிருக்க யோகாசனப் பயிற்சி செய்தால் நல்லது. கை, கால் நடுக்கம், வயிற்றுக் கோளாறு, மூலம் போன்ற நோய்கள் தாக்கலாம்.



## பெண்களே அவதானம்

பெண்களுக்கு நண்பர்களாகவோ அல்லது காதலர்களாகவோ இருந்துவிட்டுப் பிரிய நேர்ந்தால் பிரிவு மட்டும் துயரத்தை அளிப்பதில்லை. சில நேரங்களில் நண்பர்களோ அல்லது காதலரோ கூடத் துயரத்தை அளிக்கலாம். அதாவது, பழகும்போது ஒன்றாகஎடுத்துக் கொண்ட ஒளிப்படங்களைக் காட்டி பெற்றோரிடமோ அல்லது கணவரிடமோ காண்பித்து விடுவேன் என்று மிரட்டுவது, காதல் கடிதங்கள் அல்லது வாழ்த்து அட்டைகளை வைத்துக் கொண்டு மிரட்டுவது போன்றவற்றில் ஈடுபடலாம். சில கொடூர மனம் படைத்த ஆண்கள், தனது தோழியின் ஒளிப்படத்தை இணையதளத்தில் போட்டு விலை மாதராகச் சித்திரிப்பது போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். அதில் கைபேசி எண்ணையும் போட்டு அவர்களுக்கு பிரச்சினையை உண்டு பண்ணி விடுகிறார்கள். [illegible] வந்துவிடுமே என்று எண்ணி முறைப்பாடுகள் கொடுக்க முன்வருவதில்லை. எனவே பெண்ணே! நண்பராக இருந்தாலும் சரி, காதலராக இருந்தாலும் சரி எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருப்பது மிகவும் நல்லது. பின்னால் ஏற்படும் விளைவுகளுக்கு இவை பாதுகாப்பைத் தரும்.



## பெண்கள் ஏன் மூக்கு, காது குத்துகிறார்கள்?



[illegible] பெண்களின் மூக்கு காற்றுக்கு சக்தி அதிகம். இதனால் [illegible] அசௌகரியமாக இருக்கும் இதனால் பெண்கள் மூக்கு குத்திக் கொள்ளும் வழங்கம் உருவானது. மூக்கு குத்துவதினாலும், காது குத்துவதினாலும் உடலிலுள்ள வாயுக்கள் வெளியேறுகின்றன. உடலிலுள்ள வெப்பத்தைக் கிரகித்து நீண்ட நேரம் தன்னுள்ளே வைத்திருக்கக்கூடிய ஆற்றல் தங்கத்துக்கு உண்டு. மூக்குப் பகுதியில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அந்த துவாரத்தில் தங்க மூக்குத்தி அணிந்தால், அந்தத் தங்கம் உடலில் உள்ள வெப்பத்தை கிரகித்து தன்னுள்ளே ஈர்த்து வைத்துக் கொள்ளும் சக்தியைப் பெறும். அதுமட்டுமல்ல, மூக்கின் மடல் பகுதியில் ஒரு துவாரம் ஏற்பட்டால் அதன் மூலம் நரம்பு மண்டலத்தில் உள்ள கெட்ட வாயு அகலும். சிறுமியர் மூக்குத்தி அணிவதில்லை. பருவப் பெண்களே அணிகிறார்கள். ஏனெனில் பருவ வயதை அடைந்த பெண்களுக்கு கபாலப் பகுதியில், அதாவது, தலைப் பகுதியில் சிலவிதமான வாயுக்கள் இருக்கும். இந்த வாயுக்களை வெளிக் கொண்டு வருவதற்குத்தான் மூக்குக் குத்தப் படுகிறது. மூக்குக் குத்துவதால் பெண்கள், சளி, ஒற்றைத் தலை வலி, மூக்கு சம்பந்தமான தொந்தரவுகள், பார்வைக் கோளாறு கள், நரம்பு சம்பந்தமான நோய்கள், மனத்தடுமாற்றம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள். அந்தக் காலத்தில் ஆண்களும் காது குத்திக் கொள்வது இதனால்தான். இந்தக்காலத்திலும் ஆண்கள் காது குத்தும் வழங்கம் வந்து விட்டது. ஆனால் கவரிங்கால் எந்த பிரயோசனமும் இல்லை வெறும் அழகுக்கு மட்டுமே தவிர ஆரோக்கியத்துக்குச் சரிவராது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராமசந்திரன் இரவீந்திரன்**

(உரிமையாளர்– தெல்லிப்பழை கோல்டன் பாமசி)


அன்னை மடியில் 20.04.1944 | ஆண்டவன் அடியில் 28.01.2014

பாரினில் பலர் போற்ற எம்மை
வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்றென்ன பல ஆண்டுகள்
சென்றாலும் ஆறாது உங்கள் துயர்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

தகவல்: குடும்பத்தினர் (லண்டன்) (54186) (45.7)

## பத்தாம் வருட நினைவுகள்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**சின்னத்துரை மகாலிங்கம்**

(தொழில் நுட்பவியல் கல்லூரி - முன்னாள் பிரதம எழுதுநர், கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணய சங்கம், கொக்குவில்.

மலர்வு 09.06.1949 | உதிர்வு 18.01.2005

திதி: 28.01.2015

நிறைந்திருந்த எம் செல்வம்
நினைக்கா நொடிப் பொழுதில் - எம்
கண்முன்விட்டு நீங்கினாலும் - உங்கள்
நிழலினை எம் நினைவுகள் என்றும் பின்தொடரும்....
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

நிஜமாய் 01 . 08 . 1970



நினைவாய் 07 . 02 . 2014

**அமரர் கந்தையா ரகுநாதன்**

திதி: தைமாத பூர்வபட்ச நவமி

புன்னகை தவழும் உன் முகமும்
இராகம் இசைக்கும் உன் பேச்சும்
மண்ணுக்கு நோகா மென் நடையும்
மனதுக்குள் வந்து! கண்களால் சொரியுதுவே!...
கண்ணா நீர் எனக்கு கவிதை! மகனே நீ எனக்கு மலை!
தம்பி நீ எமக்குத் தங்கம்! அண்ணா நீர் எமக்கு அரண்!
இத்தனை இயல்புகளாய் எங்களுடன் இருந்தவனே
இனிமேலும்....... தூண்டா மணிவிளக்காய்
துணையாகி நம் வாழ்வில் தூய ஒளி தந்திடுவாய்......

இல.23, அணைக்கட்டு வீதி,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

தாய் (பவளயம்மா),
மனைவி,
சகோதர சகோதரிகள்.

# செய்திகள்

## தெய்வீக இசையரங்கு

தென்மராட்சி,ஜன.28

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தெய்வீக இசை யரங்கு இடம்பெறவுள்ளது.

இதுவரை காலமும் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மிகச் சொற் பொழிவுகள் இடம்பெற்று வந்ததாக வும் அடியார்களின் வேண்டுகோளின் பிரகாரம் இந்த வாரம் தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் தெய்வீக இசை யரங்கு நடத்தப்படவுள்ளதாகவும் ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

முதலாவது இசையரங்கில் யாழ். இந்துக் கல்லூரி சங்கீத ஆசிரியை நுண்கலை மாணி கலாவித்தகர் திருமதி வடிவாம் பிகை சுபதாஸ் பங்குபற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். (வ–9)

## செயலமர்வு பிற்போடல்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கு இன்றும் நாளையும் நடைபெறவிருந்த செய லமர்வு ஒத்தி வைக் கப்பட்டுள் ளது.

இதற்கான புதிய திகதிகள் பின் னர் அறிவிக்கப்படும் என்று யாழ்ப் பாண வலயக் கல் விப் பணிப்பாளர் அறிவித்துள் ளார். (வ)

## நீண்டநாள் கொள்ளையர்கள் மூவர் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு, ஜன.28



கடந்த சில தினங்களுக்கு முன்னர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத் துடன் தொடர்புடைய சந் தேகநபர்கள் மூவரை ஞாயிற் றுக்கிழமை களுவாஞ்சிக் குடி பொலிஸார் கைது செய் ததுடன் கொள்ளையிடப் பட்ட பொருள்கள் மற்றும் பணத்தையும் மீட்டுள்ளதாக களுவாஞ் சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி யிலுள்ள 2 வீடுகளில் பெரியளவில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர் பாக மட்டக்களப்பு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் ஆலோச னையுடன் களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக் கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த கருணா ரத்தினவின் வழிகாட்ட லில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுனத் நந்தவல தலைமை யிலான பொலிஸ் குழு விசாரணை களை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேக நபர்களைக் கைது செய்த துடன் குறித்த சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட பொருள்களையும், பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து 2 ஐ போன்கள் மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகள், நாலரைப் பவுண் தங்க நகைகள், மற்றும் கமரா, ஒரு லட்சம் ரூபா பணம் போன்றவைகள் மீட்கப்பட்டுள் ளன.

குறித்த 3 சந்தேகநபர்களில் பிரதான சந்தேக நபர் திருக்கோவில் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு மாமாங் கத்தில் திருமணம் செய்து வசிப்பவர் என்றும்– ஏனைய 2 சந்தேகநபர்களும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்றும்– ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களை களுவாஞ்சிக் குடி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வுள்ளதாகவும், தொடர்ந்து இது தொடர் பான விசாரணைகள் இடம்பெற்று வருவ தாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

CMK

## ஞானச்சுடர் தை மாத இதழ் வெளியீடு

வடமராட்சி,ஜன.28

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 205 ஆவது மலரான தைமாத இதழ் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில்– ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடை பெறவுள்ளது.

விழாவில் வெளியீட்டுரையை தெல்லிப்பிழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகனும், மதிப்பீட்டுரையை புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனும் நிகழ்த்துவார்கள். (வ–173)

## வேலன் சுவாமிகளின் தரிசனம்

அமெரிக்க ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு போதி நாத வேலன் சுவாமிகள் தரிசனம் அளிக்கவுள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கோண்டாவில் சிவபூமி பாடசாலை மண்டபத்தில் அமைந்துள்ள சிவபூமி மண்டபத்தில் ரிஷி தொண்டுநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு, சுவாமிக ளின் நல்லாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சிவபூமி அறக்கட்டளையின் நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

## விதிமுறைகளை மீறிய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஜன.28

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனத்தைச் செலுத்திய சாரதியொருவருக்கு கடந்த 22 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில்15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. (வ–9)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி,ஜன.28

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் பிரதம விருந்தினராகவும் கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் அமல்ராஜ் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (வ–173)

◆ ◆ ◆

தென்மராட்சி, ஜன.28

மந்துவில் றோ.க.த.க. பாடசாலை இல்ல மெய் வன்மைப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறும். அதிபர் சி.பவனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி பாரதி வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் க.இரதஜேந்திரமும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் க.கதிரேசுவும் கலந்து கொள்வர். (வ–9)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஜன.28

இமையாணன் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடை பெற வுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் கலந்துகொள்வார். (வ)

## குருதிக்கொடை வழங்கக் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.28

புத்தளம் பொது மருத்துவமனையில் சேர்க்கப் படும் அவசர நோயாளர்களின் நலன் கருதி குருதிக் கொடை வழங்குமாறு மருத் துவமனை நிர்வாகத் தினர் கோரிக்கை விடுத்துள் ளனர்.

மருத்துவமனை குருதிக் காப்பகத் தில் கையிருப்பு இல்லாத தால் குரு திக்கொடை வழங்குவோர் மனமு வந்து வருகை தந்து குருதிக் கொடை வழங்கி உதவு மாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (வ–9)

# கிணற்று நீரில் ஒயில் கலந்துள்ளதை 2012 ஆம் ஆண்டு கண்டறிந்தோம்

## எவரும் அதனைக் கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் முகாமையாளர்

கு.நிறோஜன்



ஒரே மன வேதனை. மன உளைச்சலாக இருக்கு. ஒவ்வொரு நாளும் விடிந்தவுடன் வீட்டுக் கிணற்றை எட்டிப் பார்க்கிறதே வேலையாகிவிட்டது. போதாக்குறைக்கு விடியும் போதே தண்ணியெடுக்க பரலையும் போத்தலையும் எடுத்துக் கொண்டு ஓடவேண்டியிருக்கு. எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஓடப் போகிறமோ தெரியாது என்று கூறிச் சினந்து கொள்கிறார் சுன்னாகம் பிரதேச செயலகத்தை அண்மித்து வசிக்கும் ஒரு குடும்பஸ்தர்.

சுன்னாகம் மின்சார சபை வளாகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையத்திலிருந்து நிலத்தில் விடப்பட்ட கழிவு ஒயில் தற்போது நிலக்கீழ் நீருடன் இணைந்து கிணறுகளில் ஊற்றெடுக்கிறது என்று பலராலும் குற்றம் சுமத்தப்படுகிறது. அது தொடர்பில் நீதிமன்றிலும் வழக்கு இடம்பெற்று வருகிறது. சுன்னாகம் மின் நிலையத்தை மூட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவும் உள்ளது.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடங்கியுள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சுமார் ஆயிரத்து 350 கிணறுகளில் ஒயில் கலந்திருப்பதாக இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதனால் 26 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறே வலி. வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 800 கிணறுகளில் ஒயில் பாதிப்பு உள்ளதென்றும் சுமார் 11 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நாளாந்தம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட லீற்றர் தண்ணீர் கொள்கலன்களில் நிரப்பி விநியோகிக்கப்படுகிறது. ஆனால் அவ்வாறு வழங்கப்பட்டாலும் சுமார் 10 நிமிடங்களில் தண்ணீர் முடிந்துவிடுகிறது என்று மக்கள் குறை கூறுகின்றனர். சுமார் 10 தொடக்கம் 15 குடும்பங்களுக்கு ஒரு கொள்கலன் வைக்கப்படுகிறது.

மின் உற்பத்தி நிலையத்தை மூடவேண்டும் என்பது பலரது கோரிக்கையாக அமைந்து சுகாதாரத்துறையினர், பிரதேச சபையினர் உட்பட மக்கள் அனைவரும் ஒன்றித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துடன், பாடசாலை மாணவர்களும் போராட்டம் நடத்தியிருந்தனர். தவிர சில அரசியல்வாதிகள், சுற்றுச்சூழல் அமைப்பினர் மத்திய அரசுடன் பேசியிருந்தனர்.

குற்றம் சாட்டப்படுபவர்களில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரும் உள்ளடங்குகின்றனர். அவர்கள் முன்னர் மேற்கொண்ட ஆய்வை நீதிமன்றினால் கோரப்படும் வரையிலும் வெளியிடாது இருந்தனர் என்று கூறப்படுகிறது. இந்தப் பிரச்சினை மிகப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஒயில் பரவலைத் தடுக்க என்ன வழி உள்ளது என்பது தொடர்பில் இதுவரை மாற்றுவழி எதுவும் கண்டறியப்படவில்லை.

"அங்குள்ள கிணறுகளில் ஒயில், கிறீஸ் பரவுகிறது என்பதை 2012 ஆம் ஆண்டே நாம் கூறிவிட்டோம். முதன் முதலில் அதனைக் கண்டறிந்து கூறியது யாழ். பிராந்திய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரான நாங்களே. ஆனால் நாங்கள் அந்த ஆபத்துக் குறித்துக் கூறும் போது அங்குள்ள, இந்த விடயத்துடன் தொடர்புடைய சுகாதார அதிகாரிகள், பிரதேச சபையினர் மட்டுமல்ல பொதுமக்கள்கூட எம்மைக் கிண்டலடித்து நையாண்டி புரிந்தனர் தவிர, கழிவு ஒயில் கிணற்றில் கலப்பது தொடர்பான விடயத்தைத் தாம் தான் கண்டறிந்ததாகவும் அண்மைக்காலமாக அறிக்கைகள் வேறு விடுகின்றனர்" என்று கூறுகிறார் இ.ஜெகதீசன். யாழ்.பிராந்திய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளரான அவர், அங்கு என்ன நடந்தது, இந்த இடருக்குத் தம்மால் செயற்படுத்தக்கூடிய தற்போது வரையான நடவடிக்கைகள் என்ன என்பதையும் கூறியுள்ளார்.

சுன்னாகத்திலிருந்து கந்தரோடை, நவாலி, சண்டிலிப்பாய் என்றவாறு பல இடங்களுக்கும் சுன்னாகம், ஊரெழு ஆகிய இரண்டு இடங்களிலிருந்துதான் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. 2012 ஆம் ஆண்டு அந்தக் கிணறுகளில் ஒயில், கிரீஸ் என்பன கலந்திருப்பது எம்மால் உறுதிப்படுத்தப்பட்டது. அதனைச் சுன்னாகத்திலுள்ள கலைவாணி ச.ச.நிலையத்தில் 2012 ஓகஸ்ட் 27 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் வைத்து பிரதேச சபையினர், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், பொதுமக்கள் அனைவருக்கும் எம்மால் தெளிவுபடுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் வெறுமே நாம் கூறிய உண்மையைக் கவனத்தில் கொள்ளவில்லை. எள்ளி நகையாடினர். ஆனாலும் பின்னர் சண்டிலிப்பாய் உள்ளிட்ட இடங்களுக்குச் சுன்னாகத்திலிருந்து குடிதண்ணீர் விநியோகம் செய்வதை நிறுத்திவிட்டோம். பதிலாக ஊரெழுவில் இருந்து வழங்கப்படுகிறது. ஒயில் பிரச்சினை தொடர்பில் பலருக்கும் எடுத்தும் கூறப்பட்டது. 'உதயன்' பத்திரிகையும் அவ்வப்போது செய்தி வெளியிட்டது.

**சுகாதாரப் பகுதியினர், பிரதேச சபையினர் அந்த நீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கியும் அது எல்லோராலும் இதுவரைப் பின்பற்றப் படவில்லை.**

ஒயில் தாக்கத்தை அறிய 2013 ஆம் ஆண்டு 3 மில்லியன் ரூபா ஒதுக்கி, மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியிலிருந்து வடக்கு நோக்கி 2 கிலோ மீற்றருக்கும் தெற்கு நோக்கி அரைக் கிலோ மீற்றருக்கும் உள்ளிட்ட இடங்களிலுள்ள கிணறுகளில் தண்ணீர் பரிசோதிக்கப்பட்டது. அவற்றில் தெற்கை விட வடக்கு நோக்கிய பகுதியில்தான் அதிக கிணறுகளில் ஒயில் தொற்று இனங்காணப்பட்டது. 2014 ஜூலைவரை அந்தப் பரிசோதனையை நாம் மேற்கொண்டோம். சுன்னாகம் மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்யப்படும் இடமும் பார்வையிடப்பட்டது. அதன்போது அங்கு நிலத்தில் ஒயில் விடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அங்கு சென்றிருந்தவர்கள் அதனைப் புகைப்படம் எடுத்திருந்தனர்.

அங்கு ஆரம்பத்தில் கிணறுகளில் மிகக் குறைந்த அளவில்தான் ஒயில் காணப்பட்டது. அதுவரையான காலப்பகுதிக்குரிய பரிசோதனை ஆய்வு புத்தகமாகத் தயாரிக்கப்பட்டது. ஆனால் அடுத்த மாதத்திலிருந்தே (கடந்த ஓகஸ்ட்) அங்குள்ள பலரது கிணற்று நீரில் கண்ணுக்குத் தெரியுமளவுக்கு ஒயில் நீரில் கலக்கத்தொடங்கியது. அதன்பின்னரே மெல்ல மெல்ல அனைவரும் விழித்துக்கொண்டனர். குழாய்மூலமாக நீர் வழங்குவதற்கு நீர்த் தாங்கியை அமைக்க, வலி.தெற்குப் பிரதேச சபை இடம் தந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் ஓரளவு மகிழ்ச்சியைத் தந்தாலும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி முடிப்பதற்கு சுமார் 2 வருடங்களாவது தேவையென்று கூறப்பட்டுள்ளது.

அதுவரை தண்ணீர்த் தாங்கிகளை வைத்து பொதுமக்களின் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது வலிந்ததான ஒரு நடவடிக்கையாகவே இருக்கப் போகிறது. மக்கள் பாதிக்கப்படுவது, இடையூறுகளை எதிர் கொள்வது தொடரவுள்ளது என்பது தெரிகிறது. இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கலாம், என்ன செய்வது என்பது உள்ளிட்ட விடயங்களை ஆராயவென வடமாகாண சபையினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது தவிர அரசும் ஒரு குழுவை நியமித்து அது தொடர்பில் ஆராய உத்தரவிட்டுள்ளது. இந்தக் குழுக்கள் எவ்வளவு விரைவில் தமது ஆய்வு முடிவைச் சமர்ப்பிக்கின்றனவோ, அதுதான் தற்போதைய தேவையாகவுள்ளது. அதன் பின்னரான செயற்திட்டங்களே முக்கியம் பெறவுள்ளன.

இங்கு ஒயில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிணறுகளில் மிக அதிகமானவை உரிய முறையில் பரிசோதனை செய்யப்படவில்லை. காரணம் அதற்குரிய வசதி, வளம் இங்கு இல்லை. ஒயில் பரிசோதனைக்கு என்று வடக்கில் எந்தவொரு அரச, தனியார் நிறுவனமும் இல்லை. எனவே பரிசோதனை செய்வதற்கு உரிய அதிகாரிகள், அதற்கான பிரிவு ஒன்றை யாழ்ப்பாணத்தில் உடனடியாக அமைக்க வேண்டிய தேவையுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஒயில் கண்ணுக்குத் தெரியாத நிலையிலேயே, தண்ணீரில் கலந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் கூறியிருக்கிறார்கள். அதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் ஓரளவு கண்ணுக்குப் புலப்படுமளவுக்கு அடையாளப்படுத்தக்கூடிய இடங்களையே மக்கள் கண்டறிந்து ஒயில் தொற்று இருப்பதாகக் கூறுகிறார்கள். அவ்வாறிருக்கையில் இன்னமும் எத்தனை ஆயிரம் வீட்டுக் கிணறுகளில் கண்ணுக்குப் புலப்படாத நிலையில் ஒயில் தொற்று ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்படவில்லை. அதனைக் கண்டறிய பரிசோதனை நிலையமொன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஒயில் தொற்றுக்குள்ளான தண்ணீரை பயன்படுத்தக்கூடாது. முக்கியமாக குடிக்கவோ உணவு சமைக்கவோ பயன்படுத்தக்கூடாது. ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகளும் அதனை அருந்துவது ஆபத்தானது. கொதிக்க வைப்பதனால் ஒயிலின் தாக்கம் அற்றுப்போக வாய்ப்பில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அங்கு இன்னும் பல இடங்களில் மக்கள் ஒயில் கலந்த நீரைச் சமையலுக்குப் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது. சுகாதாரப் பகுதியினர், பிரதேச சபையினர் அந்த நீரைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தல் வழங்கியும் அது எல்லோராலும் இன்னமும் பின்பற்றப்படுவதாகத் தோன்றவில்லை. அதனால் உடல் நலக் கேடு மறைமுகமாகவும் ஏற்படும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். ஒயில் பாதிப்பை எக்காரணம் கொண்டும் தற்போது அகற்றுவதில் சாத்தியமற்ற நிலையே காணப்படுகிறது. எனவே அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க, வேண்டிய நடவடிக்கைகளை, திட்டம் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசு உரிய நடவடிக்கையை விரைவில் எடுக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி செயலகத்தின் 109 வாகனங்கள் மாயம்

### 80 வாகனங்கள் இதுவரை மீட்பு

கொழும்பு, ஜன.28

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான சுமார் 80 வாகனங்கள் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"109 வாகனங்கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை."– என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண கூறினார்.

"ஜனாதிபதி செயலகத்தில் 752 வாகனங்கள் காணப்பட்டன என்று பதிவுகள் கூறுகின்றன. காணாமற் போன வாகனங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது"– என்று அவர் குறிப்பிட்டார்.

"அரச வாகனங்களை வைத்திருப்பது சட்டத்துக்கு முரணானது. அவ்வாறான நபர்கள் இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் கைது செய்யப்படுவார்கள்"– என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

"இவ்வாறானவர்கள் தராதரம் பாராது கைது செய்யப்படுவார்கள். வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்படும்"– என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளர் நாட்டை விட்டு வெளியேறிச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதி செயலக போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளராகக் கீர்த்தி சமரசிங்க திஸாநாயக்க பணியாற்றி வருகின்றார். ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான பல வாகனங்கள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து அதன் பணிப்பாளர் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது என கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (ற)

## போதைப்பொருள் கடத்துவோர் விவரங்களை வெளிப்படுத்துக

### பொதுபல சேனா கோரிக்கை

கொழும்பு, ஜன.28

இலங்கைக்குள் போதைப் பொருள் கொண்டுவருபவர்களின் விவரங்களை வெளியிட வேண்டும் என்று கோரியுள்ளது பொது பல சேனா அமைப்பு.

எவ்வளவு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் பொது பல சேனா கசப்பான உண்மைகளைச் சொல்ல அஞ்சாது என்று அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே கூறினார்.

"பொதுபல சேனா போதைப் பொருள் மற்றும் ஊழல் மோசடிகள் குறித்துப் பேசியது தேர்தல்களை இலக்கு வைத்து அல்ல. 2013ஆம் ஆண்டு போதைப் பொருள் நகரமான கொலன்னாவையில் நாம் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தோம். போதைப் பொருளால் ஏற்படக் கூடிய அழிவுகள் குறித்து மாணவர்கள், இளைஞர்களுக்கு தெளிவூட்டல்கள் மேற்கொள்ள வுள்ளோம். இந்தச் செயற்பாடுகள் பௌத்த விஹாரைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கெனவே உறுதியளித்த படி போதைப் பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்"– என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## கே.பியை விசாரித்தால் ஆபத்து!

### தேசிய சுதந்திர முன்னணி கூறுகின்றது



கொழும்பு, ஜன.28

விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கிய உறுப்பினரான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை திறந்த நீதிமன்றத்தில் விசாரிப்பது மிக ஆபத்து என்று தெரிவித்துள்ளது தேசிய சுதந்திர முன்னணி.

இவ்வாறு விசாரணை செய்வதன் மூலம் புலனாய்வுத் துறையின் பல இரகசியங்கள் வெளியாகும் ஆபத்து உள்ளது என்றும் அந்த முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

"கே.பியை பகிரங்க நீதிமன்றில் விசாரிக்கும்போது பல இரகசியங்கள் வெளியாகும் இது இலங்கை புலனாய்வுத் துறையின் விசாரணைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்"– என்று அந்த முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் கூறியுள்ளார்.

"ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் கே.பியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கோருவது புலம்பெயர்ந்தவர்களுக்கு வாய்ப்பை அளிக்கும் செயல்"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## வியப்பை ஏற்படுத்துகிறது பிரதம நீதியரசரின் செயல்

### சாடுகின்றது நீதிமன்ற சேவைகள் சங்கம்

கொழும்பு, ஜன.28

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான சமயம், பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அலரி மாளிகையில் இருந்தமை தொடர்பில் வியப்படைவதாகத் தெரிவித்துள்ளது நீதிமன்ற சேவைகள் சங்கம்.

மிக முக்கியமான பிரச்சினையின்போது நீதிமன்றம் பக்கச் சார்பின்றிச் செயற்பட்டிருக்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் பிரதம நீதியரசர் நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவார் என்று நம்புகின்றோம் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகிய சமயம் அலரி மாளிகையில் இடம்பெற்ற சதித் திட்ட முயற்சி தொடர்பான விசாரணைகள் குறித்து நீதிமன்ற சேவைகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு விரிவாகக் கலந்துரையாடியது. அதன் பின்னர் அந்தச் சங்கம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## முறையற்ற விதங்களில் நிதி சேகரிப்பு வேண்டாம்

### பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சர் அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன.28

பாடசாலைகளில் முறையற்ற விதத்தில் நிதி சேகரிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று இன்று (நேற்று) மாலை வெளியிடப்படுகின்றது – என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று தேசிய பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக பாடசாலைகளின் நடவடிக்கைகள் அமையக்கூடாது. கடந்த காலங்களை விடவும் இந்த ஆண்டு கல்வி அபிவிருத்திக் காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு கருத்துத் தெரிவித்த இராஜாங்க கல்வி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், "பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா மற்றும் அமைச்சர் வருகை போன்ற விடயங்களுக்காக நிதி வசூலிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்."– என்று வலியுறுத்தினார்.

"பாடசாலை நிகழ்வுகளை மிகவும் எளிமையாக நடத்துவதே சிறந்தது. அதிக பணம் அறவிடுவதால் பெற்றோர்கள் மிகுந்த சிரமப்படுவார்கள். எந்த நிகழ்வாக இருந்தாலும் எளிமையாக நடத்துங்கள்"– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ற)

## லலித், குகன் குறித்து முறைப்பாடு

கொழும்பு, ஜன.28

லலித் மற்றும் குகன் ஆகியோர் காணாமற்போகச் செய்யப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் சோசலிஸக் கட்சி முறைப்பாடு ஒன்றை பதிவு செய்யவுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு வழங்கப்படவுள்ளது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (ற)

## யோஷித்தவை விலக்க மறுக்கின்றது கடற்படை!

### விலகல் கடிதத்தை ஏற்பதற்கு மறுத்துள்ளாராம் கடற்படைத் தளபதி

கொழும்பு, ஜன.28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித்த ராஜபக்ஷ கடற்படையில் இருந்து விலகுவதாக வழங்கப்பட்ட கடிதத்துக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா அனுமதி வழங்கவில்லை என்று தெரியவருகின்றது.


ஜனாதிபதித் தேர்தலுக்கு மறுநாள் – கடந்த 9ஆம் திகதி யோஷித்த ராஜபக்ஷ கடற்படை சேவையில் இருந்து விலகுவதாக கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். எனினும் அதற்கு கடற்படைத் தளபதி அனுமதி வழங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, யோஷித்த கடற்படையில் இணைந்து கொண்ட முறை, கடமையில் இருந்த வேளை அரசியல் செய்தமை உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜே.வி.பி. பாதுகாப்புச் செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளதுடன், அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ற)

## அரசியல்

# நெடுந்தீவு மக்களுக்கும் இப்போது சனி மாற்றம்

### பீடித்த திருஷ்டி விலகி வருகிறது என்கிறார் வடமாகாண முதல்வர்



யாழ்ப்பாணம், ஜன. 28

நெடுந்தீவை இதுவரை காலமும் இராணுவமும் அதனுடன் சேர்ந்த இராணுவ அனுசர ணைச் சக்திகளும் ஆக்கிரமித்திருந்தன.அதாவது சனி பகவானின் திருஷ்டி பீடித்திருந்தது. சனி மாற்றத்தின் பின் விடியத் தொடங்குவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சனிமாற்றம் நெடுந்தீவு மக்களுக்கே நன்மையைக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் முதல்தடவையாக நெடுந்தீவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இதன் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பில், முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை இராணுவமும் அதனுடன் சேர்ந்த இராணுவ அனுசரணைச் சக்திகளும் நெடுந்தீவை ஆக்கிரமித்தன. இதனைத் தொடர்ந்து இங்கு வசித்து வந்த பெரும்பாலான மக்கள் யாழ் குடாநாட்டுக்கோ, வெளிநாடுகளுக்கோ புலம் பெயர்ந்து சென்று விட்டார்கள். பொருளாதார வசதிகள் அருகிய ஒரு நிலையிலேயே பெரும்பாலான எங்கள் தமிழ் மீனவர் சமூக மக்கள் பலத்த சிரமங்களிடையே வாழ்ந்து வருவதாக அறிந்து கொண்டேன்.

பல அடிப்படை வசதிகள் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்றும் அறிந்தேன். அதனால் தான் கிறிஸ்மஸ் தாத்தா வருவது போல் சில பல பரிசுப் பொருள்களை வாகனங்களில் சுமந்து கொண்டு வந்துள்ளோம்.

வடமாகாண சபையானது உங்கள் ஒவ்வொருவருக்கும் உரிய சபை. அதில் அரசு நடத்தும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு கிடையாது. எதிர்க்கட்சியினர் வென்ற இடங்களையும் நாங்கள் ஒரே மாதிரியாகத் தான் அபிவிருத்தி செய்து வருகின்றோம். ஏனெனில் எதிர்க்கட்சியினரும் எங்கள் சொந்த உறவுகள்தான். கட்சியைக் காட்டி கல்நெஞ்சர்களாக மாற இடமளிக்கக்கூடாது.

முஸ்லிம் மக்கள், மலையக மக்களிடையே நான் ஒன்றை அவதானித்துள்ளேன். ஒரு சகோதரர் ஒரு கட்சியிலும் மற்றவர் இன்னொரு கட்சியிலும் இருப்பார்கள். யார் வந்தாலும் சகோதரர்கள் தங்கள் குடும்பங்களைப் பார்த்துக் கொள்வார்கள். நாங்களோ கட்சிக்காகக் காடைத்தனங்களில் ஈடுபட பின் நிற்கமாட்டோம். இந்த நிலை மாறவேண்டும்.

உங்கள் தீவு மிக அழகான தீவு. பல வளங்களைக் கொண்ட தீவு. துரதிர்ஷ்ட வசமாக சனி பகவானின் திருஷ்டி சில காலம் உங்களைப் பீடித்திருந்தது. சனி மாற்றத்தின் பின் விடியத் தொடங்குவதை நாம் அவதானிக்கலாம். சனி மாற்றம் முக்கியமாக உங்களுக்கே நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது என்பது எனது கணிப்பு.

நெடுந்தீவு சுற்றுலாவுக்குப் பிரசித்தமான இடமாகும். வடக்கு மாகாண சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய காலம் கனிந்து வருகின்றது. எமது சுற்றுச் சூழலை நாங்கள் வித்தியாசமான ஒரு சுற்றாடலுக்கு உட்படுத்தவேண்டும். பெரிய சுற்றுலா ஹோட்டல்களை நிர்மாணிப்பதிலும் பார்க்க 'கபானா' போன்ற குடிசைகளை எமது பாரம்பரியத்திற்கும், சுற்றாடலுக்கும், தட்ப வெட்ப நிலைக்கும் ஏற்றவாறு நவீன உள்ளக வசதிகளுடன் கட்டுவதே சிறந்தது. அதற்குரிய கட்டுமானங்கள், கலவைகள் போன்றவை உள்ளூரில் இருந்தே பெற வழிவகுக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கு இப்பொழுது திறக்கப்பட்டு விட்டது. கிடைத்ததைச் சுருட்டுவோம் என்ற எண்ணத்தில் பலர் வருவார்கள். எமது சபையுடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் என்று கூறிவைக்கின்றேன்.

இனி வருங்காலம் எமது மக்களின் காலம். கட்சிகள் காலம் அல்ல. எம் மக்கள் தான் எம் கட்சி. அவர்கள் நலமே எமது குறிக்கோள் என்ற பாணியில் அலுவலர்களாகிய நீங்கள் நடந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றேன். உங்களைப் போன்ற அலுவலர்கள் என்னிடம், இராணுவத்திடம் கையளிக்க கோரிய கோப்புக்களை அனுப்பி வைத்ததால் தான் நான் அவர்கள் கோரிக்கையை மறுக்கக் கூடியதாக இருந்தது. மக்கள் மத்தியில் இராணுவத்திற்கு இடமில்லை என்பது எனது கருத்து.

எனவே இன்று இந்த நெடுந்தீவுப் பயணம் எங்கள் யாவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இனியும் நீங்கள் விடுபட்ட ஒரு சமூகமாக உங்களை எண்ண வேண்டாம். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் வாழ்வை வசந்தமாக்க நாங்கள் காத்து நிற்கின்றோம்.

பணம் ஒரு பிரச்சினைதான். ஆனால் மனம் இருந்தால் பணமும் வரும் குணமும் மாறும் நான் குணம் என்று கூறியது இது வரை காலமும் உங்களை ஆட்டிப் படைத்தோரின் குணத்தை – என்றார் முதலமைச்சர்.

(த–5–7–21)

# தமிழ் கூட்டமைப்பின் ஆட்சி கிழக்கில் அமையும் சாத்தியம்

### ஆதரவு வழங்கத் தயார் என மு.கா. அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.28

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தால் அதற்கு ஆதரவளிப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம். முதலமைச்சர் பதவியையும் விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றோம். – இவ்வாறு தெரிவித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

அந்தக் கட்சியின் பொதுச் செயலரும் இராஜாங்க அமைச்சருமான ஹசன் அலி இதுகுறித்துக் கூறும்போது, "ஆதரவு வழங்கத் தயாராக இருக்கிறோம். முதலமைச்சர் பதவியையும் விட்டுக் கொடுக்கின்றோம். ஆனால் வேறு அமைச்சுப்பதவிகள் எதனையும் ஏற்க முடியாது"– என்று கூறினார்.

"முஸ்லிம் சமூகத்துக்கு சேவை செய்யவே நாம் அமைச்சுப் பதவிகளை ஏற்கின்றோம். தேசிய அரசில் அமைச்சுப் பதவிகள் வகிப்பதால் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது ஏற்றுக்கொள்ள முடியாதது"– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கிழக்கு மாகாண சபையின் பெரும்பான்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்தாலும், தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது. தமிழ்க் கூட்டமைப்பினர் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைத்தால் நாம் அவர்களுக்கு ஆதரவளித்துச் செயற்படுவோம்"– என்றும் அவர் தெரிவித்தார்.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு அவர்கள் முன்வைக்கும் காரணம் நியாயமாக இருக்கலாம். அதே போல் எமக்கும் எம் பக்க காரணங்கள் நியாயமானதே. எனவே கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பு ஆட்சி அமைக்க முடியுமெனின் நாம் ஆதரவளித்து செயற்படத் தயாராகவே உள்ளோம். முதலமைச்சுப் பதவியை அவர்களே எடுத்துக்கொள்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நாம் கிழக்கு மாகாண அமைச்சுப் பதவிகள் எதையும் ஏற்க மாட்டோம். நாம் வெறும் உறுப்பினர்களாகவே இருப்போம்"– என்று அவர் தெரிவித்தார்.

(ற–10)

## மரண அறிவித்தல்



### திருமதி.சிவபாக்கியம் செல்லத்துரை

ஏழாலை தெற்கு களபாவோடையை பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு நாவல்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சிவபாக்கியம் செல்லத்துரை நேற்று 27.01.2015 செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் இராசம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.01.2015 புதன்கிழமை பி.ப. 02.00 மணியலவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாவல்கட்டை
கோப்பாய் வடக்கு கோப்பாய்

தகவல்
குடும்பத்தினர்

செய்திகள்

# வலி.வடக்கு மக்களை நாளை சந்திக்கிறார் பிரிட்டன் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 28

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைச் சந்திப்பதற்காகப் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹியுகோ ஸ்வெயர் யாழ்ப்பாணத்துக்கு நாளை வியாழக்கிழமை வருகை தரவுள்ளார். இதன்போது வடக்கில் நிலைமை தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் அவர் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், இங்குள்ள தற்போதைய நிலைமைகளை ஆராய்வதில் மேற்குலக நாடுகள் ஆர்வம் செலுத்தி வருகின்றன. அதனடிப்படையில் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹியுகோ ஸ்வெயர், இலங்கைக்கு இன்று மூன்று நாள் பயணமாக வருகை தரவுள்ளார்.

இன்று கொழும்புக்கு வருகை தரும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹியுகோ, ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல தரப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் சந்திப்பை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

கொழும்பிலிருந்து விசேட விமானத்தில் புறப்படும் அவர், யாழ்ப்பாணத்தின் பலாலி விமானநிலையத்தை நாளை காலை வந்தடைவார். யாழ்ப்பாணத்தில், வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அதனைத் தொடர்ந்து யாழ்.பொது நூலகத்துக்கு ஒரு தொகை நூல்களை அவர் அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

இதன் பின்னர் வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்கு அவர் செல்லவுள்ளார். அங்கு பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்களை வழங்கவுள்ளார்.

இவற்றை முடித்துக்கொண்டு நாளை மாலையே கொழும்புக்கு திரும்பும் அவர், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலையே பிரிட்டனுக்குப் புறப்படவுள்ளார். (த-5)

# மைத்திரி தலைமைக்கு நான்கு கட்சிகள் எதிர்ப்பு

## புதிய கூட்டணி உருவாக்கும் முயற்சிகள் தீவிரம்
## நழுவல் போக்கில் முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.28

மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்தப் புதிய கூட்டணியில் அங்கம் வகிப்பதற்கு நான்கு அரசியல் கட்சிகள் இணக்கம் வெளியிட்டுள்ளன. எனினும், இது விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ மௌனப்போக்கை கடைப்பிடித்து வருகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலை குறிவைத்தே இந்தக் கூட்டணி உதயமாகவுள்ளது என்றும், கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளன என்றும் அறிய முடிகின்றது.

இதை அமைப்பதற்குரிய முயற்சியில் ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து வெளியேறி, புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில் தலைமையிலான குழுவொன்று தீவிரமாக இறங்கியுள்ளது. இந்தத் தகவலை நேற்று உறுதிப்படுத்திய உதய கம்மன்பில், தேசிய சுதந்திர முன்னணி, பொதுஜன மக்கள் முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள், மஹிந்த சிந்தனை கொள்கைத்திட்டத்தின் கீழ் இயங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளன என்று குறிப்பிட்டார்.

புதிய கட்சி நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படுமா என்பது பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்த முயற்சிக்கு இன்னும் பச்சைகொடி காட்டவில்லை. அத்துடன், அவர் எதிர்ப்பையும் இன்னும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளார். எனினும், மைத்திரியின் கீழ் இயங்குவதற்கு மேற்படி நான்கு கட்சிகளும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. எனவே, இனிவரும் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 'கை' சின்னத்திலேயே களமிறங்கும் என அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன இது விடயத்தில் எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கின்றன என்று இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. (ற-சி)

CM K

# ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் 2 வருடங்களாக இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலகங்களிலும் இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறவில்லை. இதனால் பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குரிய அனுமதிகள் தன்னிச்சையாக வழங்கப்பட்டு வருகின்றன.

மஹிந்த அரசின் காலத்தில் ஈ.பி.டி.பியின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுமே யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவு களிலும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக இருந்தனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் ஒரு சில பிரதேச செயலகங்கள் தவிர ஏனைய இடங்களில் நடைபெற்று வந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றி மாவட்ட இணைத் தலைமையை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பெற்றுக் கொண்ட பின்னர் எந்தவொரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடத்தப்படவில்லை. மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டபோதும் அது முற்றுப் பெறாததுடன் மோதலிலும் முடிவடைந்திருந்தது.

பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குரிய அனுமதி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே வழங்கப்படுவது வழமை. பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கூட்டப்படாமையினால் அந்த அனுமதிகள் தன்னிச்சையாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போது புதிய அரசு அமைந்துள்ளது. புதிய அரசினால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவர் யார் என்பது தொடர்பில் இதுவரை யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்கப்படவில்லை. இந்த அறிவித்தல் கிடைக்கப் பெற்ற பின்னரே, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படும் என்று மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

# பிரதம நீதியரசர் விரைவில் அவுட்

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் விரைவில் பதவி விலகுவார். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அது நடைமுறைப்படுத்தப்படும் வரை உயர் நீதிமன்றம் முன்பாக இன்று புதன்கிழமையிலிருந்து தொடர்ச்சியாகச் சட்டத்தரணிகள் ஒன்றியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர் என்று ஒன்றியத் தகவல்கள் தெரிவித்துள்ளன. பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பில் நேற்று முன்தினம் இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சட்டத்தரணிகள் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே பிரதம நீதியரசர் விரைவில் பதவி விலகுவார் என்றும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளதாக ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (த-4)


வீடு வாடகைக்கு

கணேசபுரம் றெயிலர் வீதியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் 4அறைகள் 2வராந்தா அனைத்து வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்பு:0766379997

வெல்டர் தேவை

கிளிநொச்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்டிட வேலைத்தளத்திற்கு வெல்டர் தேவை
சம்பளம் 1000.00 & OT

தொடர்பு:0778087967
0773015064


# கேபியை கைது செய்வதா?

## சட்டமா அதிபரிடம் அறிக்கை கேட்கிறது நீதிமன்றம்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆயுதங்களை விநியோகித்தவரும் அவ்வியக்கத்தின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர் அவ்வியக்கத்தின் தலைவர் என்று கூறப்பட்ட வருமான குமரன் பத்மநாதனை கைதுசெய்வதா? அல்லது விசாரணைக்கு உட்படுத்துவதா? என்பது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து கருத்து முன்வைக்குமாறு சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறுகோரி ஜே.வி.பி. தாக்கல் செய்துள்ள மனு மேன் முறையீட்டு நீதிமன்ற இரண்டு நீதியரசர்கள் கொண்ட குழு முன் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச். எம். டி. நவாஸ், விஜித் மல்லகொட ஆகிய நீதிபதிகள் மனுவை விசாரித்து மேற்கண்ட அறிவித்தலை விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தில் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளர் மற்றும் சர்வதேச நிதி சேகரிப்பாளர் என கருதப்படும் கே.பியை கைது செய்து நீதின்றில் முன்னிலைப்படுத்துமாறு ஜே.வி.பி. கடந்த 19 ஆம் திகதி மனு தாக்கல் செய்துள்ளது.



ஜே.வி.பி. பரப்புரைச் செயலாளர் விஜித ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்ததோடு மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி மற்றும் குடிவரவு குடிய கல்வு கட்டுப்பாட்டாளர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். கே.பி. மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட நிலையில் தற்போது கிளிநொச்சியில் சிறுவர் இல்லம் ஒன்றை நடத்தி வருகிறார். (ற-சி) (தொடர்புடைய செய்தி 20 ஆம் பக்கத்தில்)


இந்தியாவில் உயர்கல்வி

ENGINEERING DEGREES
ANNA UNIVERSITY - INDIA

2013/2014 - A/L Maths பிரிவில் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாத மாணவர்கள், உலகலாவியரீதியில் பிரசித்திபெற்ற ANNA UNIVERSITY (Chennai, India) யில் பின்வரும் கற்கை நெறிகளில் சேர்ந்து நான்கு வருடங்களில் இலங்கை பல்கலைகழக மாணியக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட (UGC Approved) ENGINEER ஆகமுடியும்.

- CIVIL • MECHANICAL • COMPUTER SCIENCE
- INFORMATION TECHNOLOGY • ELECTRICAL
- ELECTRONICS & COMMUNICATION

(BE - BACHELOR OF ENGINEERING - 4 YEARS)

மேற்கூறிய பாடநெறிகளை ANNA UNIVERSITY யின் இணைக்கல்லூரியான SSM COLLEGE OF ENGINEERING ல் (சேலம், தமிழ்நாடு) அனுமதி பெற்று கற்கமுடியும்.

Call : 0777 - 767 818 (தமிழில்)

SIC No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

28 JAN 2015

# செய்திகள்

## கசிப்புடன் சிக்கியவருக்கு ஒரு லட்சம் அபராதம்

தென்மராட்சி, ஜன. 28

கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் வாசிக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து செலுத்தத் தவறின் வருட சிறைத் தண்டனை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் இப் பகுதியைச் சேர்ந்த நபருக்கு எதிராக கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுடன் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஏற்கனவே இந்த நபர் நீதிமன்றில் இது போன்ற குற்றங்களுக்காகப் பல தடவைகள் தண்டிக்கப்பட்டவர் எனப் பொலிஸார் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து இரு குற்றங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

## கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு 216 பேர்

அச்சுவேலி,ஜன.28

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு 216 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் 102 பேர் தமிழர்கள்.

கல்வியியலாளர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை புதிய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவாசம் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சில் நடைபெற்ற உத்தியோகபூர்வ நிகழ்வில் வைத்துக் கையளித்தார்.

கல்வியியலாளர் சேவை தரம்III இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு கடந்தவருடம் முற் பகுதியில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை மற்றும் விடயமுன் வைப்பு தேர்வுகளின் மூலம் 216 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அவர்களுக்கான திசைமுகப் படுத்தல் செயலமர்வு 23 தினங்கள் வதிவிடநிலையில் நடைபெற்றது. தமிழ்மொழி பேசுவோருக்கு வவுனியாவிலும் சிங்கள மொழி பேசுவோருக்கு கண்டியிலும் திசை முகப் படுத்தல் செயலமர்வு நடைபெற்றது.

கல்வியியலாளர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் தேசிய கல்வியியல் கல்லூரி களின் ஆசிரியர் கலாசாலைகளின் விரிவுரையாளர் பதவி ஆளணியில் சேர்த்துக் கொள் ளப்படுவதோடு கல்வி வலய ரீதியில் செயற்படும் ஆசிரியர் மத்திய வள நிலையங்களின் முகாமையாளர்கள் பதவியிலும் அமர்த்தப் படுகின்றனர்.

கல்வியியலாளர் சேவைக்கு புதியவர்கள் சேர்த்துக்கொள் ளப்பட்டதன் மூலம் தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கலாசாலை களில் நிலவிவந்த விரிவுரை யாளர் ஆளணி வெற்றிடங்கள் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் கோப்பாய் தேசிய கல்வியியல் கல் லூரிக்கு 15பேரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு 10 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.(வ-11)

## மரண அறிவித்தல்கள்

### மருத்தீன் சவரிமுத்து



மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் சவரி முத்து நேற்று (27.01.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரகளான மடுத்தீன் - வரோனிக்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், லில்லிமலரின் அன்புக் கணவரும், கிறேஸ் (பிரான்ஸ்), அமலதாஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜேசுதாஸ் மற்றும் மரியதாஸ், விமல தாஸ் (லண்டன்), செல்வதாஸ் (கனடா), வதனி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை, அன்னம்மா, தொம்மைப்பிள்ளை, சாமிநாதர், அருளம்மா, பாவிலுப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருளானந்தம் (பிரான்ஸ்), சறோஜினி (ஜேர்மனி), வக்சலா, றூபினி (லண்டன்), மடோனா (கனடா), ஜோனி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், அருட்செல்வி (பிரான்ஸ்), அருள்ராஜ் (பிரான்ஸ்), அனுசியா (பிரான்ஸ்), சுரேக்கா (ஜேர்மனி), அனோஜன் (ஜேர்மனி), அனோஜிக்கா (ஜேர்மனி), அக்சன் (ஜேர்மனி), நிலோஜிதா, விகாஷ் (லண்டன்), டலிஷா (கனடா), மத்தியூ (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் அபர்ணாவின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.01.2015) வியாழக்கிழமை பி.ப.3.00 மணியளவில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம், மண்டைதீவு. தகவல்: குடும்பத்தினர்.

### செல்வன் அருணகிரிநாதன் டினேஸ்



மலர்வு 18.08.1982 உதிர்வு 24.01.2015


புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் இல 43, கோணாவில் மத்தி, கோணாவில் கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வன் அருணகிரிநாதன் டினேஸ் கடந்த (24.01.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணகிரிநாதன் (புத்திசாலி) மற்றும் உலகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், மயூரன் (லண்டன்), குகவித்தியா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாரதிதாசனின் மைத்துனரும், குபித்ஷா, அட்சயா ஆகியோரின் மாமனும், சிறிகாந்தன், ஜெயகாந்தன், சிவகாந்தன், சரவணபவன், இந்திராணி காலஞ்சென்றவர்களான இலட்சுமிகாந்தன், தேவகாந்தன் ஆகியோரின் அன்பு மருமகனும், விமலேஸ்வரி, சிவராணி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோ ரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-செல்லம்மா, நாகரத்தினம் (தம்பாப்பிள்ளை) - நல்லம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2015) வியாழக்கிழமை பி.ப. 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கோணாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 43, கோணாவில் மத்தி,
கோணாவில் கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 177126



### கந்தையா அழகசுந்தரம்

(ஓய்வுபெற்ற வருமான வரி திணைக்கள உத்தியோகத்தர்)

அன்னை மடியில் 03.04.1929 — கர்த்தரிடத்தில் 25.01.2015

யாழ்ப்பாணம் காரைநகர் (புதுறோட்டை) பிறப்பிடமாகவும்.42வது ஒழுங்கை இல.11 விஷ்ணு தொடர்மாடி வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த கந்தையா அழகசுந்தரம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 28.01.2015 புதன்கிழமையன்று காலை 9.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 29.01.2015 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு விவேகானந்த வீதி கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: நிர்மலா – 077 6910443

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமி கிருஷ்ணன்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இல்ட்சுமி கிருஷ்ணன் 24.01.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - வள்ளி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கறுவல் - தெய்வி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணனின் பாசமிகு மனைவியும், கனகரட்ணம், பரமேஸ்வரி, தவராசா (ஜேர்மனி), புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் வசந்தன் (சுவிஸ்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், மனோறஞ்சிதராணி, பரமேஸ்வரன், உருத்திரா, தவராசா, செல்வமகள், இந்திரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2015) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: கி.கனகரட்ணம் - மகன்
(முன்னாள் சாரதி - வட பிராந்திய ஆராய்ச்சி நிலையம்)

(56186)(12.3.7)

### திருமதி செல்லாச்சி தம்பையா



யாழ்.கட்டுவிளை பிறப்பிடமாகவும் இல.171.பட்டகாடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லாச்சி தம்பையா 26.01.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி இளையபிள்ளைதம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து சுப்பிரமணியம் கமலம் கண்மணி சரோஜினி மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியவதி தவநேசன்(நோர்வே) ஆகியோரின் பாசமிகுதாயும் காலஞ்சென்ற தியாகராசா மற்றும் மாலதி (நோர்வே)ஆகியோரின் பாசமிகு மாமியும் தீபா நிருபா ஆதிரையான் ஜெகதீஸ்வரன் கமலகரன் ஆகியோரின் பேர்த்தியும் ஹரித்திரா சாகித்தியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.01.2015 புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் துரைசாமி

(ஆசிரியர்)

தோற்றம்: 1938-08-15 மறைவு : 2015-01-26

காரைநகர் பாலாவோடை களபூமியைப் பிறப்பிடமாகவும் இலந்தைச் சாலையை வசிப்பிடமாகவும் தற்போது புகையிரத நிலைய வீதி வெள்ளவத்தை கொழும்பில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் துரைசாமி 26-01-2015 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும் காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை (Inspector) சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவஞானவதியின் அன்புக் கணவரும், தயானந்தன் (U.K), சுகந்தினி, ஜெயந்தினி (Canada), நந்தினி (U.K), சர்வானந்தன் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி, சுதாகரன், வாசுதேவ், கீதாரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபி, ராகவி, பிருந்தன், சரண்யா, சப்னா, நிலா, ஜெனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சவுந்தரம் காலஞ்சென்ற பரமேஸ்வரி, சரஸ்வதி (U.K), காலஞ்சென்ற உலகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, இரத்தினம், சபாநாதன், ஸ்ரீஸ்கந்தராசா, சபாநடேசன், சபாநாதன், சுசீலாவதி, சபாநேசன், சபாநாயகம், காலஞ்சென்ற சபாரட்ணம், சபேந்திரன், சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக 28-01-2015 புதன்கிழமையிலிருந்து வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 29.01.2015 வியாழ்க்கிழமை பி.ப. 2.00 மணி அள்வில் நடைபெறும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள் (011-2582473)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி ரூபவதி நவநீதகிருஸ்ணன்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூபவதி நவநீதகிருஸ்ணன் நேற்று முன்தினம் (26.01.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவநீதகிருஸ்ணனின்(ஓய்வு பெற்ற சார்ஜன் மேஜர் பீரங்கிப்படை, இலங்கை இராணுவம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, துரைராஜா மற்றும் புஸ்பவதி, பத்மாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சசிரேகா (பிரான்ஸ்), மோகனமுரளீதரன் (ஜேர்மனி), சுமதி (ஜேர்மனி) காலஞ்சென்ற தேவதாசன் ஆகியோரின் அன்புத் தாயும், பாலமோகன் (பிரான்ஸ்), சுகிர்தகலா (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், மயூரி, ஆகாஷ், மேனகன், வர்சினி, சௌமியா, அஸ்வின் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (28.01.2015) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பிருந்தாவனம்'
அச்சுவேலி தெற்கு, 021 2058699

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சின்னத்தங்கச்சி இராசையா



கரந்தன் விதி, நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசையா கடந்த (25.01.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இராசையாவின் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் ) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னம்மாவின் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் மகாலட்சுமி, விமலாதேவி, மங்களாதேவி (லண்டன்), குமரகிரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கருணாநிதி, கிருஸ்ணலிங்கம், மகாராஜா (அசோ- லண்டன்), வசந்தாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சியாமினி -சிவபாலன் (லண்டன்), சுதர்சினி-சசிகரன் (கனடா), துர்கா-மகேசன் (லண்டன்), துசாந்தன் , கோபு மதுசன், நிறோசன், சிநேகா, திரிஷா, தேசிகன், சஞ்சியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனோஸ், மதுஸ், சயன், சரண், லதுஸ், ஜஸ்மினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2015) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரந்தன் வீதி,
நீர்வேலிதெற்கு, நீர்வேலி.

தகவல்:
கணவர் அ. இராசையா
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் )

## திருமதி மேரி மெக்டலின் (லின்ரா) வேலாயுதம்



இல.17/2. மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மெக்டலின் (லின்ரா) வேலாயுதம் 26.01.2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லிகோரி சின்னக்கிளி - புஸ்பம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், வேலாயுதத்தின் அன்பு மனைவியும், ஜெயசீலன் (முன்னாள் JMC மின்சார பகுதி ஊழியர், அரச கட்டட ஒப்பந்தகாரர்), குயின்ரன், புறூனோ பாபு (Colombo), காலஞ்சென்ற கிறேசியன் மற்றும் நிர்மலன் (வட.ப.தெ.சமாசம்), லைலா, இந்திரா, விஜிதா விக்ரரின் (குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் -JMC ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜாமினி (France), ஜெகன், ஜனகன், ஜெனிற்றன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயசீலன் (நிக்ஷன் - France), லூசிலா (கனி), முகுந்தினி (மாலா) ஆகியோரின் அன்பு மாமியும், பியோனா, சரீனா, கத்தரீனா (France),திசானா, சுவிந்தன், ரிவின்ஸ்ரன், பிறித்திக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2015) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இல.17/2, மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17/2, மத்தியூஸ்வீதி,
யாழ்ப்பாணம்.
077 786 6260, 021 320 3201.

(56187)(12.3.)

தகவல்:
குடும்பத்தினர்.

# செய்திகள்

## நால்வருக்கு மேல் நீதிமன்று பிணை

### சாவகச்சேரி மருத்துவமனையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 28

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் கடந்த வருடம் ஒரு வரை வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான 7 பேரில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 4 பேரும் யாழ்.மேல் நீதிமன்றால் கடந்த சனிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதே குற்றச் சாட்டில் கைதானவர்களில் 3 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தனர்.

சாவகச்சேரியில் கடந்த ஜூலை 5 ஆம் திகதி கோயிலொன்றில் இடம்பெற்ற இசைக் கச்சேரியில் இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் 8 பேர் காயமடைந்தனர். அவர்களைச் சாவகச்சேரி ஆதாரமருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அங்கு வெளிநோயாளர் பிரிவில் வைத்து அவர்கள் ஒருவர் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டது. அதில் அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த உதயகுமார் அன்பழகன் (வயது–23) என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

அதனையடுத்து 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் மூன்று பேர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தனர். ஏனைய 4 பேரும் தலா 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள் பிணையிலும் தற்போது விடுவிக்கப்பட்டனர். (வ–4–9)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா இராசரத்தினம்



தென்மராட்சி மீசாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்யைா இராசரத்தினம் நேற்று (27.01.2015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னாச்சி தம்பதியரின் புத்திரனும், தங்க முத்துவின் அன்புக் கணவரும், பவிதா (புதிய உயர்கல்லூரி, கலைப்பீட மாணவி), விஜிதா (கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவி), சத்தியா (யாழ். வீரசிங்கம் மத்திய கல்லூரி, 2015 கலைப் பீட மாணவி), ஆகியோரின் தந்தையும், க. யோக ராசாவின்(உப தலைவர், சாவகச்சேரி பிரதேச சபை) அன்பு மாமனும், சிவகாமிப்பிள்ளை, மகாலிங்கம், கமலாதேவி, பாக்கியம், பரமேஸ்வரி, தவமணி, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரும், சிவகுரு, வல்லிபுரம், ஜெயராமு, ரகுநாதன், தம்பிராசா, திலகேஸ்வரி, குமுதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2015) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, கொடிகாமம்.
077 1167558

தகவல்:
குடும்பத்தினர்.

## தில்லையம்பலம் கேசவன்



வத்திராயன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கேசவன் நேற்று (27.012015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்பலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அரியரத்தினம் (டென்மார்க்) மற்றும் பரஞ்சோதி (ஜேர்மனி), காலஞ்சென்ற நந்தகுமாரன் மற்றும் சாரதா (ஆஸ்திரேலியா), விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி (டென்மார்க்), பாலசரஸ்வதி (ஜேர்மனி), விவேகானந்தராசா (ஆஸ்திரேலியா), வசந்தராஜ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிரேம், மீரா, நந்தகுமாரன், அனுசன், ஆதவன் ஆகியோரின் சிறிய தந்தையும், அருண்யா, சகானா, மிருணா, மதியழகன், மதிவர்மன், மதிசுதன், மதிமறவன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 03.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வத்திராயன் புங்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வத்திராயன் தெற்கு,
தாளையடி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 8198098

## திருமதி நேசம்மா கணேசமூர்த்தி

(இலந்தச் சாலை காரைநகர்)



காரைநகர் இலந்தச் சாலையைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா கணேசமூர்த்தி நேற்று (27.01.2015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், யசோதரனின் பாசமிகு தாயும், கதிர்காமநாதன், காலஞ்சென்ற சற்குணராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2015) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தொல்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 1340009

## யாழ்ப்பாணம் வருகிறார் ஹவாய் ஆதீன முதல்வர்

அமெரிக்கா ஹவாய் ஆதீன முதல்வர் சற்குருபோதிநாத யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். ஆன்மிக யாத்திரையாக யாழ்ப்பாணத்துக்கு வரும் சற்குரு வேலன் சுவாமிகள் நாளை வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டி காளியாம்பாள் தேவஸ்தானத்துக்கு வருகை தரவுள்ளார். இந்த நிகழ்வில் பக்த அடியார் களை கலந்துகொள்ளுமாறு தேவஸ்தானத் தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ–10)

## மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கா. குணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும் ஓய்வுபெற்ற அதிபருமான திருமதி செ.பத்மநாதனும் கலந்து கொள்வார். (ஒ)

## ஆதன வரி செலுத்துவ்தில் வரியிறுப்பாளர்கள் ஆர்வம்

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இந்த வருடத்துக்குரிய ஆதனவரியைச் செலுத்துவதில் வரியிறுப்பாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த வருடத்துக்குரிய ஆதனவரியைச் செலுத்தினால் கழிவு வழங்கப்படும் என்பதாலும், தம்மால் செலுத்தப்படும் வரிப் பணம், சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்பதாலும் நகர சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இவ்வருடத்துக் குரிய முழுத் தொகை யையும் செலுத்துவதாக வரியிறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் ஆதனவரிப் பிரிவில் மேலதிக உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வரியிறுப்பாளர்கள் நீண்ட நேரம் காத்திராமல் விரைவில் தமக்கான ஆதனவரியைச் செலுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை என்பதால் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)

# அரசியல் கைதிகளின் விவரம் தேசிய நிறைவேற்றுச் சபையில்

## அரசு சமர்ப்பித்துள்ளது என மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை அரசு சமர்பித்துள்ளது. புலனாய்வுப் பிரிவினரால் மற்றும் படைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது விவரங்களை விரைவில் சமர்பிக்கப்படவுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.



தேசிய நிறைவேற்றுச் சபையின் கூட்டம் நேற்று இடம்பெற்றது. கடந்த கூட்டத்தில், தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை சமர்பிக்குமாறு, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரியிருந்தார். அதற்கமைய அரசால் தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்கள் சமர்பிக்கப்பட்டது. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது விவரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டன.

"பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில், பொலிஸ் துறையின் பயங்கரவாத தடுப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு மற்றும் படைத்தரப்பு முகாம்கள் போன்றவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தடுப்பு காவல் கைதிகளின் விவரங்களையும் வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன். அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த தகவல்களையும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களிடமிருந்து பெற்று சபைக்கு சமர்ப்பிக்குமாறு தேசிய நிறைவேற்றுச் சபையின் செயலாளர் திலக் ரணவிராஜாவுக்கு பணிப்புரை விடுத்தார்" – என்று மனோ கணேசன் தெரிவித்தார். (ற–5)

### கள்ள மணல்

கைப்பற்றப்பட்டதாகவும், குறித்த ட்ராக்டரை செலுத்தி வந்ததாகச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர் ஒருவரை நேற்று மாலை 5 மணியளவில் தாம் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:–

வடமராட்சி கிழக்கில் இருந்து களவாக ஏற்றிய மணலுடன் வேகமாக வந்து கொண்டிருந்த ட்ராக்டர் வீதியில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை மோதித் தள்ளியதில் குறித்த குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே தலை நசிந்து உயிரிழந்தார்.

இந்தச்சம்பவத்தில்துன்னாலை வடக்கு, போதகர் மடத்தடியைச் சேர்ந்த சரவணமுத்து சந்திரமோகன் (வயது–49) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

குடும்பஸ்தரை மோதிய டிராக்டரும் ஏற்றி வந்த மணலைப் பறித்து விட்டுத் தப்பி சென்றது. அது வல்லிபுரக்குறிச்சியின் மறைவான ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. இந்தச் சமபவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வல்லிபுரக்குறிச்சியை சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை நேற்று மாலை தாம் கைது செய்ததாகப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை நீதிவான் கணேசராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளைநடத்தியதோடுசடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், உடற்கூற்றுப் சோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

(த–109–173)

### அரசியல்

மேற்கொண்டதாக மாவை. சேனாதிராசா கூறினார்.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னர், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகின்றது. அவர்களை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது. நாட்டின் பல்வேறு சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினரும்,இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா, அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்றார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 தமிழ் அரசியல் கைதிகளை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். ஏற்கனவே பெறப்பட்ட விவரங்கள் சரியானதா என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினருக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இழுத்தடிப்புச்செய்யப்பட்டு வருகின்றது. இன்னொரு தொகுதியினருக்கு வழக்குத் தாக்கல் செய்யப்படாத நிலைமை இருக்கின்றது. இவை தொடர்பான சகல விவரங்களையும் பெற்றுக் கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா, விரைவில் ஜனாதிபதியுடன் சந்திக்கும்போது அவற்றைக் கையளிக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார். விவரங்களைக் கையளித்து அவர்களை பொதுமன்னிப்பில் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றும் அவர் கூறினார். (ற–5)

### வடக்கு, கிழக்கு

பாலதலைமையிலான புதிய அரசு அமைந்ததும், வடக்கு மாகாண ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன் பின்னர் வடக்கு மாகாண பிரதம செயலாளராக இருந்த திருமதி ஆர். விஜயலட்சுமி, இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டார்.

அதன்பின்னர்,வடக்குமாகாண ஆளுநராக பள்ளியகாரவையும், பிரதம செயலாளராக பத்திநாதனையும் நியமிப்பதற்கான நடவடிக்கைஎடுக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் பள்ளியகாரவுக்கும், பிரதம செயலாளர் பத்திநாதனுக்கும் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

புதிய பிரதம செயலாளர் பத்திநாதன் எதிர்வரும், திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

அதேவேளை நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உள்ளிட்ட 6 மாகாணங்களின் ஆளுநர்களும் பதவியேற்றனர். சப்ரகமுவ மாகாணத் தின் ஆளுநராக பி.எம்.ஏ.ஆர். பெரேராவுக் கும், மத்திய மாகாண ஆளுநராக சுரங்கனி எல்லாவெலவுக்கும், வட மேல் மாகாணம் மற்றும் ஊவா மாகாணங்களின் புதிய ஆளுநர்களாக முறையே பி.வீ. திஸாநாயக்க மற்றும் சட்டத்தரணி எம்.பி. ஜயசிங்கவுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. (ற–5)

### முறைக்கும்

பட்ட சர்வதேச போர்க் குற்ற விசாரணை, இந்தக் கூட்டத் தொடரில் சமர்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் விசாரணை அறிக்கை தொடர்பிலான விவாதம் இடம்பெறவுள்ளது.

இதைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை இலங்கையின் புதிய அரசு மேற்கொண்டுள்ளது. இதற்காக ஜனாதிபதியின் ஆலோசகர் ஜயந்த தனபால, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்திக்க ஜெனிவாவுக்குச் சென்றுள்ளார். அதேபோன்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஐரோப்பாவுக்குச் சென்றுள்ளார்.

ஐரோப்பிய பயணத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பும் மங்கள சமரவீர, அதன் பின்னர் அமெரிக்காவுக்குப் பயணமாகவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்த நாடு என்ற அடிப்படையில், அமெரிக்காவுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் மார்ச் மாதம் ஆரம்பமாவதற்கு முன்னர் இவை முன்னெடுக்கப் படவுள்ளன. (ற–5)

### ஐ.நாவுடன்

ஐ.நாவின் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை அரசு எதிர்பார்க்கின்றது" – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இன்னும் சில வாரங்களில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. அதில் இலங்கை தொடர்பான ஐ.நாவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை எமது புதிய முயற்சிகள், ஒத்திவைக்கக் கூடும் அல்லது நிறுத்தக் கூடும்.

உள்நாட்டு விசாரணையை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது, அறிக்கையை நிறுத்தி வைப்பதற்கான அவர்களின் தெரிவுகளில் ஒன்றாக அமையலாம். ஐ.நா.விசாரணைகள்தலைக்கு மேல் தொங்குவதை அரசு விரும்பவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். இந்தச் சூழலில் விரைவாக இந்த விசாரணை ஆரம்பிக்கப்படுவது எமக்கு நல்லது" – என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

### தனிக்குழு

அதிலேயே இந்த விடயம் குறித்து இணக்கம் ஏற்பட்டது. "வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தேசிய நிறைவேற்றுச் சபைக்கு மேலதிகமாக தனியான குழு ஒன்று அமைக்க வேண்டும். அதனூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க முடியும்" – என்று அந்தச் சந்திப்பில் இரா.சம்பந்தனால் சுட்டிக்காட்டப்பட்டது. அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஏற்றுக் கொண்டார்..

அத்துடன் வடக்கில் நடைபெறும் காணி அபகரிப்பை நிறுத்துவது பற்றியும், இராணுவத்தினரைக் குறைப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (ற–5)

### பஸ் கட்டணம்

கட்டணங்கள் அடிப்படையில் தனியார் பஸ்களின் கட்டணங்கள் அமையாது.

கட்டண விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. 8 வீதத்தால் கட்டணம் குறைக்கப்பட்ட பட்டியல் போக்குவரத்து அமைச்சின் அனுமதியுடன் வெளியிடப்படும் என்று கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதத்தில் பஸ் கட்டணம் சீரமைக்கப்படுகின்ற போதும் கடந்த ஆண்டு கட்டணங்களில் மாற்றம் செய்யப்படவில்லை.

கடந்த 21ஆம் திகதி முதல் டீசலின் 16 வீதத்தினால் குறைக்கப்பட்டது. கடந்த வருட இறுதியில் 7 ரூபாவாலும் 3 ரூபாவாலும் டீசல் விலை குறைக்கப்பட்டது. இந்த நிலையில் பஸ் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் பஸ் கட்டணத்தைக் குறைக்க உள்ளக போக்குவரத்து அமைச்சு தீர்மானித்திருந் தது. அதையடுத்தே நேற்றைய கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அதேவேளை, பஸ் கட்டணங்கள் 2 ரூபா அளவிலான வித்தியாசத்தில் குறைக்கப்படும் போது, தமக்கு நன்மைகள் கிடைப்பதில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். பெரும்பாலான பஸ்களில் சில்லறைப் பணம் இல்லாததைக் காரணம் காட்டி பழைய கட்டண அட்டவணைப்படியே கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற–14)

விளையாட்டு

# ஜெனி, பிளிமின் நிதான ஆட்டம் சென்.ஜோன்ஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.28

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு 19 வயது அணிகளுக்கிடையிலான தொடரின் ஆட்டமொன்றில் சென்.மேரிஸ் கல்லூரியை எதிர்த்து சென்.ஜோன்ஸ்கல்லூரி அணிமோதிக் கொண்டது.

சென்.மேரிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.மேரிஸ் கல்லூரி அணியின் ஆரம்ப வீரரான ராஜிகடில்சான்ஆரம்பம்முதலே நிதான ஆட்டத்தை வழங்கினார். இருப்பினும் மறுமுனையில் சென். மேரிஸின் முன்னணி இலக்குகள் சீரான இடைவெளிக்குள் சரிந்துகொண்டிருந்தன. ஆறாம் நிலை வீரராக களமிறங்கிய பெர்னாண்டோ ராஜிகவுக்கு தக்க ஒத்துழைப்பைக் கொடுக்க இருவரும் இணைந்து இணைப்பாட்டமாக 77 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பின்வரிசை வீரரான சாஷன் 37 ஓட்டங்களை விளாச முடிவில் சென்.மேரிஸ் அணி தனது முதலாவது இன்னிங்ஸுக்காக சகல இலக் குகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் யதுஷன் 5 இலக்குகளையும்ஹெரத் லக்சி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்ப வீரர்கள் சிறந்த தொடக்கத்தைக்கொடுக்கத் தவறி சரிவு கண்டாலும் தொடர்ந்து வந்த ஜெனி பிலிமின் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திப் படிப்படியாக அணியைச் சரிவில் இருந்து மீட்கத் தொடங்கினார். மத்திய வரிசை வீரர்கள் எவரும் நிலைக்கத் தவறி பதின்ம ஓட்டங்களுடன் வெளியேறினாலும் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்ட பிலிமின் அரைச் சதம் கடந்து 91ஓட்டங்களுடன்வெளியேறினார். பின்வரிசை வீரரான ஹெரோல்ட் லக்சி மிகவும் நிதானத்தை வெளிப்படுத்தி அணியை வலுப்பெறச்செய்தார். முடிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சென்.மேரிஸ் சார்பாக பீரிஸ் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

6 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தசென்.மேரிஸ் கல்லூரி அணிக்கு அதன் வீரர்கள் எவருமே குறிப்பிட்டு சொல்லும் அளவுக்குச் சிறப்பாகச் செயற்படவில்லை. அதிக பட்சமாக மத்தியவரிசை வீரரான டில்சான் சஞ்சீவ 28 ஓட்டங்களைப்பெற்றார்.

முடிவில் சென். மேரிஸ் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகச் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிசார்பாக லேகதீஸ்வரன் மற்றும் யதுஷன் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிச்சயமான இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ்கல்லூரிஅணிக்கு ஆரம்பம் சொதப்பலாக அமைந்தது. தொடர்ந்து வந்த வீரர்களும் பெரிதளவில் பிரகாசிக்காமல் பதின்ம ஓட்டங்களை பெற்று வெளியேறிக்கொண்டிருந்தனர். இருப்பினும் வெற்றி இலக்கு குறைவு என்பதனால் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 6 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பந்துவீச்சில் சென்.மேரிஸ் கல்லூரி அணி சார்பில் பீரிஸ் மற்றும் ராஜிக, டில்சான் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

(த-23-ரி)


## கரப்பந்து தொடர் அடுத்த மாதம் ஆரம்பம்

தென்மராட்சி, ஜனவரி. 28

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தென்மராட்சி பிரதேச மற்றும் மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுத்தொடர் அடுத்த மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகின்றது.

பெப்ரவரி நான்காம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்த தொடருக்கான ஒழுங்குபடுத்தல்கள் நாளை மறுதினம் ஆரம்பமாகும் என கழகத் தலைவர் க.தர்சன் அறிவித்துள்ளார்.

(த-9-ரி)







## தென்னாபிரிக்கா-மேற்கிந்தியா இறுதிப் பலப்பரீட்சை இன்று

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் இன்று தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே நடந்து முடிந்த நான்கு ஆட்டங்களில் முதல் மூன்று ஆட்டங்களில் தென்னாபிரிக்காவும் நான்காவது ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும் வெற்றிபெற்றதனால் 3:1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா அணி முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இந்த ஆட்டத்தின் முடிவு எதுவாக இருந்தாலும் தொடர் தென்னாபிரிக்காவுக்கே செல்லும். இருப்பினும் இந்த ஆட்டத்தில் வென்று 3:2 என்ற கௌரவ நிலையை தொடரில் பெறவேண்டும் என்பதற்காக மேற்கிந்தியத் தீவுகள் அணியும் சொந்த மண்ணில் 4:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தென்னாபிரிக்காவும் களமிறங்குகின்றன. ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு இடம்பெறும். (த-ரி)

## இந்தியா கவலைக்கிடம்

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லி 3ஆவது வீரராகக் களமிறங்க வேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் இயான்சப்பல்கூறியுள்ளார். இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் கோஹ்லி தற்போது நடந்து வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் 4ஆவது வீரராக களமிறங்கி வருகிறார். எனினும் இதுவரை நடந்துள்ள ஆட்டங்களில் அவர் தனது இயல்பான அதிரடியை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறி வருகிறார். ஆனாலும் கோஹ்லி 4ஆவது வீரராக களமிறங்குவதே சிறந்தது என்று அணித்தலைவர் டோனியும் மே.இ.தீவுகளின் முன்னாள் நட்சத்திரம் விவியன் ரிச்சர்ட்சும் கருத்து தெரிவித்துள்ளனர்.



இந்த நிலையில் உலகக்கிண்ணத் தொடரில் கோஹ்லியை 3ஆவது வீரராக களமிறக்க வேண் டும் என்று ஆஸ்திரேலிய அணி முன்னாள் தலைவர் சேப்பல் ஆலோசனை கூறியுள்ளார். இது குறித்து அவர் சிட்னியில் நேற்று அளித்த செவ்வி: 'உலகக்கிண்ணத்தொடர் நெருங்கிவரும் நிலையில்தற்போதுள்ள இந்திய அணி தடுமாறி வருகிறது. ஒருநாள் ஆட்டங்களில் கோஹ்லி ஏற்கனவே 3ஆவது வீரராக விளையாடி உள்ளார். உலகக் கிண்ண தொடரிலும் அவர் 3ஆவது வீரராக களம் இறங்கினால் சிறப்பாக இருக்கும். இந்திய அணி உலகக் கிண்ணத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டு மென்றால் துடுப்பாட்டம் பலம்பெறவேண்டும். இதைவிட இந்திய அணியின் பந்து வீச்சு மிகவும் பல வீனமாக உள்ளது. ஆஸ்திரேலியாவுடன் நடந்த டெஸ்ட் தொடரில் மட்டுமல்ல தற்போது நடந்து வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரிலும் கூட இந்திய பந்து வீச்சாளர்கள் திறம்பட செயற்படவில்லை. பந்துவீச்சாளர்கள் தமது முழுத்திறமையை தீவிரமாக வெளிப்படுத்தினால் இந்தியா கிண்ணத்தினை தக்கவைத்துக்கொள்ளும் இல்லையென்றால் கிண்ணத்தைப் பறிகொடுக்க வேண்டி ஏற்படலாம்.-என்றார். (த-ரி)

## தங்கம் வென்றார் காஷ்யப்

சர்வதேச பட்மின்ரன் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்று தொடர்ச்சியான விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் காஷ்யப்.

லக்னோவில் நடந்த இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தில், சக வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்துடன் கடுமையாகப் போராடி வென்று தங்கப் பதக்கத்தை முத்தமிட்ட காஷ்யப், இந்த வெற்றி குறித்து நேற்று கூறியதாவது:

புதிய சீசனை வெற்றியுடன் தொடங்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பார்மில் இல்லாததால் இந்தத் தொடரில் எனக்கு அதிக வாய்ப்பு இல்லை என்று பலரும் விமர்சித்தார்கள். கடந்த ஆண்டு ஸ்ரீகாந்த் மிக அருமையாக விளையாடி வெற்றிகளைக் குவித்திருந்தார். உலக தரவரிசையிலும் முதல் 5 இலும் இடம் பிடித்தார். இறுதி ஆட்டத்தில் நான் அவருடன் மோதப் போவதாகத் தெரிந்



ததுமே, நிச்சயமாக வெற்றி அவருக்குத் தான் என்று முடிவு செய்து விட்டார்கள். ஆனால், இறுதி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி தங்கப் பதக்கம் வென்றது, அந்த விமர்சனங்களுக்கு தக்க பதிலடியாக இருக்கும் என நினைக்கிறேன்-என்றார். (த-ரி)




# பாகிஸ்தான் வீரரை மிரட்டியதாம் பேய்

நியூஸிலாந்து–பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள 2 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடருக்காக பாகிஸ்தான் அணி நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான் அணி வீரர்கள் கிரைஸ்ட்சேர்ச் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வீரர்களின் பிரத்தியேக அறையில் தங்கியிருந்தபொழுது அந்த அணி வீரர்களில் ஒருவரான ஹரிஸ் சொஹைல் படுக்கையில் படுத்திருந்தபோது இயற்கைக்கு முரணாகப் படுக்கை தானாக ஆடியதாகவும், பின்னர் ஏதோ ஒரு இனம்புரியாத மாறுதல் அந்த அறைக்குள் இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். இதைக்கண்டு மிரண்ட அவர் அறையை விட்டு அலறியடித்து வெளியே ஓடியுள்ளார். உடனடியாகப் பயிற்சியாளரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட சொஹைல், படுக்கை தானாக ஆடியது குறித்து கூறியுள்ளார். பயிற்சியாளர் சொஹைலின் அறைக்கு விரைந்தபொழுது சொஹைல் நடுக்கத்துடன் நின்றிருந்தார். அப்போது அவருக்கு லேசான காய்ச்சலும் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. தனது படுக்கை ஆடியதற்கு காரணம் பேய் தான் என சொஹைல் கூற, ஹோட்டல் நிர்வாகமோ அங்கு பேய் நடமாட்டம் எதுவும் இல்லை என்று கூறியது. சொஹை லின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வரும் மருத்துவக் குழுவினர், தற்போது அவர் நல்ல உடல் நலத்துடன் உள்ளதாக தெரிவித்துள்ளனர். (த–ரி)

# பந்து மார்பில் தாக்கி பாகிஸ்தான் வீரர் சாவு

பாகிஸ்தானில் நடந்த உள்ளூர் துடுப்பாட்டத்தில், பந்து மார்பில் தாக்கியதில் 18 வயதேயான இளம்



வீரர் ஜீசான் முகமது சாவடைந்தார்.

பாகிஸ்தானில் உள்ள கராச்சி நகரில், நேற்றுமுன் தினம் கழக அணிகளுக்கிடையில் நடந்த உள்ளூர் ஆட்டத்தில், வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் வீசிய பந்து, இளம் வீரர் ஜீசான் முகமதுவின், மார்பில் பலமாகத் தாக்கியது. இதனால் சுருண்டு விழுந்த இவரை உடனடியாக அருகில் உள்ள மருத்துவ மனைக்கு அழைத்து சென்றனர். ஆனால், மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஜீசான் முகமது சாவடைந்தார்.

இது குறித்து ஜீசான் முகமதுவை பரிசோதித்த டாக்டர் சமாத் கூறுகையில், 'ஜீசான் முகமதுவின் மார்பு பகுதியில் தாக்கிய பந்து, அவரது இதயத்தை பலவீனமடையச் செய்தது. இதனால் இவர், மருத்துவமனைக்கு வரும் வழியிலேயே சாவடைந்தார்.' என்றார்.

சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடந்த உள்ளூர் ஆட்டத்தில் அபோட் வீசிய வேகப்பந்து தாக்கியதில், பிலிப் ஹியூக்ஸ் சாவமடைந்தார். இதனால் துடுப்பாட்ட உலகமே அதிர்ச்சி அடைந்தது. தற்போது மீண்டும் இதுபோன்ற துயர சம்பவம் அரங்கேறியது துடுப்பாட்ட உலகைச் சோகத்தில் மூழ்க வைத்துள்ளது. (த–ரி)

## மதுஷனின் அதிரடியால்
# ஜொலித்தது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம், ஜனவரி. 28

மதுஷனின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை 5 இலக்குகளால் வெற்றி கொண்டது ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி.



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சன சமூக நிலையம் நடத்தும் 'விக்ரம்–ராஜன்– கங்கு' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுத் தொடர் தற்பொழுது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மதியம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்கமுடியாது ஆரம்பம் முதலே ஆட்டம் கண்டது. சீரான இடைவெளியில் இலக்குகள் மளமளவெனச் சரிந்து முடிய 15.4 பந்துப் பரிமாற்றங்களை மட்டுமே தாக்குப் பிடித்த அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 106 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக வதுஷனன் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் கல்கோபன் 2 இலக்குகளையும், மதுஷன், பகீரதன் தலா 3 இலக்குகளையும் சாய்த்தனர்.

107 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை நம்பிக்கை நட்சத்திரமான மதுஷன் வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் கொடுத்தாலும். மறுமுனையில் அணியின் வெற்றிக்காக போராடிக்கொண்டிருந்த மதுஷன் அரைச்சதத்தை கடந்து அசத்தினார். தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்ட அவர் அணியின் வெற்றிக்கு வித்திட்டார். 21.2 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்ட ஜொலிஸ்ரார் அணி 5 இலக்குகளை மட்டுமே இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அதிகபட்சமாக மதுஷன் 60 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் வதுஷனன் 2 இலக்குகளையும், கோகுலன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(த–23–ரி)



# கற்சிலைமடுவில் மரதன்

யாழ்ப்பாணம், ஜன 28.

கற்சிலைமடு அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் பிரதான நிகழ்வான மரதன் ஓட்டப்போட்டி சில தினங்களுக்கு முன் நிறைவுக்கு வந்தது.

ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் சோளன் இல்லத்தைச் சேர்ந்த கோகுலன் முதலாம் இடத்தையும், அதே இல்லத்தைச் சேர்ந்த லக்கீரன் இரண்டாம் இடத்தையும், பாண்டியன் இல்லத்தைச் சேர்ந்த க.கஜீவன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் பாண்டியன் இல்லத்தைச் சேர்ந்த ஜோ.குவேந்தினி முதலாம் இடத்தையும், சேரன் இல்லத்தைச் சேர்ந்த சி.விதுசா இரண்டாம் இடத்தையும், சோளன் இல்லத்தைச் சேர்ந்த த.அனுசியா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஏனைய குறுந்தூர மற்றும் குறுகிய நேர விளையாட்டுக்கள் நாளை மறுதினம் இடம்பெறும். (த–500–ரி)



# செய்திகள்

## 11 விறுவிறுப்புக்களுடன் 11 ஆவது உலகக் கிண்ணம்

கடந்த 2011உலகக்கிண் ணத்தை விட, ஒருநாள் ஆட்டங்களில் இப்போது பல்வேறு மாற்றங்கள் வந்துவிட்டது. வரும் 2015 இல் நடக்கவுள்ள 11 வது உலகக் கிண்ணத் தொடருக்காக, 11 மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மண்ணில் 11 ஆவது உலகக் கிண்ணத் தொடர் வரும் பெப்ரவரி 14 முதல் மார்ச் 29 வரை நடக்கவுள்ளது. இதில் கடந்த 2011இல் இருந்ததை விட பல மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. இதன் விவரம்:–

### களத்தடுப்புக் கட்டுப்பாடு

கடந்த 2012இல் ஒருநாள் ஆட்டங்களில் களத்தடுப்பில் கட்டுப்பாடு வந்தது. 3 ஆக இருந்த 'பவர் பிளே' 2 ஆக மாற்றப்பட்டது. இந்த நடைமுறையை சந்திக்கும் முதலாவது உலகக் கிண்ணம் இதுவாகும்.

### 2 புதிய பந்து

2 புதிய பந்தில் பந்துவீச்சும் முறை அறிமுகமாகியுள்ளது. இதன்படி ஒரு இன்னிங்ஸில் இரு பந்துகளிலும் தலா 25 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்படும். இது, வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது.

### பகுதிநேர ஆதிக்கம் குறைவு

உள்வட்டத்துக்குள் அதிக பீல்டர்கள் என்ற கட்டுப்பாடு இருப்பதால், பகுதிநேர பந்துவீச்சாளர்களை வைத்து சமாளிக்க முடியாது.

### விதி மீறலுக்கு தடை

சுழற்பந்து என்ற பெயரில், ஐ.சி.சி., நிர்ணயித்த அளவை விட (15 டிகிரி) அதிகமாக கையை வளைத்து பவுலிங் செய்த பவுலர்கள் மீது சமீப காலமாக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உலகக்கிண்ணத் தொடரின் ஆட்டங்களிலும் சுழற்பந்துவீச்சு விதிமுறைகளுக்கு புறம்பாக இருந்தால் தொடரில் இருந்து உடனடியாக இடைநிறுத்தப்படுவார்.

### சுப்பர் ஓவர் இல்லை

ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தால் இரு அணிகளுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும். இறுதியாட்டம் சமநிலையென்றால் கிண்ணம் இரு அணியினருக்கும் பகிரப்படும்.

### பரிசு அதிகம்

உலகக்கிண்ணத் தொடரின் மொத்த பரிசுத்தொகை 2011 ஆம் ஆண்டை விட 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூபா 63 கோடியாக (இந்திய மதிப்பில்) உயர்ந்துள்ளது. கிண்ணம் வெல்லும் அணிக்கு மட்டும் ரூபா 24.6 கோடி கிடைக்கும்.

### நடுவர் மறு பரிசீலனை

கடந்த 2011 உலகக்கிண்ண தொடரைப் போல, இந்த உலகக்கிண்ண தொடரிலும் மீள் பரிசீலனை முறை உள்ளது. ஆட்டமிழப்புக்களின் துல்லியத்தினை அறிவதற்காக மீள்பரிசீலனை முறை இந்தமுறை மேலும் மெருகூட்டப்பட்டுள்ளது.

### வேகத்துக்கு சாதகம்

களத்தடுப்பில் கட்டுப்பாடு, 2 புதிய பந்து காரணமாக, வேகத்துக்கு சாதகமானநியூஸிலாந்து ஆடு களங்களில் பந்து நன்கு திசை திரும்பும். ஆஸ்திரேலியாவில் நல்ல வேகத்துடன் எகிறும். இதனால், இந்த முறை வேகப்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துவர் எனத் தெரிகிறது.

### இளமையின் வரவு

கடந்த 2011இல் இருந்த சச்சின், சேவக், சிமித், காலிஸ், முரளிதரன், பொண்டிங், பீற்றர்சன் போன்ற சீனியர்கள் கிடையாது. இதற்குப் பதில் கோஹ்லி, ஜடேயா, கோரி அண்டர்சன், பின்ச், மொயீன் அலி, மிட்சல் ஸ்டார்க் போன்றோர் ஜொலிக்க காத்திருக்கின்றனர்.

### அதிகரிக்கும் ஓட்ட விகிதம்

2011இல் சராசரி ஓட்ட விகிதம் 5.03 என இருந்தது. தற்போதைய புதிய விதிகள் காரணமாக 2014 இற்கு பின் ஆஸ்திரேலியா (5.42), நியூஸிலாந்து (5.64) மண்ணில் நடந்த ஒருநாள் ஆட்டங்களில் ஓட்ட விகிதம் வேகமாக உயர்ந்தன. இது உலகக்கிண்ணத் தொடரில் இன்னும் அதிகமாகும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

### மீண்டும் 14 அணிகள்

கடந்த 2011 உலகக்கிண்ண தொடருக்குப் (14 அணிகள்) பின், 2015, 2019 தொடர்களில் 10 அணிகள் மட்டும் பங்கேற்கும் என, ஐ.சி.சி. அறிவித்தது. அயர்லாந்து போன்ற ஐ.சி.சி., உறுப்பு நாடுகளிடம் இந்த முடிவு எதிர்ப்பை ஏற்படுத்த, அடுத்த 3 மாதங்களில் இது திரும்பப் பெறப்பட்டது. இதனால், மீண்டும் 14 அணிகள் பங்கேற்கின்றன. (த–ரி)



## மெஸ்ஸி மிகச் சிறந்த வீரர்

என்னுடன் விளையாடிய வீரர்களில் மெஸ்ஸி தான் சிறந்தவர் என்று நெய்மர் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரேஸில் நாட்டு உதைபந்து வீரரான நெய்மர் பார்சிலோனா அணிக்காக இந்த பருவத்தில் விளையாடி வருகிறார்.

இது குறித்து நெய்மர் நேற்று கூறியதாவது:–

நான் விளையாடிய போட்டிகளில் அனைத்து வீரர்களிலும் மெஸ்சி சிறந்தவர். அவர் மீது மிக பெரும் மரியாதையை நான் வைத்திருக்கிறேன்.

எல்லா நேரங்களிலும் நாங்கள் சிறப்பாக விளையாடி வருகிறோம். நாங்கள் இணைந்து விளையாடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும்.

நீங்கள் மைதானத்துக்கு வெளியே நல்லதொரு நட்பு முறையை தொடர்ந்து வந்தால் அது ஆட்டத்தில் பிரதிபலிக்கும். சிறப்பான ஆட்டத்துக்கு மேலாக விளையாடுவது என்பது மிக எளிதானதாக இருக்கும்.

முதல் பருவப் போட்டியில் அனைத்தையும் நான் தெரிந்திருக்க வேண்டிய நிலை இருந்தது. நிறைய சாதனைகளை நான் செய்ய வேண்டி உள்ளது என்று நான் எப்பொழுதும் கூறி வந்துள்ளேன். அதனை இன்றும் நான் உணருகிறேன். விளையாட்டு மற்றும் தனிப்பட்ட முறையில் நான் வளர்ந்துள்ளேன்.

எனது அணியை சேர்ந்த உலக தரமிக்க வீரர்களிடம் இருந்து நான் கற்றுள்ளேன். அவர்களுடன் இணைந்து திறமையான முறையில் பயிற்சி பெறுவது என்பது மகிழ்ச்சியான ஒன்று எனக் கூறியுள்ளார். (த)

## இன்ப அதிர்ச்சியில் மிதாலி ராஜ்



இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவி மிதாலி ராஜ், பத்மஶ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.

இது குறித்து 32 வயதான மிதாலி ராஜ் கருத்து தெரிவிக்கையில்; பத்மஶ்ரீ விருதை நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு இருப்பது மகிழ்ச்சி கலந்த ஆச்சரியமாகும். தேசிய விருதுகள் நமது திறமையைப் பாராட்டுவதாகும்.

நான் கிரிக்கெட் விளையாட தொடங்கிய காலத்தில் பெண்கள் கிரிக்கெட் குறித்து விழிப்புணர்வு எதுவும் கிடையாது. பெண்கள் கிரிக்கெட் போட்டி பற்றி மக்கள் யாருக்கும் தெரியாது. தற்போது பெண்கள் கிரிக்கெட்டை மக்கள் கவனித்து வருகிறார்கள். இந்த நிலைக்கு வர நாங்கள் நீண்ட காலம் பயணித்து இருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

இந்த விருது பெண்கள் கிரிக்கெட்டில் இளம் வீராங்கனைகள் ஈடுபட தூண்டுகோலாக இருக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (த)

## உலகக் கிண்ணத்திலும் சொதப்புவாரா தவான்

உலகக்கிண்ணப் போட்டியில் ஷிகர் தவானின் மோசமான ஆட்டம் பாதிப்பை ஏற்படுத்துமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடங்குகிறது. 15 பேர் கொண்ட இந்திய அணியில் தொடக்க வீரராக ஷிகார் தவான் உள்ளார்.

ஆனால் அவரதுதுடுப்பாட்ட விதம்கவலைஅளிக்கும்வகையில்இருக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சாதிக்க தவறிய அவர் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியிலும் மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தி வருகிறார் இதுவரை இந்தியா விளையாடிய 3 ஆட்டத்தில் தவான் முறையே 2,1 மற்றும் 8 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். உலகக்கிண்ணப் போட்டி தொடங்க இன்னும் 17 நாள்களே இருக்கும் வேளையில் தவானின் மோசமான ஆட்டம் உலகக்கிண்ணப் போட்டியில் பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்று அச்சத்தை உண்டாக்கி இருக்கிறது. (த)

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு

தமிழ், கணிதம், சுற்றாடல், அழகியல், விளையாட்டு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் தொகுப்பு

தரம் 05 மாணவர் களுக்கு
புலமைச்சங்கமம்
ஆக்கம் : கெக்கிராவ M.S.M. நளீம்
விலை : 550/-

தரம் 04 மாணவர் களுக்கு
புலமைச்சங்கமம்
ஆக்கம் : திருமதி சகுந்தலா ஜெயக்குமார்
விலை : 350/-

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
10-1/5, முதலாம் மாடி, Trust Complex,
ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13
தொ.பே : 077 6258778

திறந்த பல்கலைக்கழகச் சட்டமாணித் தெரிவு அனுமதிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

விரிவுரையாளர்
த. தவசேகர்
ஆரம்பம்:-
வியாழன் (29/01)
பி.ப. 5.00 மணி
ஒவ்வொருநாளும்
பி.ப. 5.00 தொடக்கம்
7.00 மணிவரை
0766883394
D.M.I
ஆரியகுளம் சந்தி.



SPOKEN ENGLISH

O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 01.02.2015

பிரிவு 1 : காலை 08.00-10.00 | பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 | பிரிவு 4 : மாலை 03.00-05.00

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

"ஆங்கிலத்தில் ஒரு எழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"

யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 83
நெல்லியடி 021 3200 607

SAAMSON LANGUAGE SCHOOL
ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

28 ஜனவரி 2015 புதன்கிழமை

உன்னைத் துறந்துவிடக்
கூடாது என்ற பாசமே,
உன்னை இறுக என் மார்புடன்
அணைத்துவிட்டது.
ஆ! உலகம் போற்றும்
விலையில்லாப்
பொக்கிஷத்தை இந்தப்
பலமற்ற கைகள் ஏனோ
சிறையிட்டிருக்கின்றன.

*—தாகூர்*

# உண்மையான இலட்சியங்கள் தோற்கடிக்கப்படுவதில்லை

ராஜராஜன்

சுனாமி, சூறாவளி, புயல், வெள்ளம், நில அதிர்வு, மண் சரிவு, எரிமலைச் சீற்றம், கடுமையான வறட்சி இவை யாவற்றையும் இயற்கையினால் ஏற்படும் இடர்கள் எனக் கூறுகின்றோம். இயற்கை தனது வெறுப்பையும் கோபத்தையும் இவற்றின் மூலமாக மனிதர்களுக்கு உணர்த்துகின்றது.

மனிதனைத் தவிர வேறு உயிரினங்கள் இயற்கைக்கு விரோதமாக நடந்து கொள்ளத் துணிவதில்லை. அவற்றின் பழக்க வழக்கங்களும் மாறுபடுவதில்லை. ஏதோவொரு இலட்சியத்துடன் அவை செயற்படுவதைக் காண்கின்றோம். மிருகங்களில் சில தாவர உணவுகளை உட்கொண்டு உயிர்வாழ்கின்றன. கொடிய மிருகங்கள் மாமிச உணவைத் தேடி உண்கின்றன. ஆயினும் அவற்றின் பழக்க வழக்கங்களில் ஒரு போதுமே மாற்றம் ஏற்படுவதில்லை. என்னதான் பசி எடுத்தாலும் தாவர உணவுகளை உட்கொள்ளும் மிருகங்கள் மாமிச உணவுகளை நாடுவதில்லை. இதைப் போன்றுதான் சிங்கம், புலி முதலிய கொடிய மிருகங்கள் பட்டினி கிடந்து சாவைச் சந்திக்க நேர்ந்தாலும் தாவர உணவுகளைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. இதனால் தான் புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது எனக் கூறினார்கள்.

பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவைக் கொண்டிராத இந்த மிருகங்கள் தாம் பிறந்த வேளைமுதல் இன்று வரை தமது அந்த வழக்கத்திலிருந்து பிறழாது வாழ்கின்றன. அது தொடர்பாக இந்த மிருகங்களுக்கு எவரும் சொல்லிக் கொடுத்ததில்லை. சொல்லிக் கொடுக்கவும் முடியாது. ஆனால் ஆறறிவு படைத்தவன் என்ற இறுமாப்புடன் வாழும் மனிதர்கள் கொள்கைகள், இலட்சியங்கள் யாவற்றையும் காற்றில் பறக்க விட்டுவிட்டுத் தமது வசதிக்கு ஏற்றவாறு வாழப் பழகிக்கொண்டு விட்டனர்.



உலகிலே இன்று இடம்பெற்றுவரும் தீமைகளுக்கெல்லாம் மனிதர்களின் இந்த இலட்சியமற்ற போக்கே பிரதான காரணமாகிவிட்டது.

அரசியலை எடுத்துக் கொண்டால் வெற்றி பெறுவர்களின் தராதரங்களைப் பாராது அவர்களுடன் ஒட்டி உறவாடிச் சுகம் காண்பவர்களைக் காண்கின்றோம். பதவியில் அமர்ந்திருப்பவர்களைப் போற்றுவதும், அவர்கள் பதவியை இழந்ததும் அதே வாயால் தூற்றுவதும் வழக்கமாகி விட்டது. பிழைக்கத் தெரிந்தவர்கள் என்ற புகழ் நாமம் வேறு இவர்களுக்குச் சூட்டப்படுகின்றது.

யதார்த்தவாதி பொதுசனவிரோதி எனக் கூறுவார்கள். இன்றைய உலகைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு நூறு வீதம் இதைச் சரியெனவே கூறவேண்டும். உலகின் யதார்த்தத்தை உணர்ந்து இலட்சியத்துடன் வாழ்பவர்களை எவரும் போற்றிப் புகழ்வதில்லை. வாழத் தெரியாதவன், பிழைக்கத் தெரியாதவன், சுத்த வெருளி போன்ற பட்டங்களே இவர்களுக்குச் சூட்டப்படுகின்றன. ஒருவன் நல்லவனாகவும், இலட்சியவாதியாகவும் வாழ்வதற்கு இந்த உலகமே தடைக் கல்லாக நிற்கின்றது. இந்தத் தடையை மோதி உடைத்து வெற்றி காண்பதென்பது இலகுவான காரியமல்ல.

இலட்சியவாதிகள் பலரது இறுதி முடிவுகள் திருப்திகரமானதாக அமைந்ததில்லை. முஸ்லிம்களுக்குச் சார்பாகக் கருத்துக்களைக் கூறியதாகத் தெரிவித்து இந்தியாவின் தேசத் தந்தை எனப் போற்றப்பட்ட மகாத்மா காந்தி இந்து வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் எழுப்பிய அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனும், இதே இலட்சியத்துடன் தொடர்ந்து குரல் எழுப்பிய மாட்டின் லூதர் கிங்கும் அகாலமான சாவையே தழுவ நேர்ந்தது. இலட்சியவாதிகளையும் நல்லவர்களையும் இந்த மண் ஏனோ மதிப்பதில்லை.

ஆனால் இதைக் கண்டு பயந்து ஒதுங்கிக் கொண்டால் இந்த உலகம் தீயவர்களின் பிடிக்குள் சிக்கிக் கொண்டுவிடும்.

இன்று உலகின் மிகக் கொடிய பயங்கரவாதிகளாகக் கருதப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்று அழைக்கப்படும் சிறிய கும்பலொன்று செய்து வரும் அட்டூழியங்கள் மனித குலத்துக்கே விரோதமானவை.

இவர்களும் ஏதோவொரு இலட்சியத்தை எட்டுவதற்காகவே தாம் போராடுவதாகக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் ஏனையவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களை இலட்சியம் என்ற புனிதத்துடன் இணைத்துப் பார்ப்பது தவறானது.

இலட்சியங்கள் எப்போதுமே நேர்வழியைக் கொண்டதாக அமைந்திருந்தல் வேண்டும். எமது கொள்கைகளுக்கு என்னதான் எதிர்ப்பு நேர்ந்தாலும் அவற்றை அடைவதற்கான இலட்சியத்திலிருந்து விலகுவதோ அல்லது அந்த நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதோ இழிவானதொரு செயலாகும்.

எவ்வளவுதான் எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு வெற்றி கொள்பவனே உண்மையான இலட்சியவாதி ஆவான்.

உண்மையான இலட்சியவாதிகள் இந்த உலகில் என்றுமே தோற்கடிக்கப்படுவதில்லை.

## புதன்பொய்கை



# வாழ்வின் ஆரம்பமும் முடிவும் மௌனம் தான்

மௌனம் தான் ஆன்மிகத்தின் வழிகாட்டி வாழ்க்கையின் அடித்தளம்.

மிதுமி

அமைதி, நிம்மதி, பொறுமை, தியானம் மற்றும் ஆனந்தம் அனைத்துக்கும் ஆரம்ப புள்ளி மௌனமே ஆகும். மனிதன் ஒருவன் எவ்வளவு சொத்துக்கள் வைத்திருந்தாலும் பத்துபேரின் உணவை தனித்து அவனொருவனால் உண்ணவும் முடியாது மொத்தமாக அனுபவிக்கவும் முடியாது. உன்னிடம் சொத்து கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வளவே. அதற்கு நீ காவலாளியே. அவைகள் எப்போது திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமோ தெரியாது.

ஒருவனது முடிவு காலம் வரும்போது அடுத்த வாரிசுகள் அவனது சொத்துக்காக கழுகுகள் போல் காத்திருப்பதை அவரவரே உணர முடியும் என்கின்ற போது இந்த உலகில் வாழ்க்கை என்ற சுழலில் சிக்கி திசையறியாது திணறிக் கொண்டிருப்பவர்களுக்கு உதவும் கலையே மௌனம்.

மௌனமாக இருக்கும்போது பேசாமல் இருப்பதால் பிராண சக்தி மிகும், மௌனத்தின் போது மனதைக் கட்டுப்படுத்துவதால் மனோ சக்தி மிகும். பின்னர் இதுவே தேக சக்தியாக மாறி எம்மைச் சக்தியுள்ள மனிதராக மாற்றும்.

மௌனம் என்பது ஒரு வெற்றிச் சொல், அதுவோர் ஞாபக சக்தி, தீர்க்க தரிசிகளின் கருவி. வெற்றி பெற உதவும் கலை, எதிரியைப் பயமுறுத்தும் ஆயுதம்.

ஆனால், நாம் எப்போதும் மௌனமாக இருக்க முடியாது, ஆனால் தினமும் ஒருமணிநேரமாவது மௌனமாக இருக்கப் பழகுவது என்பது எமது வாழ்வை மேம்படுத்தும். ஆம் வகுப்பறையில், ஆலயத்தில், மருத்துவமனையில், வியாபாரத்தில், பயணத்தில், தேர்வில் ஏன் சினிமா நுழைவுச் சீட்டு எடுக்க வரிசையில் நிற்கும் போது கூட உதவக் கூடியது இந்த மௌன நிலை. சுருங்கச் சொன்னால், மௌனமாக இருக்கப் பழகிக் கொண்டால் காத்திருப்பது எளிது, தனிமையில் இருப்பதும் எளிது.

இந்தப்பயிற்சியின் போது பல நினைவுகள் மனதில் வந்து போகும் பல சிந்தனைகள் எம்மை வெளியே அழைத்துச் செல்ல முற்படும். அவற்றையெல்லாம் தாண்டி மௌனப் பயிற்சியில் வெற்றி பெற்றால்தான் எமது கவனம் அதிகரிக்கும். அப்போது எதையும் கூர்ந்து அறிந்து கொள்ளும் சக்தியைக் கண்களும் மனமும் ஏற்படுத்திக் கொள்கின்றன. இதுவே அறிவு ஆகும், இதனையே ஞானம் என்றும் கூறலாம். மௌனத்தை ஏற்றுக் கொண்டு அதன் சுகத்தை அறிய வேண்டுமே ஒழிய அவமானப்படும்போதோ, தோல்வியடையும்போதோ, வாழ்க்கையில் வெறுப்படையும்போது மட்டும் மௌனத்திடம் தஞ்சம் அடைவது மௌனத்தைக் கட்டாயப்படுத்தி ஏற்றுக்கொள்வதாகும்.

அத்தகைய மௌனத்தால் பயன் சிறிதும் இல்லை. மௌனத்தால் ஏற்படுத்தப்படும் அமைதியில்தான் பாடம் நடத்தப்படுகிறது, பிரார்த்தனை நடத்தப்படுகிறது, தியானம் நடத்தப்படுகிறது. இதனால் அறிவு வளருகிறது. எனவே தான் மௌனம் அறிவின் திறவு கோல் ஆகிறது.

யோகிகளும் சித்தர்களும் மௌனத்தைஅதிகம்விரும்புவார்கள். அதுவே அவர்களுக்கு பலம். இதை கொண்டே வாழ்வின் உயர்வை அடைகிறார்கள்.

எனவே, மௌனமாக இருக்கப் பழகுவோம், ஆற்றலைப் பெருக்குவோம் வெற்றி என்ற சாதனையை எமது வசமாக்குவோம்.

மௌனம் தான் ஆன்மிகத்தின் வழிகாட்டி. வாழ்க்கையின் அடித்தளம். வாழ்வின் ஆரம்ப நிலையும் முடிவு நிலையும் மௌனம் தான். ஒருவரது மௌனம் உடல் என்ற கூட்டுக்குக் கதவு போன்றதாகும்.

இந்தக் கதவே ஒருவரது கடைசிக் காலம் வரை பாதுகாவலனாக இருக்கிறது. குறைந்தபட்சம் மௌனமாகக் கூட இருக்க முடியாத போது எப்படிச் சாதனை செய்ய முடியும்?

நாங்கள் உயர்ந்த நிலையை அடைவதற்கு மிக எளிய வழியும் எம்மால் முடியக் கூடிய வழியுமான மௌன விரதத்தை மாதம் ஒரு முறையேனும் கடைப் பிடித்து, மனதைத் தூய்மையாக்கி நோயில்லா வாழ்க்கையை, சந்தோஷமானவாழ்க்கையைஅமைத்து இந்த மனிதப் பிறவியின் உயர்வை அடைவோம்.

மௌனமாக இருக்கும்போது மனம் செயற்படாது. உடல் இயங்காது, உடலின் பிறசக்திகளும் இயங்கா. அதனால்சக்தி சேமிக்கப்படுகிறது. இந்தச் சேமிப்பு ஒருவனைச் சாதனை செய்ய உந்து சக்தியாக அமைகிறது.



> “ மௌனமாக இருக்கும்போது மனம் செயற்படாது. உடல் இயங்காது. உடலின் பிற சக்திகளும் இயங்கா. அதனால் சக்தி சேமிக்கப்படுகிறது. இந்தச் சேமிப்பு ஒருவனைச் சாதனை செய்ய உந்து சக்தியாக அமைகிறது.

# உங்களை நீங்களே தீர்மானியுங்கள்!



புவி

உளவியலாளர் ஒருவர் நீ என்பது உன்னைப்பற்றி நீ நினைப்பதே. உனக்கு வேண்டியதை நீயே எண்ணிக்கொள் என்று சொன்னார். பெரும்பாலான இளைஞர்கள் தங்களிடம் உள்ள பிரச்சினைகளை மனம் விட்டுப்பேசப் பயப்படுகின்றனர். அதனால், மனக்குழப்பம், மன அழுத்தம், மனச் சோர்வு ஏற்படுகின்றன. மனநோயின் முதல் தீர்வே மனம் திறந்து பேசுவதுதான் என்கின்றனர் மனநல மருத்துவர்கள். எல்லோருடைய உள்ளங்களிலும் ஏதாவதொரு பிரச்சினை, மனக்கஷ்டம், மனவருத்தம் இருக்கத்தான் செய்யும். எமக்கு மட்டும்தான் பிரச்சினை இருக்கிறது என்று கற்பனை செய்து சிலர் தங்களுடைய வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள்.

ஒரு மருத்துவராக, விஞ்ஞானியாக ஆகவேண்டும் என்பது உங்களுடைய எண்ணம் என்றால், அதில் உறுதியாக இருங்கள். யாருக்காகவும் உங்களுடைய எண்ணங்களை மாற்றிக் கொள்ளாதீர்கள். யாருக்காகவும் அந்த எண்ணத்தை விட்டு விடாதீர்கள். அதில், பல்வேறு தோல்விகள், தடைக்கற்கள், பிரச்சினைகள் வரும். எதைக் கண்டும் அதைத் தியாகம் செய்து விடாதீர்கள்.

உண்மையில் ஒரு மனிதனின் உண்மையான பலம் சந்தோஷம் தான். உங்களுடைய சந்தோஷம் உங்கள் கையில்தான். யாரும் உங்களுடைய சந்தோஷத்தைக் கெடுத்துவிட முடியாது.

வாழ்க்கையில் பிரச்சினையை எதிர்கொள்ளத் தெரியாதவர் மகிழ்ச்சியில்லாமல் இருப்பார். நாளை என்ன நடக்கும் என்று சிந்திப்பவர் சந்தோஷத்தை விரும்பமாட்டார். நாம் எதிர்காலத்தில் முன்னேறுவோமா என்று சந்தேகிப்பவர் மகிழ்ச்சியாக இருக்க மாட்டார். நான் எல்லாவற்றிலும் சிறப்பாக வருவேன் என்று நினைப்பவர் மகிழ்ச்சியாக இருப்பார். அவரது, மகிழ்ச்சியே அவரை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும். அதனால்,எப்போதும் சந்தோஷமாக இருங்கள்.

நல்ல ஆடைகளை அணியும்போது எம்முடைய எண்ணங்களும் செயல்பாடுகளும் அழகாக மாறுகின்றன. அதனால், எப்போதும் நல்ல ஆடைகளை அணிந்து, நல்ல எண்ணங்களோடு வலம் வாருங்கள். அடுத்ததாக, உங்களுக்கென்று நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களைச் சுற்றியிருப்பவரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய அலுவலகங்களிலோ, கல்லூரிகளிலோ, பாடசாலைகளிலோ இருப்பவர்களுடன் நீங்கள் எப்போதுமே உங்களது நற்பண்புகளின் மூலம் அழகாக இருங்கள். அதன் மூலம், அவர்களிடம் நல்ல எண்ணங்கள் ஏற்படும்.

ஒரு நாட்டின் மக்கள் தங்களை ஆட்சி செய்ய குறிப்பிட்ட காலத்துக்கு ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பார்கள். அவரை ஆட்சி செய்ய அனுமதிப்பார்கள். குறிப்பிட்ட காலத்துக்குப் பின்பு, அவரை ஆட்சியை விட்டு இறக்கி, பக்கத்தில் உள்ள காட்டில் கொண்டு போய் விட்டுவிடுவார்கள். இந்தப் பழக்கத்தின்படி, ஒரு சமயம் ஒரு இளைஞரை அந்த நாட்டின் தலைவராக்கினார்கள். வழக்கப்படி அவரைச் சில வருடங்கள் கழித்து காட்டில் கொண்டு போய் விட்டுவிட அழைத்துச் சென்றார்கள்.

ஆனால், ஆச்சரியம். அங்கே காடு இருப்பதற்குப் பதிலாக ஒரு ஊர் இருந்தது. இவர் தலைவராக இருக்கும்போதே அந்தக் காட்டைச் சுத்தம்செய்து, ஒரு ஊராக மாற்றிவிட்டார். இதுதான், ஒரு நேர்மறையாகச் சிந்திப்பவரின் எண்ணம்.

இவ்விதம் பண்பட்ட ஒருவர் எமக்கு என்ன வேலை கொடுத்திருக்கிறார்கள் என்பதுபற்றிச் சிந்திக்க மாட்டார். அதை எப்படிச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதுபற்றித் தான் சிந் திப்பார்.

### எப்போதும் நேர்மறையாகச் சிந்தித்து வெற்றி பெறுங்கள்

சாதிக்க நினைப்பவர்கள் ஒரு தடவை முயற்சி செய்துவிட்டு முயற்சியின்றி இருப்பவர்கள் அல்லர். சாதிக்கும்வரை முயன்று கொண்டே இருப்பார்கள். நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

---

## உங்களது ஒருநாள் எப்படி இருக்க வேண்டும்?

இணையவன்



வேகமாக இயங்கும் இயந்திர உலகில் ஒருநாள் என்பது ஆரம்பித்ததுமே முடிந்துவிடுவது போல உள்ளது. இன்றைக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதைத் திட்டமிட்டு செய்ய வேண்டும் என்பார்கள். இன்று திட்டமிடவே பாதி நாள் போய் விடுகிறது என்று கூறுபவர்களும் உள்ளனர்.

ஆனால், அதே நேரத்தில் ஒரு நாளை, சிறப்பாக கையாளும் ஆளுமைத் திறன் கொண்டவர்களும் உள்ளனர். ஒரு நாளில் எந்த வேலையை எப்போது செய்ய வேண்டும்? எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அறிந்து செயல்படுபவர்களும் உள்ளனர். அவர்களது ஒருநாள் எப்படி உள்ளது என்று பார்ப்போம். தொழில் முனைவோராக இருப்பவராகவோ, அல்லது அலுவலகத்தில் பணிபுரிபவராகவோ இருந்தால், அவர் காலை 6 மணிக்கு எழுந்திருப்பது சிறந்தது. அதிலிருந்து அவரது அன்றைய நாளை துவங்கலாம். காலை 6.15 – 7 மணி வரை அன்றைய நாளைச் சிறப்பாகத் தொடங்க, புத்துணர்ச்சியாக வைத்திருக்க உடற்பயிற்சி செய்யலாம். பின்பு 7 மணி முதல் 8 மணி வரை ஒருவர் குளியல் உள்ளிட்ட வேலைகளை முடித்து அலுவலகத்துக்குப் புறப்படத் தயார்ப்படுத்துக் கொள்ள பயன்படுத்தலாம். 8 மணிக்கு அவர் தனது அலுவலகத்துக்குப் பயணிக்கத் தொடங்கினால் 8:30 மணிக்குள் அலுவலகத்தை அடைந்து விடலாம் என்று வைத்துக் கொள்வோம். அப்படி இருக்கும் போது 8:30 மணியிலிருந்து 9:15 மணிக்குள் தனக்கு வந்திருக்கும் ஈ–மெயில்கள், கடிதங்கள் ஆகியவற்றைப் பார்த்து பதிலளிக்க பயன்படுத்திக் கொள்ளலாம். அதன்பின்னர் தான் அலுவலக வேலைகள் ஆரம்பிக்க உள்ளன. 9:15 மணிக்கு ஆரம்பித்து 9:40 மணி வரை இன்றைய நாளுக்கான திட்டங்கள், இன்றைய நாளில் செய்ய வேண்டிய வேலைகள் ஆகியவற்றைப் பற்றி அலுவலக குழுவுடன் சேர்ந்து விவாதிப்பது. அதில் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து திட்டமிடுவது போன்ற செயல்களைச் செய்யலாம். 9:40 மணி தொடக்கம் 10 மணி வரை உங்களது சிறிய உணவு இடைவேளை எடுத்துக் கொள்வது உங்களது வேலையை மீண்டும் புத்துணர்ச்சியாக்கும்.

10 மணிக்கு மீண்டும் வேலையை ஆரம்பித்து முழுமையான இரண்டு மணி நேரம் உங்கள் வேலையைப் பார்க்கும்போது உங்கள் வேலை கிட்டத்தட்ட 60 சதவிகிதம் பூர்த்தியாகிவிடும். 12 மணி முதல் 12:30 வரை அழைப்புகளைக் கையாள்வதிலோ அல்லது வாடிக்கையாளர்களுடன் பேசுவதிலோ செலவிடலாம்.

12:30 மணி முதல் ஒரு மணி வரை அரை மணி நேரத்தை உணவு இடை வேளைக்கு எடுத்துக் கொண்டு 1 மணி முதல் 3 மணி வரை மீண்டும் வேலையை முழுமையாக கவனித்து 3 மணிக்கு மேல் 15 நிமிட இடைவேளை எடுத்து கொள்ளலாம். அது அடுத்த 2 மணி நேர வேலைக்கான புத்துணர்ச்சியை அளிக்கும்.

5:30 முதல் 6:30 வரை அலுவலகத்தில் இருந்து உங்கள் வீட்டுக்கு வருவதற்கு நேரமாகிறது எனில் 6:30 மணியிலிருந்து 8 மணி வரை உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள், நண்பர்கள் ஆகியோர்ரோடு செலவழியுங்கள். 8 மணி அல்லது அதற்கு முன்பு இரவு உணவை எடுத்துக் கொள்ளுங்கள்.

9 மணியிலிருந்து 10.15 மணி வரை உங்களது அறிவை வளர்த்துக் கொள்ளும் விடயங்களில் நாட்டம் செலுத்துங்கள். 10:30 மணிக்கு தூங்கச் சென்றால் காலை 6 மணிக்கு எழ வேண்டும் என்றால் சராசரியாக ஏழரை மணி நேர உறக்கத்தை எடுத்து கொள்வது உடலை ஆரோக்கியமாகவும், அடுத்த நாளை சுறுசுறுப்பாக ஆரம்பிக்கவும் உதவும்.

இத்தகைய ஒழுங்கில் செயற்பட்டால் ஒருவரால் சிறப்பாக ஒரு நாளில் செயற்பட முடியும். இதைத்தான் சிலர் சிறப்பாகக் கடைப்பிடித்து சரியாக தனது நாளைப் பயன்படுத்துகின்றனர். நீங்களும் இதனை கடைப்பிடிக்கலாமே?

# புதன்பொய்கை













## நல்லூர் பிரதேச கலாசார பேரவையின் பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெரு விழா 2014 நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நல்லூர் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் மங்கல விளக்கேற்ற, தமிழ் தாய் வாழ்த்து, கலாசார பேரவைக்கீதம் இடம்பெற்று நல்லூர் பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினரின் மங்கல இசையுடன் விழா ஆரம்பமாகியது. விழாவில் அரங்கத் திறப்புரையை கிராம அலுவலர் பு.தஜிதரனும், வரவேற்புரையை நல்லூர் பிரதேச உதவிச் செயலர் திருமதி சுபாஜினி மதியழகனும் நிகழ்த்தினார்கள். த்லைமை உரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்ட வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி உஷாசுப லிங்கம் உரையாற்றினார்.

வரவேற்பு நடனத்தை திருமதி அகல்யா சுந்தரத்தின் மாணவிகள் நிகழ்த்தினர். இசையரங்கில் கலாவித்தகர் ம.தயாபரன் குழுவினரின் இசை விருந்தும், கோண்டாவில் நாராயணா கலைக் கழகத்தின் வேரும் விழுதும் நாடகமும், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகளின் நாட்டியப் பயணமும் இடம் பெற்றன.

நிகழ்வில் சிறந்த குறும்படத் தயாரிப்பாளர் நடிகர், நடிகை தெரிவில் வெற்றி பெற்ற கலைஞர்களுக்கான சான்றிதழ்களை திருமதி உஷா சுபலிங்கம் வழங்கினார். 'கலைஞானச்சுடர்' நூலை பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனிடமிருந்து பேராசிரியர் பா.கோபாலகிருஷ்ண ஐயர் பெற்றுக் கொண்டதை அடுத்து கலைஞானச் சுடர் விருது பெற்ற கலைஞர்களுக்கான விருதுகளை பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர் வழங்கிக் கௌரவித்தார். (வ-7)



# புதன்பொய்கை

## பொது அறிவு

- உலகிலேயே மிகப்பெரிய பூ எது?
  ரவல்சியாஆர்ணல்டி
- உலகிலேயே மிக நீளமான வீதி அமைந்துள்ள இடம் எது?
  அலாஸ்கா
- உலகிலேயே மிகப் பழைமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்?
  தொலமி
- உலகிலேயே மிகப் பிரபலமான விஞ்ஞானசஞ்சிகை எது?
  நேச்சர்
- ஆசியாவில் உள்ள கிறிஸ்தவ நாடு எது?
  பிலிப்பைன்ஸ்
- உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது?
  ஆஸ்திரேலியா
- உலகில் மிக உயரத்திலுள்ள ஏரி எது?
  டிடிக்காகா
- உலகில் மிக உயரமான அணை எது? போல்டர் அணை
- உலகிலேயே மிகப் பழைமையான கம்யூனிஸ்ட் நாடு எது?
  சீனா
- உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு எது?
  இந்தியா
- உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?
  மாண்டரின்(சீனா)
- உலகில் அதிகளவில் அச்சிடப்படும் நூல் எது?
  பைபிள்
- கடல்மட்டத்துக்கு கீழே உள்ள நாடு எது?
  நெதர்லாந்து
- உலகில் ஆறுகளே இல்லாத நாடு எது?
  சவூதி அரேபியா
- உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு எது?
  இந்தோனேஷியா
- உலகில் மிக உயரமான அணை யாது? போல்டர் அணை

யோ.அபிசன்



*எஸ்.அனிருத்தன்*
*மானிப்பாய் மகளிர் கல்லூரி*



*விமலேஸ்வரன்*
*அச்சுவேலி மத்திய கல்லூரி*




*ஜெ.ஜெசூஷன்*
*கனகரத்தினம் மத்திய ம.வி.*



*டி.பிரவீண்*
*வதிரி வடக்கு, மெ.மி.த.க.பா.*

## நல்லவரும் கெட்டவரும்



ஒருவர் தனது இரு மாணாக்கர்களை அழைத்து அவர்களில் ஒருவரிடம் இந்த உலகிலேயே மிகமிக நல்லவனை அழைத்து வரும் படி கூறினார். மற்றவரிடம் மிக மிக கெட்டவனை அழைத்து வரக்கூறினார்.
இரண்டுபேரும் நன்றாகத் தேடிவிட்டு திரும்பி வந்தனர். நல்லவனைத் தேடச்சென்றவன் திரும்பி வந்து ஐயா. எவ்வளவோ தேடிவிட்டேன். இந்த உலகில் ஒரு நல்லவனும் எனக்குக் கிடைக்கவில்லை என்றான். கெட்டவனைத் தேடச்சென்றவன் திரும்பி வந்து ஐயா. எவ்வளவோ தேடிவிட்டேன். இந்த உலகில் ஒரு கெட்டவனும் எனக்குக் கிடைக்கவில்லை என்றான். உலகில் இரண்டும் கலந்தே இருந்திருக்கிறது, இருக்கிறது. இருக்கும். உங்கள் மனநிலையைப் பொறுத்தே மற்றவரை நல்லவரா? கெட்டவரா? என எடைபோடுகிறீர்கள் என்று குரு சொன்னார்.

## பாட்டாவும் பாட்டியும்




பாட்டா வெளியே வாருங்கள்
பால்போல் நிலவைப் பாருங்கள்
பாட்டி மதியுள் தன்காலை
நீட்டிக் கொண்டே இருக்கிறாள்

பாட்டா பாட்டா வாருங்கள்
பாட்டி பாக்கை உரலுக்குள்
போட்டு வெற்றிலை இடிக்கிறாள்
பொக்கு வாயால் சிரிக்கிறாள்

பாட்டா பாட்டா வாருங்கள்
பால்போல் நிலவைப் பாருங்கள்
பாட்டி முதுகு மிகக் கூனிப்
போச்சே பொல்லைக் கொடுப்போமா?

## பிரம்மாண்ட ஹிமாலயன் தேசிய பூங்கா!

இமாச்சலப் பிரதேசத்தின் குலு ஜில்லாவில் பிரம்மாண்ட ஹிமாலயன் தேசியப் பூங்கா அமைந்துள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் 1,500 மீற்றர் முதல் 6,000 மீற்றர் வரை உயரத்தில் இந்தப் பூங்கா அமைந்துள்ளது. அதாவது 1,171 கிலோ மீற்றரில் சுமார் 90,540 ஹெக்ரேயரில் இது பரவிக்கிடக்கிறது.
உலக நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார இயக்கமான யுனெஸ்கோவினால் 2014 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் திகதி இந்தப் பூங்கா, தேசிய மற்றும் உலக பாரம்பரிய இடமாக அங்கீகரிக்கப்பட்டது.
சுற்றிலும் உயரமான மரங்கள்... பசும்புல் நிலங்கள்... ஆறுகளை ஒட்டிய காடுகள் என இந்த இடமே இயற்கையின் எழில் நிறைந்த பூமியாகும்.
இங்கு 832 செடி வகைகளும், அழியும் நிலையில் உள்ள பல தாவரங்களும் உள்ளன. 128 குடும்பங்களைச் சேர்ந்த இவை, 472 பிரிவுகளில் இங்கு வளர்கின்றன. இவற்றைப் பாதுகாத்து அதிகரித்து வளமூட்ட அமைக்கப்பட்டது தான் தேசிய பூங்கா. இங்கு பலவகையான ஆடுகள் உள்ளன. அவை டாகிர்... சீரோ... கோரல் என அழைக்கப்படுகின்றன.
சிறுத்தைகளுக்குப் பேர் போன இடம் இதுவாகும்.
ஹிமாலயன் கறுப்புக் கரடி, ஒரு வகை சுண்டெலி, பறவைகளில் புறா போன்ற அமைப்புக் கொண்ட டிராகோபான்... கோழி மாதிரி உருவம் கொண்ட சியர் பீசன்ட் என்ற பல வகையான நூதன மிருக, பறவை வகைகளையும் இங்கு காணலாம். அழகு கொழிக்கும் இந்தப் பூமியை, கெடாமல் அப்படியே பாதுகாப்பதால் தான் இதற்கு யுனெஸ்கோ அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது உலக பாரம்பரிய இடமாக இறுதியாக அறிவிக்கப்பட்டு விட்டது.

















## பொங்கலன்று வெளியிடப்பட்ட சங்கானை இளைஞர்கள் ஒத்துழைப்பில் உருவான 'தமிழ்ப்பசங்க' திரைப்படம்

வலி.மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட சங்கானைப் பிரதேச இளைஞர்களின் ஒத்துழைப்புடன் பிரதீபனின் தயாரிப்பில் உருவாகிய 'தமிழ்ப்பசங்க' திரைப் படம் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள 'லெஸ்லி' திரையரங்கில் தைப்பொங்கல் தினத்தன்று திரையிடப்பட்டது. நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு பாராட்டையும் வழங்கினார்.

இதன்போது தவிசாளர் உரையாற்றுகையில்:

எனது பிரதேசத்தைச் சேர்ந்த இந்த இளைஞர்களின் ஆக்கத் திறன் முயற்சி பாராட்டப்படக்கூடியது என்பதற்கு மேலாக இது எமது பிரதேசத்துக்குப் பெருமைசேர்க்கும் செயற் பாடும் ஆகும். இன்றைய இளையவர்கள் மீது பல்வேறு வகைகளிலும் குற்றம் சுமத்தி நிற்பவர்களுக்கு இவர்களின் ஆக்கத் திறன் முயற்சி முன்னுதாரணமாய் அமையும். விமர்சனங்கள் என்பதற்கு அப்பால் சிறந்த சிந்தனை மற்றும் சமகாலத் தன்மைகள் என்பவற்றைக் கொண்டதாக இந்த செயற்பாடு அமைந்திருப்பது போற்றத்தக்கது.

இதற்கும் மேலாக இளைய கலைஞர்களின் நடிப்பு நிலை மேலும் சிறப்பான ஒன்றாகவே கொள்ள முடியும். இந்த இளைய சமுதாயம் மேலும் சிறப்புப்பெற்று மேல் நிலை அடைய வேண்டும் என்று வாழ்த்துவதோடு அவர்களது முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய யாவருக்கும் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான பரஞ்சோதி, கஜதீபன், ஆனல்ட், கலாநிதி சர்வேஸ்வரன் முதலான பலரும் கலந்து சிறப்பித்ததோடு படைப்பாளியும் இயக்குநருமான பிரதீபனுக்கு பாராட்டும் தெரிவித்துக் கொண்டனர்.


IELTS™



உங்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு, குடிபெயர்விற்கான பரீட்சை!

பிரிட்டிஷ் கவுன்சிலின் IELTS இலவச பயிற்சிப்பட்டறை.

| | |
|---|---|
| திகதி: | சனிக்கிழமை, 31 ஜனவரி |
| நேரம்: | 3.00 பி.ப – 5.00 பி.ப |
| இடம்: | பிரிட்டிஷ் கவுன்சில், 70 றக்க ரோட், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் |

இலவச பதிவிற்கு 021 7521521 ஐ அழைக்கவும் அல்லது எமது வலைத்தளத்தினுள் பிரவேசிக்கவும்
www.britishcouncil.lk/events/ielts-jaffna

BRITISH COUNCIL


## சிரிப்பு வரும்...... ஆனால் வரக்கூடாது!

தெரிந்த பிசாசுக்காகவோ, தெரியாத தேவதைக்காகவோ சுவரொட்டிகளை ஒட்டும், துண்டுப்பிரசுரங்களை கண்மண் தெரியாமல் வீசும் ஆக்கினை ஓய்ந்துவிட்டது. இவற்றைப் படித்துக் கிழிப்பதும், படிக்காமல் கிழிப்பதும், இதற்கு மேலாக, சட்டம் என்று சொல்லி சீருடையிலும் அல்லாமலும் வந்து தாம்கொண்டுவரும் தட்டை உளிபோன்ற அலகுகளால் சுரண்டிக் கிழித்து விடுவதும் வேடிக்கையானதொரு ஜனநாயகம் தான். பரப்புரைக்காக அரச பணத்தில் இரண்டு பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாம். தொலைக்காட்சிகளதும் நாளிதழ்களதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இணைய ஊடகங்களினதும் காட்டில் நல்ல மழைதான். தயாரிப்புச் செலவுகள் உள்ளடங்கியதான விளம்பரச் செலவுகள் இதை விடக் கூடியதாக இருக்கும் எனப்படுகிறது. வேட்பாளரது தோற்றத்தை ஒத்த, ஒரே பெயரைக்கொண்ட ஒருவரைத் தேடிப்பிடித்து அதே உடையலங்காரங்களுடன் உலாவ விட்டு என பல்வேறு தகிடுதத்தங்கள்...... சிரிப்பு வருகிறதா?

மதுவால் தமிழர் கலாசாரம் சீரழிகிறது; அரசியல் கைதிகளாக சிறையில் இருக்கும் வடக்கு, கிழக்கு அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்; வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடந்த அரசின் காலத்தில் இடம் பெற்ற காணி அபகரிப்புக்கள் குறித்து தம்மிடம் தெரிவிக்கலாம், நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போராட்டம் நடத்தப்படும் – இவ்வாறெல்லாம் தெரிவித்திருப்பவர்கள் தமிழ் அரசியல்வாதிகளோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகளோ அல்ல. இவர்களிடம் அவர்கள் பிச்சை வேண்டவேணும். "சிரிக்கச் சிரிக்க சிரிப்பு வருது. சின்ன மனிசன் பெரிய மனிசன் செயலைப் பார்க்க சிரிப்பு வருது" என்ற சினிமாப்பாட்டின் வரிகள் நினைவுக்கு வருகிறது. அப்படியானால் இதற்கும் சிரிப்பு வரவேண்டுமே?

பட்ட மரத்திலே பால்வடிகிறது; ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுதது எனப் பாட்டிக் கதை சொல்பவர்கள் சொன்னால், கேட்பதற்கு எம்மினத்தவர்கள் என்னபோடு தடிகள்தானே என்ற நினைப்புத்தானே இவர்களுக்கு. இந்த அரசியல்வாதிகளின் – ஆசாடபூதிகளின் போக்கை நோக்க, "தமிழினத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்ற தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனம் நெட்டி முறித்துக் கொள்கிறது. இந்த மண்ணில் தமக்கான உரிமைகளுடன் தலைகுனியாமல் வாழ நினைக்கும் தமிழ்ச்சாதிக்கு உண்மையில் அழுகைதான் வரவேண்டும். ஏனெனில் அழுவதற்கான சுதந்திரம் தான் எம்மினத்தவர்களுக்குக் கூடுதலாக உள்ளது என்பதை ஏற்பவர்களுக்கு மேற்படியான்களை நினைக்க – பம்மாத்துக்காரர்களை நினைக்க – சிரிப்பு வரக்கூடாது.

செல்வவேலாயுதம்

# நம்பிக்கை தருவோம்



பா.ராஜா

**இன்றைய இளைஞன், நாளைய முதியவர். எனவே, இளைஞர்களே! முதியவர்களைப் புறக்கணிக்காதீர். அவர்களை அரவணைத்துச் செல்லுங்கள்.**

ஒரு மனிதனது வாழும் காலம், குழந்தைப் பருவம், விடலைப் பருவம், இளமைப் பருவம், பொருள் ஈட்டும் பருவம், முதுமைப் பருவம் என பல பருவங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை மகிழ்ச்சி யுடன் வாழ வேண்டும் என்றே நினைக்கிறான். பிற பருவங்கள் எப்படி இருந்தாலும், முதுமைப் பருவம் அவனை மிகவும் வாட்டுகிறது.

மிடுக்குடன் வாழ்ந்த மனிதர் கூட, முதுமையை எட்டி விட்டால், துச்சமாக மதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். அவர், பேரனுக்கு மிட்டாய் வாங்கும் பணிக்கு வீட்டில் உள்ளோரால் ஏவப்படுகிறார். குழந்தைகளால் கூட மதிக்கப்படாத நிலையில் முதியவர்களின் நிலை உள்ளது. ஒரு காலத்தில் தான் வைத்தது தான் சட்டம் என்று வாழ்ந்தவர்களின் நிலை முதுமையில் பரிதாபகரமாகத்தான் உள்ளது. அந்தக் காலத்தில், முதியவர்கள் கடவுளுக்குச் சமமாக மதிக்கப்பட்டனர். இன்று அவர்களே செல்லாக் காசாக மதிக்கப்படுகின்றனர். கணவன், மனைவி இருவரும் பணிக்குச் செல்பவராக இருந்தால், குழந்தைகளைப் பாடசாலைக்கு இட்டுச் செல்லும் வேலையாளாகவும், மின் கட்டணம் செலுத்தச் செல்ல வேண்டியவராகவும், நியாய விலைக் கடைக்குச் சென்று வரும் ஒரு பணியாளர் நிலைக்கும் முதுமை அடைந்தவர்கள் தள்ளப்படுகின்றனர்.

இந்த வேலைகளை முதியவர்களே விரும்பிச் செய்தால் மகிழ்ச்சிதான். அதையே விருப்பமின்றிச் செய்தால்?

முன்பெல்லாம் கூட்டுக் குடும்பமாக இருந்ததால், எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. வீட்டின் மூத்த உறுப்பினர் தலைவராக இருப்பார். அவர் வைத்தது தான் அந்த வீட்டில் சட்டம். வரவு – செலவு கணக்கெல்லாம் அவர் தான் பார்ப்பார். ஆனால், இன்று மருந்து, மாத்திரை வாங்குவதற்கு மகனையோ, மருமகளையோ நம்பி இருக்க வேண்டிய நிலை. கூட்டுக் குடும்பமாக இருந்தால், பேரன், பேத்திகளோடு கொஞ்சி மகிழும் வாய்ப்புக் கிடைக்கும். இன்று எத்தனை பேருக்கு அத்தகைய கொடுப்பினை உள்ளது?

ஒரு தம்பதிக்கு இரு மகன்கள் இருந்தால், தாய் ஒரு மகன் வீட்டிலும், தந்தை மற்றொரு மகன் வீட்டிலும் இருக்கும் நிலையையும் காண முடிகிறது. கூட்டுக் குடும்பமாக உள்ளோர் பற்றிய தகவலை இன்று நாளிதழ்களில் செய்தியாகவும், ஒளிப்படமாகவும் மட்டுமே காணமுடிகிறது. முதியவர்கள் புறக்கணிப்பு குறித்த ஆய்வு முடிவுகள் அதிர்ச்சியூட்டு பவையாக உள்ளன.

பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பார்கள். தன்னிடமிருந்த சொத்து, சுகத்தையெல்லாம் அன்பு மகனுக்கும், ஆசை மகளுக்கும் எழுதிக் கொடுத்துவிட்டு, வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் வறுமையிலும் தனிமையிலும் வாடுவோர் பலர்.

இன்று அத்தகைய நிலையில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. தனக்கு மிஞ்சித் தான் தான தர்மம்' என்பதுபோல, தாங்கள் வாழும் காலத்துக்குப் பின்னரே, தங்களது சொத்துகள் வாரிசுகளுக்குச் சொந்தமாகும் என்று உயில் எழுதி வைத்து விடுகின்றனர்.

மேலும், முதுமைப் பருவம் வந்து விட்டாலே நோய்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வாட்டி வதைக்கும். அரவணைப்புத் தேவைப்படும் சமயத்தில், அவர்கள் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்படலாமா?

இன்று முதியவர்களை அரவணைப்பதற்கு முதியோர் இல்லங்கள் உள்ளன. இவை இளைஞர் தங்கும் விடுதிகள், மகளிர் தங்கும் விடுதிகள் போல பல்கிப் பெருகி வருகின்றன. தமிழகத்தில் உள்ள ஒரு வளம் மிக்க மாவட்டம், மூத்த குடிமக்களின் கேந்திரமாக விளங்கி வருகிறது. முதியோருக்கென தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் புறநகர்ப் பகுதியில் புற்றீசல் போலப் பெருகி வருகின்றன. அனைத்து வசதிகளும் இங்கு ஏற்படுத்தித் தரப்படுகின்றன. பண வசதி இருந்தால், இங்கு தங்கலாம்.

ஒவ்வொரு பணிக்கும் குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாக அறவிடுகின்றனர்.

முதியோரின் புறத் தேவைகளை இந்த இல்லங்கள் நிறைவேற்றித் தரலாம். ஆனால், அவர்களின் அகத் தேவையை நிறைவு செய்ய முடியுமா? எனது மகன், எனது மருமகள், எனது பேரன், எனது பேத்தி என்று சொல்ல அருகில் யாராவது இருப்பார்களா?

இத்தகைய தனிமை அவர்களை கொல்லாமல், கொல்லும். மேலும், வசதி படைத்தவர்களால் மட்டுமே இந்த இல்லங்களை நாட முடியும். மற்றவர்களின் நிலை?

மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள பிரமிக்கத்தக்க வளர்ச்சி மனிதர்களின் வாழ்நாளை அதிகரித்திருக்கிறது. ஆனால், மனிதர்கள் தற்போது புதிய புதிய நோய்களுக்கு ஆளாகின்றனர். நோயுடன் இறுதிக் காலத்தைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இன்றைய இளைஞன், நாளைய முதியவர். எனவே, இளைஞர்களே! முதியவர்களைப் புறக்கணிக்காதீர். அவர்களை அரவணைத்துச் செல்லுங்கள். அவர்களுடன் அமர்ந்து பேசுங்கள். அவர்களது அனுபவ அறிவு உங்களுக்குப் பயன்படும். பண்டிகை தினங்களில் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுங்கள். அந்தச் சமயத்தில் அவர்களின் முகத்தில் தோன்றும் ஒளிக்கு ஈடாக எதையும் ஒப்பிட இயலாது.

நம்பிக்கை இனிமையானது; நம்பிக்கை வாழ்வில் ஒளியேற்றும்; நம்பிக்கை நிறைவைத் தரும்; நம்பிக்கை என்றும் அழியாதது. எனவே, முதுமைப் பருவத்திலும் நம்பிக்கையை இழக்காதீர்கள்' என்றார் ஓர் ஆங்கில அறிஞர். இது முதியோருக்கு அந்த அறிஞர் சொன்ன அறிவுரை. நாமும் நமது செயல்கள் மூலம் முதியோருக்கு நம்பிக்கை கொடுப்போம்!

## மன்னாரில் [illegible] இடம்பெற்ற 'பாரதி விழா' நிகழ்வு







மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றம் ஏற்பாடு செய்திருந்த 'பாரதி விழா' நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ மஹாதர்மகுமார சர்மா குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தமிழ்மணி கலாநிதி அகளங்கன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், விசேட விருந்தினராக மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் மற்றும் கௌரவ விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலர் எஸ்.பரமதாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான், சட்டத்தரணி எம்.சபூர்தீன் உட்பட கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். கலை நிகழ்வுகள், பட்டிமன்றம் ஆகியவை இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது 'ஊடகம் துறை சார்' விருது மன்னார் மாவட்ட ஊடகவியலாளர் ஏ.ரீ.மார்க்குக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

குறித்த விருதை மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் மற்றும் எழுத்தாளர் சாகித்திய விருது பெற்ற எஸ்.ஏ.உதயன் ஆகியோர் இணைந்து வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

(வ–5[illegible]

# புதன்பொய்கை

## விரலை அழுத்தினால் எல்லா நோயும் பறக்கும்

உடலில், ஏதேனும் ஓரிடத்தில் வலி ஏற்பட்டால், அந்தப் பகுதியை எமது கையால் அழுத்திவிட்டுக் கொள்கிறோம். அப்படிச் செய்தால், வலி குறைகிறது. இது எப்படி ஏற்படுகிறது? எமது உடல் முழுவதும் அக்குப்பிரஷர் புள்ளிகள் உள்ளன. நாம் வலியுள்ள பகுதியில் அழுத்தம் கொடுக்கும் போது, அந்தப் பகுதியில் உள்ள அக்குப்பிரஷர் புள்ளிகள் தூண்டப்படுகின்றன. அதனால் வலி குறைகிறது. உடலில் உள்ள சில குறிப்பிட்ட புள்ளிகளில் சில முறைகள் அழுத்தம் கொடுத்து தளர்த்துவதால் நோய்கள் தீருகின்றன. நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றன. சில நோய்களுக்கு அக்குப்பிரஷர் முறையில் தீர்வு காணும் எளிய முறைகளைக் கீழே காணலாம்.

### தலைவலி

எமக்குப் பிடிக்காத ஒரு வேலையைப் பிறர் எம்மை செய்யச் சொல்லும் போது, தலை வலிக்கிறது என்று கூறி தப்பித்துக் கொள்கிறோம். ஆனால், உண்மையில் தலைவலி வந்தால் என்ன செய்கிறோம்? வலி நிவாரணக் களிம்புகள் தடவுகிறோம். அவை கொடுக்கும் வெப்பத்தால் தலைவலி குறைவது போல் உணர்கிறோம் அல்லது வலி நிவாரண மாத்திரைகள் எடுத்துக் கொள்கிறோம். அடிக்கடி மாத்திரைகள் எடுத்துக் கொள்வதால், பக்க விளைவால் துன்பப்படுகிறோம். மருந்தில்லாமல் தலைவலியை எப்படிப் போக்குவது? உடலின் அனைத்து உறுப்புகளுக்குமான பிரதிபலிப்புப் புள்ளிகள், நம் உள்ளங் கைகளில் உள்ளன.

படத்தில் காட்டியதுபோல், உள்ளங்கை உடலைக் குறிக்கும். கட்டைவிரல் தலையை குறிக்கும். கட்டை விரலின் நுனியில் உள்ள பக்கவாட்டுப் பகுதி நெற்றிப் பொட்டைக் குறிக்கும். படத்தில் காட்டப்பட்டுள்ள கட்டை விரலின் நகத்தினடியில் உள்ள இருபுள்ளிகளை மற்றொரு கையின் கட்டை விரல், ஆள்காட்டி விரல் இவற்றினால் அழுத்தம் கொடுக்க வேண்டும். 14 முறை அழுத்தம் கொடுத்து தளர்த்த வேண்டும். அழுத்தம் கொடுக்கும்போது,மூச்சை உள்ளே இழுக்கவும், தளர்த்தும்போது மூச்சை வெளியே விடவும், 14 முறை முடிப்பதற்கு முன்பே தலைவலி மறைந்துவிட்டால் அத்துடன் நிறுத்தி விடலாம். வலி அப்போதும் தொடர்ந்தால், மற்றொரு கைக்கட்டை விரலில் 14 முறை அழுத்தம் கொடுக்கவும். அழுத்தம் கொடுத்துமுடிப்பதற்குள் தலைவலி போயே போச்சு!

### ஒவ்வாமை, சைனஸ், தும்மல், இருமல்

ஒவ்வொரு விரல் நுனியிலும், சைனஸ் புள்ளிகள் உள்ளன. விரல்நுனிகளில் அழுத்தம் கொடுத்து தளர்த்தும் போது, ஒவ்வாமை, சைனஸ், தும்மல், இருமல் இவை வெகுவாக குறைக்கப்படுகின்றன. விரலின் முதல் கோடு வரை, மேலும், கீழுமாக 14 முறைகளும், பக்கவாட்டில் 14 முறைகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.10 விரல்களிலும் இவ்வாறு தினமும் இரு முறைகள் காலையிலும், மாலையிலும் செய்தால் அலர்ஜி, சைனஸ், தும்மல் என்பவை மறைகின்றன. மீண்டும் வராமல் தடுக்கப்படுகின்றன. ஆஸ்துமா தொல்லை கூட வெகுவாகக் குறைகிறது.

வலையவன்



### மலச்சிக்கல், அஜீரணம், அசிடிட்டி, வாயுத்தொல்லை, மூச்சுப்பிடிப்பு

ஆள்காட்டி விரலையும், கட்டை விரலையும் நெருக்கமாக சேர்க்கும் போது, புறங்கையில் ஒரு கோடு தெரியும். அந்தக் கோடு முடியும் இடத்தில், ஆள்காட்டி விரல் எலும்பின் கடைசியில் எல்.ஐ.4 என்ற புள்ளி உள்ளது. மேற்கூறிய அனைத்துத் தொந்தரவுகளையும் நீக்க இப்புள்ளி உதவுகிறது. இந்தப் புள்ளியில் 14 முறைகள் அழுத்தம் கொடுத்துத் தளர்த்த வேண்டும். தசையின் மேல் இல்லாமல், எலும்பின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டாம். பாதிப்பு உள்ளவர்களுக்கு, இந்தப் புள்ளியில் அழுத்தும் போது வலி தெரியும். இரு கைகளிலும் அழுத்தம் கொடுக்கலாம்.மாத்திரை இல்லாமல் மலச்சிக்கல் தீருகிறது. அசிடிட்டிக்கு, அன்டாசிட் மருந்து தேவையில்லை. இந்தப் புள்ளியில் அழுத்தம் கொடுக்கும் போது, அதிகமான வாயு வெளியேறுகிறது. மூச்சுப்பிடிப்பு, தசைப்பிடிப்புகளுக்கு, இந்தப் புள்ளி உடனடி நிவாரணம் அளிக்கிறது.

### மலச்சிக்கல்

மலச்சிக்கல் என்பது பல சிக்கல்களை உண்டாக்கும். படத்தில் காட்டப்பட்டுள்ள முகவாயில் உள்ள CV24 என்ற புள்ளி மலச்சிக்கலைத் தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. LI4 என்ற புள்ளியை இரு கைகளிலும் அழுத்தம் கொடுத்த பின்னர் இந்தப் புள்ளியில் 14 முறைகள் அழுத்தம் கொடுத்தால், மலச்சிக்கலை எளிதாகத் தீர்க்கலாம்.

### கழுத்து வலி

கணினியில் வேலை செய்வதால், கழுத்தில் உள்ள தசைகள் இறுக்கமடைந்து வலியை உண்டாக்குகின்றன. எளிய முறையில் இந்த வலியைப் போக்கலாம். கட்டை விரல் தலையைக் குறிக்கும். கட்டை விரலின் அடிப்பகுதி கழுத்தைக் குறிக்கும்.

படத்தில் காட்டப்பட்டுள்ள இந்தப் பகுதியில் உள்ள இருபுள்ளிகளிலும், மற்றொரு கையின் இரு விரல்களினால், 14 முறைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.பின்னர் கட்டை விரலை கடிகாரம் சுற்றும் திசையில், 14 முறையும், எதிர்திசையில், 14 முறையும் சுழற்ற வேண்டும். இரு கைகளிலும் இவ்வாறு செய்யும்போது, கழுத்திலுள்ள தசைகளின் இறுக்கம் வெகுவாகக் குறைகிறது. கழுத்து வலிக்கு உடனடி நிவாரணம் கிடைக்கிறது.

**நாம் வலியுள்ள பகுதியில் அழுத்தம் கொடுக்கும்போது, அந்தப் பகுதியில் உள்ள அக்குப்பிரஷர் புள்ளிகள் தூண்டப்படுகின்றன. அதனால் வலி குறைகிறது. உடலில் உள்ள சில குறிப்பிட்ட புள்ளிகளில் சில முறைகள் அழுத்தம் கொடுத்து தளர்த்துவதால் நோய்கள் தீருகின்றன.**

### உயர் இரத்த அழுத்தம்

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், வாழ்நாள் முழுவதும் மாத்திரை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். அக்குப்பிரஷர் முறையில் கீழ்க்கண்ட புள்ளிகளில் தினமும் அழுத்தம் கொடுக்கும் போது, சிறிது, சிறிதாக மாத்திரையின் அளவைக் குறைத்து, கடைசியில் முழுவதுமாக நிறுத்தவும் முடியும். எமது கையில் சிறு விரலின் நகத்துக்குக் கீழே உட்புறமாக H9 என்ற புள்ளி உள்ளது. இது, இதய மெரிடியனின் காற்றுச் சக்திப் புள்ளி. இந்தப் புள்ளியில் அழுத்தம் கொடுக்கும் போது, காற்றுச் சக்தி அதிகரித்து, ரத்தக் குழாய்கள் விரிவடைந்து, இரத்த அழுத்தம் குறைகிறது.தலை உச்சியில் GV20 என்ற புள்ளி உள்ளது. காதுகளிலிருந்து தலைக்குச் செல்லும் நேர்கோடும், மூக்கிலிருந்து தலைக்குச் செல்லும் நேர்கோடும் சந்திக்கும் இடத்தில் இந்தப் புள்ளி உள்ளது. இந்தப் புள்ளியில் 14 முறைகள் அழுத்தம் கொடுக்கும் போது, பதற்றம், மன அழுத்தம் என்பவை குறைவதால், இரத்த அழுத்தம் சீராகிறது. H9, GV20 ஆகிய புள்ளிகளில், 14 முறைகள் காலையிலும், மாலையிலும் இரு வேளைகள் அழுத்தம் கொடுத்து வந்தால், உயர் இரத்த அழுத்தம் சீரடைகிறது. இதைத் தவிர காலில், பெருவிரல், இரண்டாவது விரல் இவற்றின் இடைவெளியிலிருந்து, மூன்று விரல் தூரத்தில் LIV3 என்ற புள்ளி உள்ளது. இந்தப் புள்ளியில் 7 முறைகள் அழுத்தம் கொடுக்கும் போது, இரத்த அழுத்தம் சீராகிறது. இந்தப் புள்ளியில் ஒரு நாளில் 7 முறைகள் மட்டுமே அழுத்தம் கொடுக்க வேண்டும். அதிக முறைகள் அழுத்தம் கொடுத்தால், இரத்த அழுத்தம் அதிகளவில் குறைய வாய்ப்புள்ளது.





## வவுனியாவில் நடைபெற்ற ‘கறுப்பு வெள்ளை படம்’ கவிதை நூல் வெளியீடு

வவுனியா கோவில்குளம் இந்துக் கல்லூரிச் சமூகத்தின் அனுசரணையில் மன்னார் பெரியமடு மகா வித்தியாலய ஆசிரியர் ஜெயச்சந்திரன் அபிராம் ஆக்கிய ‘கறுப்பு வெள்ளை படம்’ என்ற கவிதை நூல் கடந்த சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆசிரியர் திருமதி கங்கைவேணி தலைமையில் கோவில்குளம் இந்துக் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கோவில்குளம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.சிவஞானம், சிறப்பு அதிதிகளாக எழுத்தாளர் கே.கே.அருந்தவராஜா, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன், வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதா வும், கோவில்குளம் இளைஞர் கழகத்தின் நிறுவுநருமான க.சந்திரகுலசிங்கம்(மோகன்), வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன், மன்னார் பெரியமடு மகா வித்தியாலய அதிபர் து.குலதீபன், கலைஞர்கள், நண்பர்கள், கோவில்குளம் இளைஞர் கழக உறுப்பினர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நிகழ்வுக்கான ஆசியுரையை எழுத்தாளர் கே.கே.அருந்தவராஜாவும், வெளியீட்டு உரையை வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின்சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபனும், நூல் அறிமுகத்தை கவிதாஜினி சுகந்தினியும் நிகழ்த்தினர். நூலின் முதல் பிரதியை இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.சிவஞானத்திடமிருந்து கோவில்குளம் இளைஞர் கழகத்தின் ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம் பெற்றுக்கொண்டார். நூலுக்கான நயப்புரையை சு. ஜெயச்சந்திரன் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

(வ-402)